சுவடி : 39
ஏடு : 7
சனவரி 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**இரா. பச்சமலை**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**வாலாசா வல்லவன்**
முனைவர்
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை – 53.
தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# ஆகமம் சொல்லுகிறபடிதான், அர்ச்சகரை நியமிக்கலாம் என்கிறது உச்சநீதிமன்றம்! ஏன்? ஏன்? ஏன்?



"இந்துவாகப் பிறந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக ஆவதற்கு உரிமை வேண்டும். அதை அடைவதற்குப் போராட்டம் நடத்துவோம்" என, 16-10-1969 அன்று, திராவிடர் கழக மத்திய நிருவாகக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றினார், தந்தை பெரியார்.

அப்போது உள்நோயாளியாக திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்த நானும் அக்கூட்டத்தில் பங்கேற்றேன். அந்தப் போராட்டம் ஏன் என்பதை விளக்கி ஒரு கட்டுரை எழுதித் தரும்படி, தோழர் ச.சோமு மூலம் பெரியார் என்னிடம் தெரிவித்தார். அதன் பேரில் நான் 27-10-1969இல் எழுதித் தந்த கட்டுரை, 4-11-1969, 5-11-1969, 6-11-1969 நாள்களில் "விடுதலை"யில் வெளி வந்தது. "அர்ச்சகர் ஆகும் உரிமை எல்லோருக்கும் ஏன்?" என்பது பற்றிய முதலாவது கட்டுரை அதுதான். எனக்கு அப்போது இருந்த புரிதலை வைத்துப் பின்வருமாறு எழுதினேன்.

அர்ச்சகர் ஆவதற்கான ஆகமப் பயிற்சி, அரசினால் எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டும். அரசுப் பணிக்குத் (Public Services) தேர்வு செய்வதற்கு உரிய தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அரசு வேலைக்கு அமர்த்தப்படுவது போல், அர்ச்சகர் அமர்த்தத்துக்கான தேர்வில் வெற்றி பெற்றவர்கள் எந்த இந்து உள்சாதிக்காரர் ஆனாலும் அமர்த்தப்பட வேண்டும் என்பது மட்டுமே அக்கட்டுரையில் நான் எழுதிய செய்தி.

தி.மு.க. அரசு, நல்ல எண்ணத்துடன், 1971இல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் செய்தது. தி.மு.க. அரசும், அ.தி.மு.க. அரசும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை அமைத்தன; பயிற்சி அளித்தன.

ஆனால், அந்தச் சட்டம் செல்லாது என ஏற்கெனவே ஒரு தீர்ப்பு சொல்லப்பட்டது.

அந்தத் தீர்ப்பின் வெளிச்சத்தில், தக்க ஆய்வு செய்வதற்கு நீதிபதி மகராஜன் தலைமையில் ஒரு குழுவைத் தமிழக அரசு அமைத்தது. அக்குழு விரிவான அறிக்கை ஒன்றை அளித்தது.

அது குறிப்பிட்ட முதன்மையான செய்தி என்ன?

"அர்ச்சகர் பயிற்சி பெற்றிருந்தாலும், கடவுள் சிலை உள்ள கருவறையில் (கர்ப்ப கிருகம்) அவர் நுழையவோ, சிலையைத் தொடவோ, பூசை செய்யவோ - காலங்காலமாக வழக்கப்படிச் செய்கிற சாதிக்காரர் மட்டுமே செய்ய முடியும். அர்ச்சனை சம்பந்தப்பட்ட மற்ற சில்லறைப் பணிகளை அல்லது துணைப் பணிகளைப் பயிற்சி பெற்ற எல்லாச் சாதிக்காரர்களும் செய்யலாம்" என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.

அக்கருத்தை தி.மு.க. அரசோ, அ.தி.மு.க. அரசோ, திராவிடர் கழகமோ, மற்ற மற்ற பெரியார் இயக்கங் களோ சரிவரப் புரிந்து கொள்ள முயற்சிக்கவே இல்லை.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, "அர்ச்சகர் சட்டம் செல்லாது" என, 1996லேயே தெளிவானக் கருத்தை அறிவித்தது; ஒரு சிறு நூலையும் வெளியிட்டது. ஏன் அப்படி மா.பெ.பொ.க. முடிவெடுத்தது?

இந்துச் சட்டம், இந்துச் சட்ட மூல நூல்கள் (Source Books), இந்திய அரசமைப்புச் சட்டம் இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொண்டதால்தான், மா.பெ.பொ.க. 1996இல் அப்படி முடிவெடுத்தது.

என்ன அந்தப் புரிதல்?

மேதை அம்பேத்கர் தலைமையிலான குழுவால் உருவாக்கப்பட்ட, இந்திய அரசமைப்புச் சட்ட வரைவு, 1948 பிப்ரவரியில்தான் அரசமைப்பு அவையில் வைக்கப்பட்டது.

**ஆனால், அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது வரைவு (First Draft) 1947 அக்டோபருக்குள் வேறு ஒரு குழுவால் எழுதப்பட்டு, அச்சிடப்பட்டு, 18.10.1947இல் மேதை அம்பேத்கரிடம் தரப்பட்டது.**

**அதை அடிப்படையாகக் கொண்டுதான், 1080 நாள்கள் விவாதித்து, 26-11-1949இல் அரசமைப்புச் சட்ட இறுதி வரைவு நிறைவேற்றப்பட்டது.**

அது,

1. மானிட உரிமைகளைப் பறிப்பது;
2. பிறவி நால்வருண சாதிப் பாகுபாட்டைக் காப்பாற்றுவது;
3. பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம், பிராந்தியச் சட்டம் இவற்றைக் கெட்டியாகக் காப்பாற்றுவது.

இது உண்மை; மாபெரும் உண்மை.

எப்படி?

அரசமைப்புச் சட்ட விதிகள் :

விதி 13(3) (b);

விதிகள் 25, 26

விதி 16(5)

விதி 372 (3) (b) - விளக்கம்-I

விதி 395

என்பவை, மேலே சொல்லப்பட்ட எல்லாப் பழைய பிறவி வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் கெட்டியாகக் காப்பாற்றுகின்றன.

ஒரு குடிமகனின் அடிப்படை உரிமை, தீண்டாமை ஒழிப்பு, பகுத்தறிவுப் பரப்புரை உரிமை பற்றிய விதிகள்,

14
17
51-A (h)

என்பவை கோவணம் போன்றவை.

கோவணம் மலத்தைத் தாங்குமா? தாங்காது. மலத்தைக் கழித்தால் தான் உடல்நலம் கிடைக்கும். அதாவது, முன்னர் சொல்லப்பட்ட எல்லா விதிகளும் அடியோடு நீக்கப்பட்டால்தான், பெரியார் கொள்கை வெற்றி பெறும்.

விதி 395 என்பது அரசமைப்புச் சட்டத்தின் கடைசி விதி. அது மிகக் கேடானது. ஏன்? அது கூறுவதாவது:

விதி 395 - நீக்கப்பட்டவை :

“இவ்விதியின் மூலம் 1947ஆம் ஆண்டைய இந்தியச் சுதந்தரச் சட்டம், 1935ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் மற்றும் 1935ஆம் ஆண்டைய சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள், சேர்க்கைகள் முதலானவை நீக்கப்பட்டன. இனி இவை செல்லுபடியாகமாட்டா. **ஆனால் 1949ஆம் ஆண்டைய பிரிவி கவுன்சில் செலாவாணி நீக்கச் சட்டம் இதனால் நீக்கப்படவில்லை.**

அது என்ன பிரிவி கவுன்சில்?

PRIVY COUNCIL - என்பது, பிரிட்டிஷ் பேரரசின் கீழ், பிரபுக்களை நீதிபதிகளாகக் கொண்ட மிக உச்ச அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஆகும்.

அந்த நீதிமன்றம் இந்துச் சட்டம் பற்றி என்ன கூறியது?

“எழுதப்பட்ட சட்டத்தைக் காட்டிலும் பழக்கவழக்கச் சட்டம் வலிமையானது” (Customary Law outweighs the written text of the Law) - 1860.

வெள்ளையர் காலத்து இந்தச் சட்டத்தின்படிதான் - காலங்காலமாகக் கோவில் கருவறையில் நுழைந்து சிலையைத் தொட்டுக் குளிப்பாட்டி, உடை மாற்றிச் சிலைக்குப் பூசை செய்கிற அந்த ஒரு செயலை - சிவாச்சாரி வகுப்பில் பிறந்தவன் மட்டுமே - அல்லது பார்ப்பனனாகப் பிறந்தவன் மட்டுமே செய்ய முடியும்.

இதுவும் 16-12-2015இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு ஒரு காரணம்.

16-12-15இல் தீர்ப்புச் சொன்ன இரண்டு பேர் கொண்ட அமர்வின் நீதிபதிகள் ரஞ்சன் கோகோய் (RANJAN GOGOI), என்.வி.ரமணா (N.V. RAMANA) ஆகியோர் சொன்ன முடிவுதான் என்ன?

இரு நீதிபதிகளைக் கொண்ட அமர்வுக்கான தீர்ப்பை ரஞ்சன் கோகோய்தான் எழுதினார்.

அத்தீர்ப்பு 54 பக்கங்களையும், 44 பத்திகளையும் (Para)-கொண்டது (A4 அளவில்).

அதில் பக்கம் 27 முதல் 32 வரை இந்து மதத்தின் தன்மை பற்றி எந்தெந்த இந்துமத அறிஞர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பது பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

1. அர்ச்சகர் சட்டம் பற்றி, தீர்ப்பின் 44 ஆம் பக்கம், 45ஆம் பக்கங்களில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

“அரசமைப்பு விதிகள் 25, 26 இவற்றில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள், அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள அதிகார எல்லையை மீறாமல் இருக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (Circumscribed). பல சமயங்களில், மதநம்பிக்கை, மதத்தைப் பின்பற்றுவது இவற்றில் ஒரு

பிரிவு (a group) அல்லது வகுப்புக்கு (denomination) என்ன உரிமை உண்டு என்பது பற்றி நீதித்துறை கருத்துச் சொல்ல நேரிடுகிறது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்ப்பின் 46ஆம் பக்கத்தில், விதி 37இல், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''கீழே தரப்பட்டுள்ள அரசமைப்பு விதி 16(5) என்பதை இன்றுவரையில் எவரும் கருத்தில் கொள்ளவில்லை. ஆதலால் அவ்விதி என்ன சொல்லுகிறது என்பதை இப்போது, கீழே காண்போம்.

Article 16(5) & which has virtually gone unnoticed till date and, therefore, may now be seen is in the following terms:"

விதி 65-''எந்த ஒரு மதத்தின் அல்லது வகுப்பிற்கான நிறுவனத்தின் பொறுப்பை வகிக்கக் கூடியவர் அல்லது அதன் ஆட்சிக்குழுவில் அங்கம் வகிக்கக் கூடியவர் அந்த ஒரு மதத்தை நம்புகிறவராக இருக்கவேண்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருக்கவேண்டும் எனக்கூறும் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதை, இந்த விதியிலுள்ள எதுவும் **பாதிக்காது''.**

பத்தி 38 மேலே சொல்லப்பட்டுள்ள ஏற்பாடு (Provision) அதாவது விதி 16(5) என்பது, அரசமைப்புச் சட்ட அவையின் விவாதங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதால், இந்த அமர்வில் அமர்ந்துள்ள எங்களுக்கு தெரியும் தெளிவான பொருள்-மேலே சொல்லப்பட்டுள்ள விதியில் கண்டபடி, ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களை அர்ச்சர்களாக அமர்த்தம் செய்வதைப் பாதுகாக்கிறது. அந்த நிறுவனத்துக்கு உரிய ஆகம விதியின்படிதான் அந்த அமர்ந்த்தம் செய்யப்படவேண்டும்.

2. அத்தீர்ப்பில், பக்கம் 52 இல், பத்தி 43இல் சொல்லப்பட்டுள்ளது பின்வருமாறு உள்ளது.

பத்தி 43, ''மேலே காணப்பட்டவற்றிலிருந்து நாம் காணும் இறுதி முடிவு என்ன? இதற்கு உரிய சரியான ஒரு முடிவைக்கூறுவது இயலாததாக இருக்கிறது.

செல்லத்தக்கது அல்ல எனச் சொல்லப்பட்ட அரசு ஆணையினைச் செயல்படுத்துவது என்பதில், குறிப்பிட்ட கோவில் அர்ச்சகர் அமர்த்தம் ஒவ்வொன்றும் எந்த விதிகளின் கீழ் அல்லது எந்த உண்மைகளின் படியே நடைபெற வேண்டும் என்பதே இந்த அமர்வின் தீர்க்கமான கருத்தாகும்''.

(43. What then is the eventual result? The answer defies a strait forward resolution and it is the considered view of the court that the validity or otherwise of the impunged G.O. would depend on the facts of each case of appointment...)

இத்தீர்ப்பின் கடைசியான பத்தி 44இல் குறிப்பிட்டப்பட்டுள்ள இறுதி முடிவு, என்ன சொல்லுகிறது?

பத்தி 44 ''மேலே முன்னர் சொல்லப்பட்ட விவாதக் கருத்துக்களை இந்த அமர்வு கவனத்தில் எடுத்துக் கொண்டு எங்களின் முடிவாக, இந்த மன்றத்தில் இது பற்றிப் பதிவு செய்யப்பட்ட எல்லா ரிட் விண்ணப்பங்களையும் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். சேஷம்மாள் வழக்கில் சொல்லப்பட்ட இந்த நீதிமன்றத்தின் முடிவுகளை மீண்டும் உறுதி செய்கிறோம் (Reiterate). அர்ச்சர்கள் அமர்த்தம் என்பது ஆகமங்களில் சொல்லப்பட்டபடிதான் செய்யப்பட வேண்டும் (will have to be made). உரிய ஆகமம் எது என்பதைச் சரியாக அடையாளம் கண்டும், அரசமைப்புச் சட்டக் கட்டளைகளோடு பொருந்தும் வகையிலும், மேலே நாம் சொல்லியுள்ள கொள்கைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் அர்ச்சர்கள் அமர்த்தம் செய்யப்படவேண்டும்.''

அதாவது, ஆகமங்கள் சொல்லுகிறபடிதான் அர்ச்சகர்களை நியமிக்கலாம் என்கிறது உச்சநீதிமன்றம்.

இப்போது, ஆகோ, ஓகோ என்று தந்தை பெரியார் தொண்டர்களோ, திராவிட இயக்கத்தின் முதுபெருந்தலைவர்களோ கூக்குரல் இடுவது எதற்குப் பயன்படும்?

நாம் - திராவிடர் இயக்கத்தார் எதில் நிபுணர்கள்?

டாக்டர் அம்பேத்கர் போல் - எந்தச் சூத்திரத் தலைவர், எந்த ஆதி சூத்திரத் தலைவர்-'இந்துச் சட்டம் பெற்றுள்ள எல்லாப் பழைய சட்டங்களும் செல்லாது என்றும் இந்துச் சட்டம் அடியோடு திருத்தப்பட வேண்டும் என்றும்' - அவர் 1947இலேயே முன்மொழிந்ததை அறிந்திருக்கிறார்கள்? இதை நாம் அறியாதது மிகமிக வெட்கக்கேடானது.

குட்டி போட்ட பூனை போல - தமிழ்நாட்டுக்குள்ளேயே - தமிழர்களின் தலையைத் தடவிக் கொண்டிருக்கும் - திராவிட வாக்குவேட்டைக் கட்சிகளின் மற்றும் அனைத்திந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - 1957க்குப் பிறகாவது - என்றாவது ஒருநாள், மேலே சொல்லப்பட்ட விதிகள் 13 உள்ளிட்ட 395 வரையிலான விதிகளை அடியோடு இந்திய அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்று, ஒரு சட்ட வரைவை முன்மொழிந்தார்களா? வாய்மொழியாகவேனும் நாடாளுமன்றத்தில் பேசினார்களா?

ஏன் பேசவில்லை? எப்போது பேசுவார்கள்?

இனி, 2016-லாவது பேசுவார்களா?

**அருள்கூர்ந்து கூச்சநாச்சம் இல்லாமல் எல்லோரும் இவைபற்றிச் சிந்தியுங்கள்!**

**790 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒரு 10 விழுக்காடு பேருக்குக்கூட அரசமைப்புச் சட்டம் பற்றி ஒன்றும் தெரியாது. இது உண்மை!**

**நாம் ஒவ்வொருவரும் இவற்றை நன்கு உணருவோம்! மண்டையை உடைத்துக் கொண்டு இவை பற்றிப் படிப்போம்!**

**பெரியாரின் கொள்கைகளை - அம்பேத்கரின் கொள்கைகளை முற்றாக வென்றெடுப்போம் வாருங்கள்!**

**01-01-2016** **- வே. ஆனைமுத்து**

# இராஜீவ் காந்தி கொலைக்காகக் குற்றஞ்சாற்றப் பெற்றவர்கள், சிறையிலேயே சாகவேண்டுமா?




இராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலனாய்வு செய்தவர்கள்-மய்ய அரசுப் புலனாய்வுத் துறையினர்-CBI. கொலைக்குற்ற வழக்கை நடத்தியது மய்யஅரசு.

அதன் காரணமாகவே, அரசமைப்புச் சட்டவிதி 161இன்படி, 14 ஆண்டுகளுக்கு மேல், ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களை விடுதலை செய்வதற்கான அதிகாரம் படைத்த மாநில அரசு-தமிழக அரசு, 24 ஆண்டுகளாகச் சிறைப்பட்டுள்ள 7 பேர்களையும் விடுதலை செய்யமுடியாது என்பது எப்படி ஞாயமும் நீதியும் ஆகும்?

“ஆயுள் தண்டனை என்றால் வாழ்நாள் முழுவதும் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதுதான் பொருள்” என்று, 2.12.2015 அன்று அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சட்ட அமர்வு நீதிபதிகள் கூறியுள்ளனர். உச்ச நீதிமன்றம் கருத்தறிவித்தது. குற்ற வியல் தண்டனைச் சட்டத்தின் எந்தப்பிரிவிலாவது (Section) “ஆயுள் தண்டனை” என்பதற்கு “விளக்கம்” (Definition) இருக்கிறதா? ஏன் இல்லை?

இந்தியா ஒரு காட்டுவிலங்காண்டிகள் நாடு. இந்தியர்கள் கல்வி, கற்காத மூடர்களாக 2000 ஆண்டுகள் வைக்கப்பட்டனர்.

**விடுதலை அல்லது சுதந்தரம் என்பதன் அருமையும் பெருமையும் பற்றித் தெரிந்துகொள்ள முடியாத கல்வியையே இன்றும் படிப்பவர்கள்.**

எனவே உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள் என்பவை தேவாலயங்கள்-நீதிபதிகள் தெய்வ அம்சங்களாக விளங்குகிறவர்கள் என்று மடத்தனமாக நம்புகிறார்கள்.

1. சிறைக்கூடங்கள் என்பவை, ஏதோ காரணங்களால் குற்றஞ்செய்து தண்டனை பெற்றுச் சிறையிலுள்ளவர்கள். அவர்களைத் திருத்துவதுதான், சிறைப்படுத்துவதன் ஒரே நோக்கம். அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்கி விரைவில் விடுதலை செய்வதுதான், சிறைத்துறையின்-அரசின் கடமை.
2. “ஆயுள் தண்டனை” என்பது “வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தல்” என்பது மனித மாண்புக்கு எதிரானது. சிறையில் ஒரு மனித உயிரைச் சாக விடுவதற்கு அரசுக்கு ஏது உரிமை?

இது எப்படி சுதந்தர நாடு?

நளினி முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர், இராஜீவ் கொலைக்குற்றஞ்சாற்றப் பெற்று 24 ஆண்டுகளாகச் சிறையில் வாடுகிறார்கள்.

இவர்களில் ஒவ்வொருவரும் 24 ஆண்டுகளில் நல்ல கல்வி கற்றுக்கொண்டார்கள்; பலரைக் கல்வி கற்றவர்களாக உருவாக்கினார்கள்; பாராட்டத்தக்க ஒழுக்க சீலர்களாக வளர்ந்துள்ளனர்.

வழக்கைப் புலனாய்வு செய்தது எந்தத் துறையாக இருந்தால், நமக்கென்ன? அப்படிப்பட்ட வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை இந்திய அரசுதான் விடுதலை செய்யமுடியும் என்றால், அப்படி எந்தக் குற்றவியல் பிரிவில் எழுதி இருக்கிறது?

எனவே, இந்திய அளவிலான அனைத்திந்தியக் கட்சியினரும், தமிழகக் கட்சியினரும் நாடாளுமன்றத்தில் இதுபற்றி விவாதத்தைக் கிளப்பவேண்டும்.

நாம்-தமிழகத் தமிழ் மக்கள் ஊர்தோறும் இக்குற்றஞ்சாற்றப்பெற்ற ஏழு பேரையும் விடுதலை செய்யக்கோரி ஊர்வலம். பொதுக்கூட்டம் நடத்திட வேண்டும். இது நம் கடமை.

**- வே.ஆனைமுத்து**

## மதம், சாதி, மதிப்பு பாராட்டாமல் - மக்களைக் காத்த “மனிதம்” காவலர்கள்!
## மக்கள் நலன் காக்கத் தவறிய மாண்பற்ற - மக்கள் எதிரிகள் - முதலாளித்துவ அடிமைகள்!

# சென்னையைப் பாழடித்த வெள்ளம் ஏன்?

- வே. ஆனைமுத்து

மனிதக் கூட்டம் மட்டுமே நல்லது எது, தீயது எது என்பதை அறியும் வல்லமை உடையது. மனிதக் கூட்டமே ஒன்றுசேர்ந்து ஓரிடத்தில் ஒரு சமுதாயமாக வாழக்கூடியது. மனிதன் ம ட்டுமே - ஒன்றை ஆக்கும் திறன் படைத்தவன். ஆக்கும் திறனை, மனிதக் கூட்டத்தின் நன்மைக்காக மட்டுமே அவன் பயன்படுத்த வேண்டும்; மனிதக் கூட்டத்தை அழிக்க, ஆக்கும் திறனை அவன் பயன்படுத்தக் கூடாது.

இந்த உண்மையை ஏற்க மறுப்பவன் மத நம்பிக்கையாளனாக - பழமை காப்பவனாக - சிலரின் நலனுக்காகப் பலரை - ஒரு சமதாயத்தை - ஒரு நாட்டை அழிக்க வல்லமை படைத்த கொள்கையை - ஆட்சியைக் கருவியாகக் கொண்டே அதைச் செய்கிறான்; பலரைச் சேர்த்துக் கொண்டும் செய்கிறான்.

எவ்வளவு அறிவு வல்லமை பெற்றவனும் மண்ணை, தீயை, நீரை, காற்றை, வானத்தை உண்டாக்க முடியாது.

இந்த ஒவ்வொன்றும், இயற்கையாக, 500 கோடி ஆண்டுகளில் உருவானது.

“நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”

என்பது தொல்காப்பியம்.

இந்த அய்ந்தில் எந்த ஒன்றையும் சிறிது அளவில் மட்டுமே மனிதன் உருவாக்க முடியும். இந்த அய்ந்தும் எவனாலும், எதனாலும் நாம் காணும் மாப்பெரிய அளவில் உண்டாக்கப்பட முடியாது.

ஆனால் இந்த ஒவ்வொன்றையும் கொஞ்சங்கொஞ்சமாகவோ, கொஞ்சக் காலத்திலோ அழித்துவிட முடியும்.

அந்த, மானிடத்துக்கு எதிரான வேலையைத்தான் - மெத்தப் படித்த அறிவியல்காரர்களும், கற்பனையான கொள்கைக் காவலர்களாக விளங்கும் மதவாதிகளும், இயற்கையை வளைத்துப் போட்டுப் பாழாக்கியும் சிதைத்தும் முதலாளித்துவத்தை வளர்க்கும் விலங்கு மனம் கொண்டவர்களையும் ஆன சிறு சிறு கூட்டங்களைக் காத்திட எல்லாம் செய்கிறார்கள்.

நிலத்தை, தீயை, நீரை, காற்றை, விசும்பை - மாசுபடுத்துவதை அதனதன் இயல்புக்கு மாறாகப் பயன்படுத்துவதை மிக மிக எளிதாக - மிக விரைவாக மனிதன் செய்கிறான். தொழில் வளர்ச்சி - வேளாண் வளர்ச்சி - அறிவியல் வளர்ச்சி - மக்கள் நலன் என்கிற பேரால், இவற்றைச் செய்கிறான். அப்படிச் செய்வதைக் கட்டு மீறியும் வரம்பை மீறியும் மனிதன் செய்கிறான்.

**இயற்கையை - இயற்கையில் உண்டான ஒவ்வொன்றையும் ஒட்டுமொத்த மானிடத்தின் நலனுக்கு என்று பயன்படுத்தாமல் - மிகச் சிலரின் நலனுக்காகவே இவற்றைப் பயன்படுத்துகிறான்.**



இதனால் விளையப்போகும் பேரழிவை அண்மைக் காலமாக உலக நலன் நாடும் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மண்ணும் காற்றும் நீரும் வானும் இயல்பான அளவுக்குமேல் வெப்பமாக ஆக்கப்பட்டுவிட்டன - அதனால் உலக மானிடம் அழியும் என எச்சரிக்கிறார்கள்.

98.4 பாகைக்கு மேல் வெப்பம் உள்ள மனித உடம்பு நோய்க்கு ஆளாகிவிட்டது என்று நாம் கூறுகிறோம். 103 பாகை வெப்பத்துக்கு உடல் ஆளானால் மனிதன் செத்துப் போவான்.

மண்ணும் காற்றும் நீரும் வானமும் வெப்பம் அதிகமாக, அதிகமாக அந்த ஒவ்வொன்றும் சீறி எழும்; மக்களை அழிக்கும்.

“The Hottest September after 1880 A.D.”

“2015 செப்டம்பர் வெப்பக் கொடுமை - கி.பி.1880க்குப் பிறகு நேரிட்டுவிட்டது” என்று அண்மையில், ஏடுதோறும், நாள்தோறும், எச்சரிக்கை விடுத்தார்கள். சென்னை மாநகரிலும் தமிழகத்திலும் வாழும் முறையே ஒரு கோடிப் பேரும், 7.5 கோடிப் பேரும் 2015 செப்டம்பரில் வெப்பத்தால் வறுத்தெடுக்கப்பட்டோம்.

**ஆட்சியாளர்கள், அதிகார வகுப்புக் கூட்டத்தார், கற்றறிந்த மேதைகள், குடிசையில் வாழ்வோர், மாடக்கூடங்களில் வாழ்வோர், வண்டி ஓட்டிகள், பேருந்து - மகிழுந்து ஓட்டுநர், வேளாண் மக்கள், தொழிலாளர் வகுப்பினர் என, எல்லோரும் வறுத்தெடுக்கப்பட்டோம்-இந்த 2015 செப்டம்பரில்!**

**எவரேனும் ஒருகணமேனும் இதுபற்றி எண்ணினோமா? பேசினோமா? எச்சரித்தோமா?**

யாருக்கோ சொல்லப்பட்ட அறிவுரை என்று மெத்தனமாக இருந்தோம்.

ஏன்? ஏன்? ஏன்?

எல்லோரும் கடமை தவறிய மாக்களாக - இரண்டு காலுள்ள பேசத் தெரிந்த விலங்குகளாக மாறிவிட்டோமே!

இன்று 7.5 கோடி தமிழ் மக்களும் அழுகிறோம்.

கி.பி.2025இல் இந்திய மக்கள் குடிநீருக்குத் தத்தளிப்பார்கள் - 640 மாவட்டங்களில் முதலில் பெரம்பலூர் மாவட்டம், அடுத்து நாமக்கல் மாவட்டம், மூன்றாவது அரியலூர் மாவட்டம் எனப் பட்டியலிட்டு, மூன்றாண்டுகளுக்கு முன்னர் உலக அறிவியல் அறிஞர்கள், அறிவித்தார்கள். யாரேனும் கவலைப்பட்டோமா?

இன்றைய ஆளுங்கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ இதை அறிந்தார்களா? ஊருக்குச் சொன்னார்களா? ஏன் அப்படி நேரும் என்று, ஒன்றுகூடி இவர்கள் ஆய்வு செய்தார்களா? இல்லையே!

**1980இல் சென்னை மாநகரில் 600 நீர் நிலைகள் - ஏரிகள், குளங்கள், குட்டைகள் இருந்தன. இன்று 2015 இல் 27 மட்டுமே உள்ளன. மற்றவை என்ன ஆயின?**

இவை, தொழிற்சாலைகளாக - ஊர்ச்சாலைகளாக - அடுக்குமாடிக் குடியிருப்புகளாக - கல்லூரிகளாக - அரசு மற்றும் தனியார் பல்கலைக் கட்டடங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

முதலாவது திராவிடக் கட்சி ஆட்சி, 17-12-1920 முதல் 1937 சூலை வரை சென்னை மாகாணத்தில் நடந்தது.

அது பொற்கால ஆட்சி!

நாம் எல்லோரும் பார்க்க, 13-4-1954 முதல் 5-3-1967 வரையில் காங்கிரசு ஆட்சி - காமராசர் ஆட்சி, பெரியாரின் முட்டுத்தாங்கலோடு - சென்னை மாகாணத்திலும், தமிழகத்திலும் நடந்தது.

அது வடவருக்குத் தமிழ்நாட்டை அடகுவைத்த ஆட்சி!

6-3-1967 முதல் 31-12-2015 வரை 49 ஆண்டுகளாக, இரண்டு திராவிடக் கட்சிகள் தமிழகத்தை ஆண்டன; ஆளுகின்றன. இவை தமிழகத்தைக் கொள்ளை கொண்ட ஆட்சிகள்! இது உண்மையா? ஆம்!

தமிழகத்தின் நீர் நிலைகளை - 39,000 ஏரிகளை, 2 இலட்சம் ஊர்க் குளங்களை, அதிகார வகுப்பினரைத் தரகர்களாகவும், கட்சிகளின் தலைவர்களை அடியாள்களாகவும் வைத்துக் கொண்டு - கவிஞர்களையும், ஏடுகளில் எழுதத் தெரிந்தவர்களையும் புகழ்பாடிகளாக வைத்துக் கொண்டு - கூட்டாளிக் கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு, இவற்றைப் பாழ்படுத்திய தமிழகத்தைக் கொள்ளை அடித்த ஆட்சிகள் இவை.

அதன் பயன் தான் :

1. 26-10-2015 முதல் 10-12-2015 வரையில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி முதலான கடலோர மாவட்டங்களில் பெய்த கனமழையால், 10-12-2015 வரை 350 ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் சாகக் கொடுத்தோம். இது இன்றைய அரசு தரும் பொய்க் கணக்கு.
2. வானிலை ஆய்வாளர் இரமணன் மற்றும் வானிலை அதிகாரிகள் - மணிதோறும் மழை, கனமழை, தூரல் வரும் என, முன்அறிவிப்புச் செய்தார்கள். அதை மதித்து, எச்சரிக்கை ஆனோமா?



*சென்னை, கோட்டூர்புரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இந்துக் கோயிலைத் துப்புரவு செய்யும் இசுலாமிய இளைஞர்கள்*

3. பொறிஞர் பாலசுப்பிரமணியம் (68) போன்ற பொறுப்புள்ள சமூகவியல் - நீரியல் அறிஞர்கள் சென்னை நீர் நிலைகளின் நீர் மேலாண்மை பற்றி இடைவிடாமல் தமிழக முதல மைச்சருக்கும், உயர் அதிகாரிகளுக்கும் கடிதம் மேல் கடிதம் எழுதினார்கள்.

ஆனால், கேளாக் காதினராகவும், பாராக் குருடர்களாகவும் இன்றையத் தமிழக முதல்வரும், அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் முடங்கிக் கிடந்தார்கள்.

1977 முதல் 1979, 1980 முதல் 1987 வரை ஆட்சி செய்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., 1991க்குப் பிறகு 5 முறை முதலமைச்சராக வந்த செல்வி. செயலலிதா இருவரும் - மக்களுக்குத் தொலைக்காட்சியில்தான் காட்சி அளித்தார்கள்.

அவர்கள் அவ்வளவு மிக உயர்ந்தவர்கள்! மக்கள் அவ்வளவு மிக மட்டமானவர்கள்.

இப்படிப்பட்ட திராவிடக் கட்சி ஆட்சியாளர்கள் 2015 நவம்பர்-திசம்பரில் சென்னை, சென்னைப் புறநகரில் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளப் பாழுக்குக் காரணர்கள் ஆவார்கள் என்பதில் அய்யம் இல்லை.

1. சென்னைக்குக் குடிநீர் தரும் 4 பெரிய ஏரிகளையும் முழுக் கொள்ளளவுக்கும் நீர் பிடிக்கும் அளவில், எப்போது இவர்கள் தூர் வாரினார்கள்? அவற்றுக்கான வரத்து வாய்க்கால்கள், போக்கு வாய்க்கால்களை எப்போது இவர்கள் தூரெடுத்தார்கள்? அவற்றில் நடந்த தனியார் மற்றும் அரசு ஆக்கிரமிப்புகளை ஏன் இவர்கள் அகற்றவில்லை?
2. செம்பரம்பாக்கம் ஏரி 18 அடி உயரம் நீரையே சேமிக்க முடியும். இன்று அதன் கொள்ளவு அவ்வளவுதான்! அது 24 அடி உயரம் நீர் பிடிக்கும் வரையில், பொதுப்பணித் துறை முதலமைச்சரும், அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் அதிகாரிகளும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? திசம்பர் 1, 2, 3, 4 நான்கு நாள்களிலும் - தொடர்ந்து செம்பரம்பாக்கம் ஏரி நீரும், மற்ற ஏரிகளின் நீரும் ஒரு இலட்சம் கன அடிக்கு மேல் திறந்துவிடப் பட்டதால்,

பள்ளிக்கரணையில் 10 அடி உயர நீர், ஈக்காட்டுத்தாங்கலில் 9 அடி உயர நீர், சைதாப்பேட்டையில் 6 அடி உயர நீர், தாம்பரத்தில் (என் வீட்டுக்குப் பின்புறம் உள்ள) முடிச்சூர் முழுவதிலும் தெருக்களில் 5 அடி உயர நீர்; வேளச்சேரி, மடிப்பாக்கம், மயிலாப்பூரில் இடுப்பளவு வெள்ளம். இவ்வளவு பெரிய வெள்ளப்பாழ் ஏன் நடந்தது? சென்னையில், மழை நீரைப் பிடித்து வைக்க இருந்த 600 நீர் நிலைகளும் பாழடிக்கப்பட்டு, மீதி இருக்கும் 27 ஏரிகளும் முழுக் கொள்ள ளவுக்கு நீரைத் தேக்க முடியாமல் விடப்பட்டதால்தான். மழைநீர் வெளியே ஓட வாய்க்கால்கள் இல்லை. எனவே, வெள்ளப்பாழ்.

3. வழக்கமாக, சென்னையில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் திசம்பர் வரை மொத்தம் 70 செ.மீ. அளவு மழை மட்டுமே பெய்யும்.

ஆனால் 26-10-2015 முதல் 8-12-2015க்குள் மட்டும் சென்னையில் மட்டும் 162 செ.மீ. மழை கொட்டிவிட்டது - வானம் பொத்துக் கொண்டது போல.

இந்த மழை நீர், செம்பரம்பாக்கம் ஏரி நீர், மற்ற மூன்று ஏரிகளின் நீர் இவ்வளவும் அடையாற்றில் ஓடி, திசம்பர் 1 முதல் 4 நாள்களில் 50 ஆயிரம் குடிசைகளை அடித்துச் சென்றது; கீழ்த்தள வீடுகளில் 4 அடி நீர் - சில பகுதிகளில் கீழ்த்தள வீடு மூழ்கி, முதல் தளத்தில் 3, 4 அடி நீர் நின்றது. தாயும் தந்தையும் குழந்தைகளும் குடிக்க நீரின்றி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி 2, 3 நாள்கள் தத்தளித்தனர்.

அப்பப்பா, எவ்வளவு கொடுமைகள், இவை!

இந்தப் பேரிடரைக் கண்ட மனிதப் பற்றுமிக்க வசதிப் படைத்தவர்களும், அந்தந்தப் பகுதி இளைஞர்களும், மாணவ-மாணவிகளும் தொண்டு நிறுவனங்களும், திருமண மண்டப உரிமையாளர்களும், சிறிய - பெரிய வணிகர்களும், எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்களும், இந்து - இஸ்லாம் - கிறித்துவர் எனப்படும் எல்லா மத-சாதிகளைச் சார்ந்தோரும் வெள்ளப் பாழுக்கு ஆளான மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்தது - இன்றும் மனிதம் வாழ்கிறது என்பதற்கு நல்ல அடையாளம்.

அதேபோல் தமிழக மருத்துவத் துறை, காவல் துறை, பேருந்துப் போக்குவரத்துத் துறை, மருத்துவர்களும், அதிகாரிகளும், ஊழியர்களும் இடருக்கு ஆளான மக்களுக்கு உதவினர்,

பல ஆயிரக்கணக்கானோரைப் படகுகள், இரப்பர் வட்டைகள், வானூர்திகள் வழியாக - வெள்ளப் பாழிலிருந்தும், வீட்டு மொட்டை மாடிகளிலிருந்தும் காப்பாற்றிய செயல்களும், வளர்ந்த கருவுற்ற 800 பெண்களைப் பாதுகாப்பாக மீட்டு, மருத்துவம் பெறத் துணைநின்ற செயல்களும், இன்னமும் மனிதம் சாகாது - சாகவில்லை என்பதற்கு அடையாளம்.

இனி, ஒப்பாரி மட்டுமா இடரைக் களையும்? இல்லை.

இந்திய அரசு இப்போது அளித்துள்ள ரூபா 1940 கோடி ரூபா மிகமிகக் குறைவானது. இது இந்தியருக்கு ஏற்பட்ட பேரிடர் என்று கருதிய இந்திய அரசு, மேற்கொண்டு ரூபா 50,000 கோடி (அய்ம்பதாயிரம் கோடி)க்குமேல் திசம்பருக்குள் நிதி அளிக்க வேண்டும்.

தமிழக முதலமைச்சர் இறுதியாகக் கோரியுள்ள 25,000 கோடியாவது கிடைத்திட தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 57 பேரும் முயலவேண்டும்.

தமிழக அரசு இடர்நீக்கத் தொகை என்கிற பேரால் - நிவாரணம் என்கிற பேரால் -

1) அடித்துச் செல்லப்பட்ட குடிசை வீடு ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 30,000 உடனே அளிக்க வேண்டும். இப்போது அறிவித்துள்ள ரூ.10,000 என்பது, 10 ஆள்களுக்கு இரண்டு நாள்கள் கூலி கொடுக்கவே போதாது.

2. தமிழ்நாடு முழுவதிலும் 10.5 இலக்கம் ஏக்கரில் சம்பா நெல் பயிர் பாழாகிவிட்டது. ஒரு ஏக்கருக்கு இழப்பீடு குறைந்தது ரூபா 20,000 தரவேண்டும்.

இப்போது ஒரு எக்டேருக்கு அதாவது 2.5 ஏக்கருக்கு - ரூபா 18,000 நிவாரணம் என்பது எதற்கும் போதாது.

3. இடிந்து போன ஒவ்வொரு ஓட்டு வில்லை வீட்டுக்கும் ரூபா 5 இலக்கம் இடர் நீக்க நிதி வழங்க வேண்டும்.

4. சென்னை, செங்கற்பட்டு, மற்றும் கடலூர் மாவட்டங்களிலும் தரைத்தளம் நீரில் மூழ்கிய ஒவ்வொரு வீட்டுக்கும் ரூபா 15 இலக்கம் வழங்க வேண்டும்.

5. தெருக்களிலிருந்த தேநீர்க்கடை, பெட்டிக்கடைகளை இழந்த ஒவ்வொருவருக்கும் குறைந்தது ரூபா 3 இலக்கம் வழங்க வேண்டும்.

6. ஒரு மாட்டை இழந்தவருக்கு ரூபா 30,000; ஆட்டுக்கு ரூபா 5,000 என நிதி வழங்க வேண்டும்.

7. பள்ளி, கல்லூரி மாணவர்கள் வெள்ளத்தில் இழந்த சான்றிதழ்கள் மற்றும் குடும்பப் பங்கீட்டு அட்டைகள், வங்கிச் சான்றுகள் இவற்றை விரைந்து புதிதாகத் தர ஆவன செய்ய வேண்டும்.

8. தொற்று நோய்கள் - காய்ச்சல், கழிச்சல், காசம் உளை மாந்தம், மூச்சிழுப்பு பரவாமல் தடுக்க ஏற்ற ஏற்பாடுகளை அரசு விரைந்து செய்ய வேண்டும்.

9. அம்பத்தூர் தொழிற்பேட்டை சிறு குறு தொழிற்சாலைகள், சென்னை புதுப்பேட்டை பழைய தளவாடக் கடைகள், சிந்தாதிரிப்பேட்டை, அண்ணாசாலை போன்ற பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்புகள் 30,000 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஆகும். இவர்களுக்கும் தகுந்த நிவாரண நிதி அளித்தல் வேண்டும்.

10. தமிழக அரசுப் பேருந்துகள் 5,000 பாழாகிவிட்டன. இவற்றை விரைவில் ஈடுசெய்ய அரசு திட்டமிட வேண்டும்.

11. பெருந்தொழிலதிபர்கள், மற்ற வெளிமாநில அரசினர், தொழிலாளர் சங்கங்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர், திரைப்படத் துறையினர் எனப் பல தரப்பாரும் - மனித நேயத்தோடு 1 இலட்சம் முதல் 1 கோடி, 2 கோடி, 5 கோடி, 25 கோடி எனத் தமிழக அரசின் நிவாரண நிதிக்கு வாரி வழங்குகிறார்கள். இது மேலும் நீடிக்க வேண்டும்.

**இப்போது, மூன்று மாதங்களில் சொல்லிக் கொண்டு வந்த வெள்ளப் பேரிடரிலிருந்து முற்றாக மீள, இன்னும் 10 ஆண்டுகள் ஆகும்.**

இது அடிபட்ட பின் நம் மக்களுக்குக் கிடைத்த பாடம்; நல்ல பாடம்.

1. உலக மானிடத்துக்கு - குறிப்பாக இந்தியாவுக்கு - அதிலும் குறிப்பாகத் தமிழகத்துக்கு அளவுக்கு மீறிய கரிவளிப் புகையால்-காற்று மாசு படிந்து, ஈரப்பதம் அற்று காற்று மண்டலமும் - இந்துமாக்கடலும், பசுபிக் பெருங்கடலும் அளவுக்கு மீறி வெப்பம் அடைந்துவிட்டன. இமயமலைத் தொடங்கி, தண்டக ஆரணியம், மேற்குத்தொடர்ச்சி மலைக்காடுகள், கிழக்குத்தொடர்ச்சி மலைக்காடுகள் பாழ்படுத்தப்பட்டுவிட்டன. வனவளம் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காக-33 விழுக்காடாக இருக்க வேண் டும். இன்று தமிழக வனவளம் 14 விழுக்காடாக மட்டுமே இருக்கிறது. மனிதக் கூட்டமும் முதலாளிகளும் ஆட்சி யிலிருந்த திருடர்களும் அதிகாரக் கும்பல் தரகர்களும் திட்டமிட்டு இவற்றைப் பாழ்படுத்திவிட்டனர்.
2. வீட்டுக்கு ஒரு மகிழுந்து, குடும்பத்துக்கு ஒன்று, இரண்டு, மூன்று மகிழுந்துகள் என்று - இந்தியா முழுவதிலும் 18 கோடி நாலு சக்கர வாகனங்கள், டீசல், பெட்ரோல் இவற் றைப் பயன்படுத்துகின்றன. இந்தியா முழுவதிலும் சரக்கு உந்துகள் மட்டும் 1 இலக்கம், பேருந்துகளும் பல இலக்கம், இவை டீசலைப் பயன்படுத்துகின்றன. நிலக்கரி வயல்கள் தான் இந்திய மின் ஆக்கத்துக்கு உயிர்நாடி. அது பெரும் பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது. நிலக்கரி வெளிவிடும் அழுக்கு நிறைந்த கரிவளி - மனித உயிருக்கும், ஆடு, மாடுகள், மரம், செடி, கொடிகள் வளர்ச்சிக்கும் உலை வைக்கக் கூடியது. இதில் முதல் இடம் வளர்ந்த நாடுக ளான சீனா, அமெரிக்கா, சப்பான் போன்ற 20 வளர்ந்த நாடுகளுக்கு இருக்கிறது.

இந்தியா, பாக்கித்தான், இந்தோனேசியா போன்ற வளரும் நாடுகளுக்கும் இதில் பங்கு உண்டு.

3. இதை இரண்டு செலிஸியஸ் வெப்பத்துக்கும் குறைவாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று, 21ஆவது தடவையாக 150 நாடுகளின் 195 தலைவர்கள் கடந்த 10 நாள்களாக பாரிசில் கூடி விவாதித்தார்கள். சென்னை வெள்ளப் பாழின் கொடுமை பற்றி, பாரிசு மாநாட்டில், அமெரிக்க அமைச்சர் கெரி 9-12-2015 அன்று குறிப்பிட நேர்ந்தது. ஏன்?

இந்தியாவும் - குறிப்பாகத் தென்னிந்தியாவும் வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளன. இவற்றை இடப்பெயர்வு செய்யமுடியுமா? முடியாது.

எனவே, வெப்பம் உயருவதற்கான எல்லா வழிகளையும் அடைத்திட ஏற்ற வழிகளைக் கையாளுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

3. இந்தியா முழுவதிலும் 2.5 இலக்கம் ஏரிகள்; தமிழகம், கர்நாடகம், ஆந்திரம் இவற்றில் 1.66 இலக்கம் ஏரிகள். தமிழகத்தில் மட்டும் 39,000 சிறிய - பெரிய ஏரிகள் இன்று உள்ளன.

**இந்திய அரசும் மாநில அரசுகளும் இவ்வளவு நீர் நிலைகளையும் முழுக் கொள்ளளவுக்கும் நீர் பிடிக்கும் படி 10 ஆண்டுகளில் எல்லாம் செய்ய வேண்டும்.**

4. உலகத்திலுள்ள 720 கோடி மக்களில் செல்வ நாட்டுக் காரர்களான 10 விழுக்காட்டுப் பேர், வாகனங்கள் தொழிற் சாலைகளால் வெளியேற்றும் கரிக்காற்று - மொத்தத்தில் சரிபாதி அளவாக இன்று இருக்கிறது.

**அதாவது, ஏழை வளரும் நாட்டான் ஒவ்வொருவனும் ஆண்டொன்றுக்கு 1.57 டன் கரி வளியை வெளியேற்று கிறான்; ஆனால் வளர்ந்த செல்வ நாட்டான் 17.6 டன் கரிவளியை வெளியேற்றுகிறான்.**

இந்த எலி நாடுகளும் தவளை நாடுகளும் இணைந்து - இனி எப்படிக் கரிவளிப் பெருங்கடலிலிருந்து தப்பிப்பது என்று பாரிசில் கூடிப் பேசிவிட்டன.

அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட - 77 செல்வ நாடுகள் வெளியேற்றப்படும் கரிவளியில் 94 விழுக்காடு அளவை வெளியேற்றுகின்றன.

இந்தியா மட்டும் 2030க்குள் கரிவளியைக் கட்டுக்குள் வைத்திட வேண்டுமானால் - 2.5 டிரில்லியன் டாலர் - அதாவது 1,50,00,000 கோடி ரூபா செலவு செய்தே தீரவேண்டும். இது பாரிசு மாநாட்டில் பேசப்பட்டது. படிப்பதற்கும் கேட்பதற் கும் இனிக்கிற செய்தி இது. இந்திய முதலாளிகளும், உலக முதலாளிகளும் அறிவியலாளர்களும் 150 நாடுகளின் அரசு களும் மக்களும் மனம் வைத்தால்தான் - உலக வெப்ப உயர்வைக் கட்டுக்குள் வைக்க முடியும்.

5. இந்தியா, நிலக்கரியின் பயன்பாட்டை விரைந்து குறைத் துக் கொண்டு, சூரிய ஒளி மின்சார உற்பத்தியை ஒரு 10 ஆண்டுக் காலத்தில் பெருக்கித் தீரவேண்டும். அணு மின் உலைகளை உடனே மூடவேண்டும். புதிதாக அனல்மின் நிலையங்களை நிறுவுவதை அடியோடு கைவிட வேண்டும்.
6. வெப்பம் அதிகப்பட்டுவிட்டதால் - இந்திய - வற்றாத ஆறு களான பிரம்மபுத்ரா, கங்கை பேராறுகளுக்கு நீரைத் தரும் இமயமலை பனிக்கட்டிச் சுவர்கள் உருகத் தலைப் பட்டுவிட்டன என்பதை 40, 50 ஆண்டுகளாகப் பறை சாற்றுகிறார்கள்.

“எவரெஸ்ட் மலையின் தென்சரிவு பனிக்கட்டிச் சுவர்களில், கடந்த 40 ஆண்டுகளில் 28 விழுக்காடு அளவு பனிக்கட்டிகள் உருகிவிட்டன. வெப்ப அளவு அதிகரித்துக் கொண்டே போனால் - இந்து குஷ் - இமாலயமலைப் பகுதிகளில் உள்ள 5,500 பனிக்கட்டிச் சுவர்களில் 70 விழுக்காடு முதல் 99 விழுக்காடு அளவுக்கு 2,100ஆம் ஆண்டுக்குள் உருகிவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்திருக்கிறார்கள்” (Times of India, Chennai, 9-12-2015).

நீரைத் தேக்குவோம், வாருங்கள்! இதன்விளைவாக என்ன நடக்கும்,

கங்கை, பிரம்மபுத்ர ஆறுகள் 2,100இல் வறண்டு போகும். இது உறுதி.

நாம் மனிதர்கள் - மாக்கள் அல்ல. இவற்றை மனமார உணர்ந்து மானிடத்தைக் காப்போம், வாருங்கள்!

# அம்பேத்கரும் இந்திய அரசமைப்புச் சட்டமும்

**- க.முகிலன்**



*தில்லியில் அம்பேத்கர் நினைவு ஆராய்ச்சிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியபோது மோடி*

நம் கையைக் கொண்டே நம் கண்களைக் குத்தச் செய்யும் வஞ்சகக் கலையில் கைதேர்ந்தது பார்ப்பனியம்.

இந்துத்துவப் பாசிசக் கொள்கை கொண்ட, நரேந்திர மோடியின் தலைமையிலான பா.ச.க. ஆட்சி, மேதை அம்பேத்கரைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவது, அம்பேத்கரின் உண்மையான கொள்கைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ளவிடாமல் திசைத்திருப்பும் ஓர் அரசியல் சூழ்ச்சியே ஆகும்.

ஆரியப் பார்ப்பனர் இந்தியாவில் நுழைந்த வேதகாலம் தொடங்கி, இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவியிருந்த பன்முகப்பட்ட மெய்யியல், பண்பாடு, வாழ்க்கை முறைகள் மொழிகள், இனங்கள் முதலானவற்றைத் தன்வயமாக்கி அவற்றின் தனித்தன்மைகளைச் சீர்குலைத்து அழித்தது. இதுபோல்தான், பார்ப்பனியத்தைக் கடுமையாக எதிர்த்த புத்தரை ஒரு இந்து அவதாரமாக்கி பவுத்தத்தை அழித்தது. அதுபோல் இப்போது அம்பேத்கரையும் அரவணைத்து அழிக்க முயல்கிறது.

அதற்காகத்தான் மேதை அம்பேத்கரின் 125ஆம் ஆண்டு பிறந்த நாளை 2015 ஏப்பிரல் முதல் ஓராண்டுக்குக் கொண்டாடப் போவதாக நடுவண் அரசும், பா.ச.க.வும் அறிவித்தன. இதன் ஒரு பகுதியாக, அம்பேத்கர் 1920-22 ஆம் ஆண்டுகளில் இலண்டன் நகரில் தங்கிப் படித்த இல்லத்தை அரசு விலைக்கு வாங்கியது. நரேந்திரமோடி இலண்டனுக்குச் சென்றிருந்த போது அம்பேத்கரின் அந்த நினைவகத்தைத் திறந்து வைத்தார். தில்லியில் அம்பேத்கர் ஆராய்ச்சி நடுவம் அமைப்பதற்கான கால்கோள் விழா மோடியின் தலைமையில் நடந்தது.

அதிரடிச் செயல்கள் மூலம் அரசியல் வாண வேடிக்கை நடத்துவதில் வல்லவர் நரேந்திர மோடி. அத்தன்மையில் கடந்த நவம்பர் 26 அன்று சட்டமேதை அம்பேத்கரால் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் என்பதையொட்டி, நாடாளுமன்றத்தில் அம்பேத்கரின் 125ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை நடுவண் அரசு கொண்டாடியது.

பொதுவாக-குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே அம்பேத்கர் ஒருவரே அரசமைப்புச் சட்டத்தை எழுதினார் என்பது போன்ற பிழையானதொரு கருத்து நிலவுகிறது. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவிற்கு அம்பேத்கர் தலைவராக இருந்தார். அக்குழுவின் மற்ற உறுப்பினர்கள் கே.எம். முன்ஷி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, என்.கோபாலசாமி அய்யங்கார் என்கிற நான்கு பார்ப்பனர்களும், முகமது சாதுல்லா என்கிற ஓர் இசுலாமியரும் ஆவர்.

அரசமைப்புச்சட்ட வரைவுக்குழுவின் தலைவராக அம்பேத்கர் அமர்த்தப்படுவதற்கு முன்பே, பெனகல் நரசிங்கராவ் என்கிற தெலுங்குப் பார்ப்பனர் கனடா, அமெரிக்கா, பிரான்சு, செருமனி, இங்கிலாந்து, அயர்லாந்து முதலான அயல்நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அரசியல் சட்டங்களைப் பார்த்து வந்தபின், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது வரைவு எழுதப்பட்டது. நேரு தலைமையிலான ஆறுபேர் கொண்ட குழு இப்பணியையும் வரைவையும் மேற்பார்வை செய்தது. இவ்வாறு எழுதப்பட்ட வரைவைத்தான் அம்பேத்கர் தலைமையிலான அரசமைப்புச் சட்டக்குழுவிடம் தந்து, அதைச் செம்மைபடுத்தச் சொன்னார்கள். சிறந்த சட்டமேதை என்பதால் அம்பேத்கர் இரண்டு ஆண்டுகளுக்குமேல் இதைச் செப்பம் செய்யும் வேலையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதனால் அவர் உடல்நலம் பெரிதும் கெட்டது.

பார்ப்பனியமும் முதலாளியமும் ஒடுக்கப்பட்ட மக்களின் முதல் எதிரி என்று வாழ்நாள் முழுவதும் முழங்கிய அம்பேத்கரால் இவற்றை ஒழிக்கும்படியான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க முடியவில்லை. மாறாக இவற்றுக்கு அரசமைப்புச்

சட்டத்தில் கெட்டியான பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதை அம்பேத்கரால் தடுக்க முடியவில்லை.

எனவே அரசமைப்புச் சட்டத்தை எழுதிய அம்பேத்கரின் 125ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய அரசமைப்புச் சட்டம் 1949 நவம்பர் 26 அன்று நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில், 2015 நவம்பர் 26ஆம் நாளை அம்பேத்கர் அரசமைப்புச் சட்டத்தின் மேன்மையைப் போற்றும் வகையில் நாடாளுமன்றத்தில் கருத்தரங்கம் போன்ற தன்மையில் உறுப்பினர்கள் பேசினர்.



அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவினருடன் டாக்டர் அம்பேத்கர்
இடமிருந்து அமர்ந்திருப்போர் : என்.மாதவராவ், முகம்மது சாதுல்லா, அம்பேத்கர், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், பனகல் நரசிங்கராவ்

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை எழுதுவதுதான் அம்பேத்கரின் குறிக்கோளாக இருந்ததா என்பதை 1916 முதல் 1956இல் அவரின் இறுதி மூச்சு வரையில் அம்பேத்கர் பேசியவற்றை எழுதியவற்றை ஆழ்ந்து படித்தால் இல்லை என்பதே திட்டவட்டமான விடையாக இருக்கிறது. பின், ஏன், அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்க அம்பேத்கர் இசைந்தார்.

அதை அம்பேத்கரே 25-11-1949 ஆற்றிய தன்னுடைய இறுதி உரையில் தெளிவுபடுத்திவிட்டார். “இந்த அரசியல் அமைப்பு அவைக்கு நான் உறுப்பினராக வந்ததன் நோக்கம் பட்டியல்குல மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான், இதைத் தவிர வேறு பெரிய நோக்கம் எதுவும் இல்லை” என்று கூறினார். பட்டியல் குல மக்களுக்கு அவர் பெற்றுத்தந்த அரசியலில் இடஒதுக்கீடு, அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு உரிமைகளையே அம்பேத்கர் இங்கு குறிப்பிடுகிறார். அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 16(4) மூலம் பட்டியல் குல, பழங்குடிஇன, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டை உறுதி செய்த பெருமை முற்றிலும் அம்பேத்கரையே சாரும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட வரலாறே மோசடித்தனமானதாகும். சுதந்தரப் போராட்டக் காலத்தில் காந்தியும், காங்கிரசுக் கட்சியும், நேருவும் 1922 முதல் 1936 வரையிலான காலத்தில், “சுதந்தரம் கிடைத்தவுடன் வயது வந்த (21) எல்லோருக்கும் வாக்குரிமைக் கொடுக்கப்படும். அந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரநிதிகளைக் கொண்டு ஓர் அரசியல் சட்டத்தை நமக்காக நாமே உருவாக்குவோம்” என்று பல சமயங்களில் உறுதி அளித்தனர். ஆனால் நடந்தது என்ன?

சுதந்தரத்திற்கு முன்பே 1946இல் 7 விழுக்காடு வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தில்லி மத்திய சட்டசபையை (நாடாளுமன்றம்) 9-12-1946 அன்று அரசியல் சட்ட அவையாக மாற்றி அரசமைப்புச் சட்ட உருவாக்கப் பணியைத் தொடங்கி விட்டது-நேரு தலைமையிலான காங்கிரசு ஆட்சி. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறிய சனநாயகத்திற்கு எதிரான இப்போக்கை அப்போதே பெரியார் கடுமையாகக் கண்டித்தார்.

சுதந்தர இந்தியாவின் ஆட்சி அதிகாரம், இங்குக் காலங்காலமாக ஆளும் வர்க்கமாக இருந்துவரும் பார்ப்பனர்களின் கைக்குப் போய்விடுமோ என்ற அச்சம் அம்பேத்கருக்குத் தொடக்க முதலே இருந்துவந்தது. 1920இல் அவர் நடத்திய ‘ஊமைகளின் தலைவன்’ (மூக் நாயக்) இதழில் இவ்வாறு எழுதினார்: “பிரிட்டிஷ் அரசின் நீதியற்ற அதிகாரத்தை எதிர்ப்பது சரி என்று பார்ப்பனர்கள் சொல்வதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறதோ, அதைவிட நூறு மடங்கு அளவு நியாயம்-ஆட்சி அதிகாரம் பார்ப்பனர் கைகளுக்கு மாற்றப் படக்கூடாது என்று ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் எதிர்ப்பதில் அடங்கியிருக்கிறது. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு அடிப்படை உரிமைகளை வழங்காத சுயராச்சியம் அவர்களுக்கு ஓர் உண்மையான சுயராச்சியமாக இருக்கமுடியாது. அது அவர்களுக்கு ஒரு புதிய அடிமைத்தளையாகவே இருக்கும்”.

1945இல் அம்பேத்கர் எழுதிய “காந்தியும் காங்கிரசும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன?” என்ற நூலில் இதே கருத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார் “சுயராச்சியம்

என்ற மந்திரக் கோலினால் ஆளும் வகுப்பு மறைந்து போகாது. அது எப்படி இருக்கிறதோ அப்படியே இருந்துவரும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பூதத்திடமிருந்து விடுபட்டுவிட்ட நிலையில் அதன் வலிமையும் வீரியமும் கூடுதலாகும். சுருங்கச் சொல்லின், சுயராச்சியம் என்பது ஆளும் வகுப்பு நடத்துகின்ற அரசாங்கமாக இருக்குமே தவிர, மக்கள் நடத்துகின்ற அரசாங்கமாக இருக்காது. மக்கள் நடத்துகின்ற அரசாங்கமாக இல்லாத போதும், ஆளும் வகுப்பு அதனை மக்களுக்கான அரசாங்கமாகக் காட்ட முயலும்'' என்று இன்றுள்ள நிலையை அன்றே தொலைநோக்கோடு எழுதினார்.

தில்லியில் பன்னாட்டுத்தரத்தில் அமைக்கப் போவதாகக் கூறப்பட்டுள்ள அம்பேத்கர் நினைவு ஆராய்ச்சி நடுவத்துக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றிய நரேந்திரமோடி, ``அம்பேத்கரின் பன்முக ஆளுமைகளை அறியவேண்டும். குறிப்பாக அவருடைய பொருளாதாரச் சிந்தனைகளைப் பரப்பவேண்டும்'' என்று பேசினார்.

அம்பேத்கர் 'அரசு சோசலிசம்' என்கிற பொருளாதாரக் கோட்பாட்டைக் கொண்டிருந்தார். இந்தியாவில் நிலம் முழுவதும் அரசுடைமையாக்கப்பட வேண்டும். பெருந் தொழில்கள் அனைத்தையும் அரசே நடத்தவேண்டும் என்பதே அவருடைய கொள்கை. 1947இல் அரசமைப்புச் சட்ட அவைக்கு அனுப்பிய 'அரசுகளும் சிறுபான்மையினரும்' என்ற தலைப்பிட்ட நீண்ட அறிக்கையில், அரசு சோசலிசத் திட்டங்களை விளக்கியிருந்தார். இதுதான் அம்பேத்கரின் பொருளாதாரக் கொள்கை என்பது மோடிக்குத் தெரிந்திருந்தால் இப்படிப் பேசியிருப்பாரா? பன்னாட்டு-உள்நாட்டு முதலாளிகளுக்கு ஊழியம் செய்வதே நடுவண் அரசின் தலையாயப் பொருளாதாரக் கொள்கையாக இருப்பதுதான் அம்பேத்கரின் பொருளாதாரக் கொள்கையா?

இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றுவது என்ற பெயரால் வருணாசிரம தர்ம அமைப்புக்கு அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 25, 372, 395 மூலம் கெட்டியான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தடுக்கும் நோக்குடன் தனக்கேயுரிய சட்டமேதகைமையுடன் இந்துச்சட்டத் தொகுப்பு மசோதாவை நேருவின் ஆதரவுடன் அரசமைப்புச் சட்ட அவையில் அம்பேத்கர் முன்மொழிந்தார். அரசியல் சட்ட அவையின் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத் உள்ளிட்ட இந்துத்துவவாதிகள் கடுமையாக இதை எதிர்த்ததால் நிறைவேற்ற முடியாமல் போனது. இதனால் சினமுற்ற அம்பேத்கர் 1951 இல் தான் வகித்துவந்த சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார்.

1949 நவம்பர் 25 அன்று, அரசமைப்புச்சட்ட வரைவுக் குழுவின் உறுப்பினரான முகமது சாதுல்லா, அரசியல் சட்ட அவையில் பேசியபோது, ``எங்கள் மனச்சான்றுக்கு விரோதமான தன்மையில் பலவற்றை இந்த அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்க நேர்ந்ததுவிட்டது'' என்று புலம்பினார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியமைக்காகப் போற்றப்பட்ட அம்பேத்கரை 1952இல் நடந்த நாடாளுமன்றத்திற்கான முதலாவது பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சித் திட்டமிட்டுத் தோற்கடித்தது. மீண்டும் இடைத்தேர்தல் ஒன்றிலும் தோற்கடித்தது. எனவே அம்பேத்கர் மாநிலங்கள் அவை மூலமாகவே நாடாளுமன்றத்தில் நுழைய நேரிட்டது.

மாநிலங்கள் அவையில் 2-9-1953 அன்று, ``இவ்வளவு மோசமான சட்டத்தை எழுதிட நீங்கள் ஏன் துணை போனீர்கள்?'' என்று உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது அம்பேத்கர், ``நான் ஒரு வாடகைக்காரன் போல் பணியாற்றினேன். என்னை என்ன செய்யச் சொன்னார்களோ அதை என் விருப்பத்துக்கு மாறாகச் செய்தேன். ஆனால் இந்தச் சட்டத்தை நான் விரும்பவில்லை. இந்தச் சட்டம் யாருக்கும் பயன்படாது. இந்தச் சட்டத்தை எரிப்பதற்கு நான் முதலாவது ஆளாக நிற்பேன்'' என்று கூறி தன் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினார்.

எனவே மேதை அம்பேத்கர் விரும்பியவண்ணம் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உரிமைகளும் நல்வாழ்வும் உறுதி செய்யப்பட்ட வகையில் அரசமைப்புச் சட்டத்தை எழுதவில்லை என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொண்டால்தான் 'அரசியல் அமைப்புச் சட்டம்' குறித்த புனித மாயையிலிருந்து விடுபடமுடியும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் பார்ப்பன-பனியா நலன் காக்கின்றன, வருணாசிரம-சாதி அமைப்பைக் கட்டிக் காக்கின்ற சட்டமாகும். இதை அடியோடு மாற்றி அமைப்பதன் மூலமே ஒடுக்கப்பட்ட-கீழ்ச் சாதி மக்களுக்கு விடுதலை கிட்டும்.

## முனைவர் ந.அரணமுறுவல் அவர்களின் படத்திறப்பு-நினைவேந்தல் நிகழ்ச்சி



தனித்தமிழ்ப் போராளியாகவும் உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவராகவும் விளங்கிய முனைவர் ந.அரணமுறுவல் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி 24-12-2015 மாலை திருவல்லிக்கேணி சிவ.இளங்கோ கட்டடக் கூட்ட அரங்கில், தமிழ்நேயன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்மகன் வரவேற்புரை நிகழ்த்திட, ந.அரணமுறுவல் படத்தைப் புலவர் கி.த.பச்சையப்பன் திறந்து வைத்தார். தோழர்கள் பெ.மணியரசன், அன்புவாணன் வெற்றிச் செல்வி, ஓவியர் வீரசந்தானம், துரைசிங்கவேல், இறையெழிலன், செயபிரகாசுநாராயணன், செந்தமிழ்க்குமரன், வே.ஆனைமுத்து உள்ளிட்ட தோழர்கள் முனைவர் ந.அரணமுறுவல் அவர்களின் ஒப்பரிய தமிழ் மொழி-இனமேம்பாட்டுப் பணிகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர். தமிழ்த்தேச மக்கள் கட்சி இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

6

இந்தியாவிலிருந்த சுதேச மன்னர்கள் இந்தியாவோடு இணைந்த போது எழுதிக்கொடுத்த ஒப்பந்தங்களில் கண்ட விதிகளுக்கும், காஷ்மீர் அரிசிங் செய்துகொண்ட ஒப்பந்த விதிகளுக்கும் இடையே பெரிய மாறுபாடு இருந்தது.

அது என்ன?

வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு போன்ற மூன்று துறைகளில் மட்டுந்தான் காஷ்மீருக்கும் சேர்த்து முடிவெடுக்கிற உரிமை இந்தியாவுக்கு உண்டு. மற்ற எந்தத் துறையிலும் இந்தியா தலையிட முடியாது என்பதே அவ் ஒப்பந்த விதிகள். அத்துடன் அவர் ஏற்கெனவே மவுண்ட்பேட்டனுக்கு அனுப்பிய ஆவணங்களில், "வருங்காலத்தில் எப்போதுமே இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளை முழுமையாக ஏற்கும்படி என்னை வற்புறுத்த முடியாது" என்றும் அரிசிங் குறிப்பிட்டிருந்தார். ஆனால் எல்லா உரிமைகளும் இந்தியாவிடம் பறிபோனபோது, இந்தியாவிடம் கேள்வி கேட்கும் உரிமையை அரிசிங் இழந்திருந்தார்.

மேலும் நேருவின் அணுகுமுறை எதுவுமே அரிசிங்கால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது; பட்டேல் அணுகுமுறை மட்டுமே மன்னர் அரிசிங்குக்கு இணக்கமாகத் தோன்றியது. நேரு ஷேக் அப்துல்லாவின் பக்கம் சாய்ந்துவிட்டதாகவே அரிசிங் கருதினார்.

அதற்கு ஏற்றாற்போல், ஷேக் அப்துல்லா பேசி வந்த நில உடைமை சீர்திருத்தம், பொதுவுடைமை சார்பு போன்றவற்றிலும், மன்னர் அரிசிங்குக்கு உரிய சிறப்புச் சலுகைகளை நீக்கிவிட வேண்டும் என்பதிலும் நிலச் சீர்திருத்தச் சட்டம் போன்றவற்றுக்கு இப்போது அவசரமில்லை என்பதிலும் அரிசிங் நிலைபாட்டுடன் பட்டேல் உடன்பட்டார்.

சட்ட வடிவிலான இந்தச் செய்திகளுக்கு அப்பால், மனோ ரீதியான சில உறுத்தல்கள் அரிசிங்குக்கு இருந்தன. தான் வாழ்நாளில் எதிரியாகக் கருதிய ஷேக் அப்துல்லாவிடமே ஜம்மு-காஷ்மீர் நிருவாகப் பொறுப்பை ஒப்படைக்கச் செய்துவிட்டார் நேரு. அப்படி ஒரு சூழ்நிலைக் கைதியாகிவிட்டதை அரிசிங்கால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இடைக்கால அரசுக்குத் தலைவராகிவிட்ட ஷேக் அப்துல்லா எதிர்க்கட்சித் தலைவராக மட்டுமே இருந்தவர்; நிருவாகப் பணியில் எந்த முன் அனுபவமும் இல்லாதவர். நிருவாகக் காரணங்களுக்காகவாவது அரிசிங்குடன் கலந்து பேசுவதையும் ஷேக் அப்துல்லா புறக்கணித்தார். அரிசிங்கும் இறங்கிவர விரும்பவில்லை.

ஏன் அரிசிங் அப்படி இருந்தார்?

அரிசிங்கின் முப்பாட்டன் குலாப் சிங் ஆங்கிலேயரிடமிருந்து காஷ்மீரை விலைக்கு வாங்கினார். அதனால் ஜம்மு-காஷ்மீரின் மொத்த நிலப்பரப்பான 22 இலட்சம் ஏக்கரும் மன்னர் அரிசிங்குக்கும் அவருடைய வாரிசுகளுக்குமே சொந்தம். நிலத்தை உழுது பயிரிடுபவர்கள் அதற்கான கூலியை மட்டும் பெறலாம். அதைத் தாண்டி அரிசிங்கின் இனத்தவரான டோக்ரா அல்லது மற்ற இந்து மேல்சாதி மக்கள் மட்டுமே நில உடைமையாளர்கள்.

முஸ்லீம்கள் எல்லாம் அந்த நிலங்களை உழுது பயிரிட்டு அதற்கான கூலியை மட்டும் பெற்றுக்கொண்டு வழவேண்டியிருந்தது. மழைக் காலங்களில் கடும்பனி இருக்கும்; வயல்களில் எதையும் பயிரிட முடியாது. அப்போது பட்டினி கிடந்து இறப்பதோ அல்லது வேறு வேலை தேடி ஊரைவிட்டு வெளியேறி ஜம்முவுக்குப் போய்விடுவதோ தான் வழி.

"இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று தொடர்ந்து வாதிட்டுவந்த ஷேக் அப்துல்லா, இப்போது தலைமை நிருவாகியாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்ததும், "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று அறிவித்தார். அந்தப் புதிய அறிவிப்பின்படி, ஒரு தனி குடியானவர் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் 22.75 ஏக்கர் நிலம் மட்டுமே வைத்துக் கொள்ளலாம். ஜாகிர்தாரி, சக்தாரி போன்ற எல்லாப் பெருநில உடைமைகளையும் எவ்வித இழப்பீட்டுத் தொகையும் தராமல் கையகப்படுத்தினார். இதில் சில முஸ்லீம் பெருநில உடைமைக்காரர்களும், லடாக் பகுதியிலிருந்த புத்த மடங்களும் பாதிக்கப்பட்டன.

மொத்தம் 396 ஜாகிர்தாரிகள் என்கிற ஜமீன்தார்கள் பெற்றிருந்த 4 இலட்சம் ஏக்கர் பறிமுதல் செய்யப்பட்டு, அந்நிலங்களைப் பயிரிட்டு வந்த ஏழை இஸ்லாமியர்களுக்கு வழங்கினார். (ஆதித்திராவிடர்களுக்கும் நிலம் வழங்கினார் - கட்டுரையாளர்).

இன்னொரு புறம் நிருவாகச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயரிய பதவிகளுக்குப் பல இஸ்லாமியர்களை அமர்த்தினார், ஷேக் அப்துல்லா.

சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்திட, "ஊர்க்காவல் படை"களை உருவாக்கி ஏராளமான முஸ்லீம்களை அப்படையில் சேர்த்து, அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கினார். "முஸ்லீம்கள் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது" என்கிற அரிசிங் காலப் பழக்கம் ஒழிக்கப்பட்டது.

இதனால், ஆயுதம் பெற்ற முஸ்லீம்கள், இந்துக்கள் மீது தாக்குதல் தொடுப்பார்களோ என அரிசிங் அஞ்சினார். எதிர்வினையாக, “பிரஜாபரிஷத்” என்னும் இந்துக்கள் பாதுகாப்புக்கான ஓர் அமைப்புக்கு, அரிசிங் சார்பில் பணமும் ஆயுதங்களும் தரப்பட்டன. இதற்கு, பிரதமர் மகாஜனும் உதவினார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த நிலையில் மகாஜன், பிரதமர் பதவியிலிருந்து ஓடிவிட விரும்பினார். ஆனால் வல்லபாய் பட்டேல் அதற்கு ஒப்பவில்லை.

இந்நிலையில் ஷேக் அப்துல்லாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த “பிரஜா பரிஷத்” அமைப்பின் போராட்டங்கள் மதக் கலவரத்தில் முடிந்தன. அக்கலவரங்களை அடக்குவது தொடர்பான கருத்து மோதலால், மகாஜன் பிரதமர் பதவியிலிருந்து 1948 மார்ச்சு வாக்கில் விலகினார். இடைக்கால நிருவாகத் தலைவராக இருந்த ஷேக் அப்துல்லாவே, நேருவின் வற்புறுத்தலினால், பிரதமராக அமர்த்தப்பட்டார். ஷேக் அப்துல்லாவின் நடவடிக்கைகளுக்கு நேரு ஆதரவு காட்டினார்.

அந்த நேரத்தில் பாக்கித்தான் ஆதரவுப் படையின் தாக்குதலுக்கு ஆளாகித் தப்பி வந்த அப்பாவி அகதிகள் 40,000 பேருக்கு, ஜம்முவில் புகலிடம் தரவேண்டிய நெருக்கடி நேரிட்டது.

இவர்களைத் தங்க வைத்திட மன்னர் அரிசிங்கின் பண்ணை நிலத்தைத் தர அனுமதி கேட்ட போது, அவர் மறுத்துவிட்டார். மக்கள் தெருவில் குடும்பம் நடத்த நேரிட்டது. இது, மன்னர் அரிசிங் மீது மேலும் வெறுப்பை உண்டாக்கியது.

இதைத் தாங்கிக் கொள்ள முடியாத அரிசிங் - இந்தியாவுடன் இணைவதாகத்தான் முடிவெடுத்தது தவறோ என்று கூட எண்ணினார்.

“நாங்கள் இந்தியாவுடன் இணைவது என்று எடுத்த முடிவினால் எந்தப்பயனும் இல்லை. இப்போதைக்கு என் மக்கள் படும் துயரத்தைப் பார்த்துக் கொண்டு உயிர்வாழ்வதைவிட, நானே ஒரு படைக்குத் தலைமை தாங்கிச் சென்று போரிட்டு மீட்பது - இல்லாவிட்டால் போர்க்களத்தில் சாவது மேலானது. எனக்கு இந்தியப் படையிலிருந்து ஆள்களை மட்டும் அனுப்புங்கள்” என்று, இந்திய ஆட்சியாளர்களுக்குக் கோரிக்கை வைத்தார், அரிசிங். ஆனால் நேருவும், பட்டேலும் இக்கோரிக்கையை மறுத்துவிட்டனர்.

அடுத்து ஜம்மு-காஷ்மீர் மாநிலப் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற பொறுப்பு, மன்னர் அரிசிங்கிடம் இருப்பது சரியா என்ற சிக்கலை எழுப்பினார், ஷேக் அப்துல்லா. பிரதமர் என்கிற முறையில், தான் தான் தலைமைத் தளபதி என உரிமை கொண்டாடினார்.

மன்னர் அரிசிங் - பிரதமர் ஷேக் அப்துல்லா இடையே இப்படித் தீராத முரண்பாடுகள் நேருவதை இந்திய அரசு விரும்பவில்லை. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கருதினர்.

இது கருதி இந்திய அரசு என்ன செய்தது?

இந்திய அரசினர் மன்னர் அரிசிங்கையும், மகாராணியையும் அரசு விருந்தினராக தில்லிக்கு அழைத்தனர். அப்படியே அவர்களை தில்லியிலேயே நிரந்தரமாகத் தங்க வைத்துக் கொண்டனர்.

மன்னர் அரிசிங் தில்லியில் தங்க வைக்கப்பட்டதை அடுத்து, அவருடைய மகனான 18 வயது கரண்சிங் மன்னராக ஆக்கப்பட்டார். இதற்குப் பிறகு ஜம்மு-காஷ்மீரில் சற்று அமைதியான சூழல் உருவாயிற்று. எப்படி?

1. ஷேக் அப்துல்லாவுக்கு எதிராக இருந்த மன்னர் அரிசிங், நிரந்தரமாக காஷ்மீர் மண்ணிலிருந்து அகற்றப்பட்டார்.
2. முஸ்லீம்களின் ஆதரவைத் திரட்ட நினைத்த மற்ற அரசியல் கட்சியினர், பாக்கித்தானுடன் சேர்ந்து கொண்டனர்.

எனவேதான் அமைதி. ஆனாலும், கொஞ்ச நாள்களில் பாக்கித்தான் ஆதரவாளர்கள் நிரந்தரமாகவே பாக்கித்தானுக்குச் சென்றுவிட்டதால் தனிக் காட்டு அரசராக ஆனார், ஷேக் அப்துல்லா.

“நயா காஷ்மீர்” - “புதிய காஷ்மீர்” என்ற முழக்கத்தை எழுப்பினார், ஷேக் அப்துல்லா.

ஆனால், நிலச்சீர்திருத்தச் சட்டம் ஏழைகளிடம் வரவேற்பைப் பெற்றாலும், சொத்தையும் ஜமீன்தார் தகுதியையும் இழந்த டோக்ராக்களும் மற்ற உயர்சாதி இந்துக்களும், மற்றும் சொத்தை இழப்பீடு வாங்காமல் இழந்த இஸ்லாமியப் பணக்காரர்களும் - ஷேக் அப்துல்லாவை எதிர்த்தனர். இதைப் பயன்படுத்திக் கொண்டு, பண ஆசை பிடித்த நிருவாக அதிகாரிகள் காஷ்மீரை ஊழலின் விளை நிலமாய் மாற்றினர்.

ஷேக் அப்துல்லாவின் ஆசை பெருகியது.

பாக்கித்தான் பிடித்துக் கொண்ட காஷ்மீர் பகுதியை ‘ஆசாத் காஷ்மீர்’ - அதாவது “அரிசிங் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற காஷ்மீர்” எனப், பாக்கித்தானியர் அழைக்கின்றனர். அந்தப் பகுதியும் தன்வசம் வர வேண்டும் என்று அவர் கருதினாரோ, என்னவோ?

அய்.நா. அவையில் காஷ்மீர் பற்றி எழுந்த விவாதத்தில், இந்தியாவின் சார்பாக வாதிடப் போன ஷேக் அப்துல்லா, அங்கு தனிப்பட்ட முறையில் மற்ற நாடுகளின் தலைவர்களைச் சந்தித்த போது, “தனிச் சுதந்தர காஷ்மீர் நாடு” என்ற மூன்றாவது தீர்வு பற்றியும் பேசியிருக்கிறார்.

“தனிச் சுதந்தர காஷ்மீர்” கோரிக்கைக்கு அப்போதைய அமெரிக்க அரசு, பிரிட்டன் அரசுகளிடம் ஆதரவு கோரினார். அத்துடன், பாக்கித்தான் தரப்புக்கு ஆதரவாக வாதாட வந்த, காஷ்மீர் பள்ளத்தாக்கின் முஸ்லீம் தலைவர்கள் சிலரையும், பாக்கித்தான் அரசுத் தரப்பு நிருவாகிகள் சிலரையும் கண்டு, தனிச் சுதந்தர காஷ்மீர் பற்றிப் பேசினார், ஷேக் அப்துல்லா.

(தொடரும்)

## “சிந்தனையாளன்” இதழை வளர்த்தெடுங்கள்! “சிந்தனையாளன்” குவித்த வெற்றிகளைக் கூறுங்கள்!

தந்தை பெரியார் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் முதன்முதலாக, 1934இல், பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் கல்வியிலும், அரசு வேலையிலும் விகிதாசார இடப்பங்கீடு கோரினார்.

### I

பெரியாரின் அக்கோரிக்கையை இந்திய அரசில் வென்றெடுக்க இந்தியாவிலேயே 1975இல் முதன்முதலாகக் குரல் எழுப்பியது ‘சிந்தனையாளன்’.

இரண்டாவதாக 1976இல் குரல் கொடுத்ததும் ‘சிந்தனையாளன்’.

இந்தியக் குடிஅரசுத் தலைவரிடம் 8-5-1978இல் நேரில் நாம் கோரிக்கை வைத்தது பற்றித் தொடர்ந்து எழுதியதும் ‘சிந்தனையாளன்’.

நாம், தமிழக அளவில், 19-8-1979இல், முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் வைத்த தெளிவான கோரிக்கை - தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 60 விழுக்காடு இடப்பங்கீடு கோரியது. அதைத் தொடர்ச்சியாகத் தூக்கிப் பிடித்தது, ‘சிந்தனையாளன்’.

வடஇந்தியாவில் பீகாரில் 17-9-1978 முதல் 18-10-1978 வரையில் இடஒதுக்கீடு கோரிப் பரப்புரை செய்து, பீகாரில் 31 மாவட்டங்களிலும் பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய செய்தியைத் தமிழக மக்களுக்குத் தந்து உணர்ச்சி ஊட்டியது, ‘சிந்தனையாளன்’.

01-01-1979இல் இந்திய அரசு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை அமைத்திட, நாம் பீகாரில் நடத்திய போராட்டம் பற்றித் தமிழகத் தமிழ் மக்களுக்கு விவரம் தந்தது, ‘சிந்தனையாளன்’.

### II

பெரியாரின் இயக்கம் ஓர் அரசியல் இயக்கம் என்பதை உலகத்தாருக்கு உணர்த்தியது, ‘சிந்தனையாளன்’.

1945 செப்டம்பர் 30 முதல் 31-10-1956 முடிய “தனிச் சுதந்தரத் திராவிட நாடு” கோரிக்கையை, 11 ஆண்டு கள், நடுக்கமின்றி முன்வைத்தவர், தந்தை பெரியார். எனவே, பெரியார் இயக்கம் ஓர் அரசியல் இயக்கம்.

01-11-1956 முதல் 19-12-1973 முடிய 17 ஆண்டுக்காலம், “தனிச் சுதந்தரத் தமிழ்நாடு” கோரிக்கையை ஆணித்தரமாக முன்வைத்தவர், தந்தை பெரியார். ஆதலால், பெரியார் இயக்கம் ஓர் அரசியல் இயக்கம்.

நமக்கு முற்றுரிமை உள்ள தனிச் சுதந்தரத் தமிழ்நாட்டு அரசுதான் - நால்வருணம், பழக்கவழக்கச் சட்டம், இந்தி ஆதிக்கம் இவற்றை அடியோடு ஒழித்திடவும்; மதம் பிரிக்கப்பட்ட கல்வி, மதம் பிரிக்கப்பட்ட அரசு நடவடிக்கை, மத நிறுவனங்களின் சொத்துப் பறிப்பு முதல் இவற்றை நாம் நிலைநாட்டுவதும் கைகூடும் என்பதை நமக்குச் சொன்ன இயக்கம் பெரியார் இயக்கம். ஆகவே பெரியார் இயக்கம் ஓர் அரசியல் இயக்கம்.

பெரியாரின் இக்கோட்பாட்டினை வலிவாக நிலைநாட்டியது, ‘சிந்தனையாளன்’.

### III

தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு 1-2-1980 முதல் 50 விழுக்காடு வந்துசேரத் தொடர்ந்து பாடுபட்டது, ‘சிந்தனையாளன்’.

இந்திய மய்ய அரசு வேலை, பொதுத்துறை வேலை மற்றும் இந்திய அரசுக் கல்வியில் 0 இந்து, இஸ்லாம், கிறித்துவ, சீக்கிய மதங்களிலுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு, 6-8-1990இல் இந்திய அரசால் 27 விழுக்காடு ஒதுக்கீடு அளிக்கப்படத் தொடர்ந்து எழுதியது, ‘சிந்தனையாளன்’.

இப்போது எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசாரப் பங்கு கோருவது, சிந்தனையாளன்.

*சிந்தனையாளன் உங்களுக்கான இதழ்!*
*சிந்தனையாளன் இதழை வளர்த்தெடுங்கள்!*

- ஆசிரியர் குழு

# சின்னச்சின்ன ஊர்கள்-சின்னாற்றின் நீரைப்பெற்ற ஏரிகள் வெள்ளாற்றின் நீரைப்பெற்ற ஏரிகள் நீர்மேலாண்மையும், இருபோகப் பயிரும் பாழாக்கப்பட்டது எப்படி?

- வே.ஆனைமுத்து

நான் பிறந்தது முருக்கன்குடி. 7 அகவை முதல் 18 அகவை முடிய வளர்ந்தது வடக்கலூர் அக்ரகாரம். இன்று இவ்வூர்கள் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தில் உள்ளன.

என் பிறந்த ஊருக்கு மேற்குப்பக்கம் காட்டு நீரும், குடிகாடு ஏரி நீரும் வந்துசேரும் சிறிய ஏரி; சில பாறைக் கிணறுகள். கிணறுகளில் 360 நாளும் 6 அடி நீர் இருக்கும்; ஏரியில் சூலை முதல் ஏப்பிரல் வரை நீர்,

ஏரிக்குக் கீழ்ப்புறம் ஒரு கி.மீ. வரையில் வயல்கள். ஏரிக்குக் கீழ்ப்புறம், வயல்களுக்கு வடபுறம் சின்ன மாந் தோப்பு; பெரிய மாந்தோப்புகள். மா, புளி, இலுப்பை மரங்கள் 1925லேயே 25 ஆண்டைய வயது உடையவை. ஊர் மாடுகள் எல்லாம் கோடையில் இத்தோப்புகளில் படுத்து அசை போடும்; மாடு மேய்ப்பவர்கள் ஒரு தூக்கம் போடுவார்கள். காலை, மாலை நேரங்களில் வயல்களிலும், புன்செயிலும் வேலை செய்வார்கள்.

அடைமழை 3, 4 நாள்களுக்குப் பெய்யும்; தெருக்களில் தூய நீர் ஓடும். பெரியவர்கள் கடுதாசியில் கப்பல் செய்து தருவார்கள். சிறுவர்களாகிய நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு கப்பலை மிதக்கவிடுவோம்.

என் ஊரில், 1931-32இல் ஓராண்டு திண்ணைப் பள்ளி யில் படித்தேன்.

1932-1933 முதல் வடக்கலூர் அக்ரகாரத்தில் என் அம்மாயி வீட்டில் தங்கிப் படித்தேன். 1942 ஏப்பிரல் வரை அவ்வூரி லிருந்து சிலர் இலப்பைக்குடிகாட்டில் படித்தோம். 7 கி.மீ. காலையில் நடந்துபோய் மாலை 6 மணிக்கு மீளுவோம்.

அவ்வூர் சின்னாற்றின் வடகரையில் உள்ளது. ஆற்றின் தென்கரை முழுவதிலும் கிணற்றுப் பாசன நிலங்கள். என் தாய்மாமன்களுக்கும், உறவினர்களுக்கும் அங்கே பெரிய, பெரிய தென்னந்தோப்புகள்; மாந்தோப்புகள். ஊருக்கு வடக் கே ஏரி. ஊருக்கும் ஏரிக்கும் கீழ்பக்கம் 1.5 கி.மீ. வரையில் ஏரிப்பாசன வயல்கள். எப்போதும் வயல்கள் பச்சைப்பசேல் என இருக்கும். நிலச் சொந்தக்காரர்களும், வடக்கலூர், கிளி யூர் ஆதித்திராவிட ஆண்களும் பெண்களும் வயல்களில் வேலை செய்வது, ஆடு, மாடுகளை மேய்ப்பது, நெல் அடிப்பது, கரும்பு ஆலைகளில் கடுமையாக உழைப்பது என்பது தொடர்ந்து நடக்கும்.

வடக்கலூர் அக்ரகாரம் ஏரியில் சூலை முதல் மார்ச்சு வரையில் 7, 8 அடி உயரம் நீர்ப்பிடிப்பு இருக்கும். ஆண் களும் பெண்களும் தனித்தனித் துறைகளில் சின்னாற்றிலும், ஏரியிலும் குளிப்பார்கள். ஏரிக்குத் தென்புறம் நான் படித்த தொடக்கப்பள்ளி. தொடக்கப் பள்ளிக்கும் மேற்கே, ஏரிக்கும் சின்னாற்றுக்கும் இடையே பெரிய தோப்பு. இலுப்பை, மா, புளிய மரங்கள் ஏரியின் தென்கரைச் சரிவில் அடர்த்தியாக இருந்தன. கருப்பையா கோவில், திரௌபதை அம்மன் கோவில்கள் ஏரிக்குத் தென்கரையை ஒட்டி உள்ளன. ஏரியின் கீழ்ப்புறம் அய்யனார் கோயில், தென்புறம் சிவன் கோயில்; இரண்டு தெருக்கள் வடக்குத் தெற்காக. ஊரில் பாதி வீட்டுக் காரர்கள் எனக்குத் தாய்மாமன்கள்; இரண்டு பங்காளிகள் வீடுகள். அதனால் நான் அவ்வூரில் செல்லப் பிள்ளையாக வளர்ந்தேன்.

இரண்டு பார்ப்பனக் குடும்பங்கள். பஞ்சாங்கப் புரோகிதம், பெருமாள் கோயில், சிவன் கோயில் படைப்பது - ஒரு பார்ப் பனக் குடும்பத்தின் தொழில்.

ஊரார் எல்லோரும் அந்த வீராசாமி அய்யரையும், அவரது மகன்களையும் 'சாமி!' என்றே அழைப்பார்கள்.

எப்போதும் ஆற்றுக்கு வடப்புற நிலங்கள் பச்சைப் பசேலென இருக்கும். எதனால்? ஓராண்டில் 9, 10 மாதங்கள் வடக்கலூர் அக்ரகாரம் ஏரியில் நீர் வற்றாமல் இருக்கும்; சித்திரை, வைகாசியில் வற்றும்; வற்றிய குட்டையில் ஒரு நாள், ஊரார் மீன் பிடிப்பர்; ஏழைகள் ஏரியில் வெள்ளரித் தோட்டம் போட்டு சிறு வருவாய் பெறுவர்.

ஏரிக்கு ஏது தண்ணீர்?

சின்னாற்றின் குறுக்கே, இப்போது உள்ள எரையூர் சர்க்கரை ஆலைக்கு வடக்குப் பக்கம் ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தை ஒட்டி, வடகரை ஓரமாக, 15 கி.மீ. தொலை வுக்கு நீர்வரத்து வாய்க்கால் 4 அடி ஆழத்தில் இருந்தது. சித்திரை, வைகாசி மாதங்களில் காலை 4 மணிக்குப் புறப் பட்டு வடக்கலூர் அக்ரகாரத்திலிருந்து குறைந்தது 50 ஆண் கள் மண்வெட்டி, வெட்டுக்கூடை, கொடுவாள் அல்லது வாங்கு இவற்றையும் தூக்குவட்டாயில் பழைய சோற்றையும் எடுத்துக் கொண்டு, வாய்க்காலின் தலைப்பு இடத்துக்குப் போய், 15 கி.மீ. தொலைவுக்கும் தூர் மண்ணை வெட்டி, கூடையில் அள்ளிக் கரையில் கொட்டுவார்கள். வாய்க்காலில், கரை ஓரங் களில் வளர்ந்துள்ள புல், முட்செடி, சப்பாத்தி இவற்றை வெட்டி அப்புறப்படுத்தி, வடக்கலூர் அக்ரகாரம் ஏரியின் மேற்குக் கடைசியில் உள்ள கலங்குகள் வரையில் வரத்து வாய்க் காலை ஆழப்படுத்திவிடுவார்கள்.

சின்னாற்றுப் பாலத்துக்கு மேல்புறம் மணலால் ஆண்டு தோறும் ஒரு பெரிய தடுப்பைக் கட்டிவிடுவார்கள்.

**தென்மேற்குப் பருவமழை பெய்யும் போதும் வட கிழக்குப் பருவமழை பெய்யும் போதும் 9 மாத காலம் அந்த வாய்க்காலில் சின்னாற்றுத் தண்ணீர் வந்து கொண்டே இருக்கும்.**

சூன் முதல் மார்ச்சு வரையில் இலப்பைக் குடிகாடு பள்ளிக்குப் போகிற மாணவர்கள் - ஏரிக்கலங்குகள் ஏழையும் தாண்டிவந்து, 200 அடி கரை மேல் நடந்து, 500 அடி தொலைவுக்கு, கோவணத்துடன், புத்தகமூட்டையைத் தலையிலே வைத்துக்கொண்டு வயிற்றளவுத் தண்ணீரில் காலை, மாலை போய்த்தீர வேண்டும். இன்று 85 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தச் சின்னாற்று வரத்து வாய்க்கால் எங்கே?

வீடுதோறும் வரி தண்டி, குறிப்பிட்ட கூலி கொடுத்துத் தான் திடமான ஆண்களை வாய்க்கால் தூர் எடுக்க அனுப்புவார்கள். கணவனை இழந்த தாய்மார்கள், ஓர் ஆள் கூலியில் பாதி கொடுப்பார்கள்.

**இதற்குப் பெயர்தான் குடி மராமத்து - அதாவது குடி மக்களே தங்கள் பாசன வாய்க்கால்களைச் சீர் செய்து கொள்ளுவது.**

சின்னாற்று நீரை அன்றி, வடபுறம் உள்ள வடக்கலூர் ஏரியிலிருந்தும் கலங்கு வழியாக வெள்ளாற்று நீரும் அக்ர காரம் ஏரிக்கு வரும். எப்படி?

திருச்சி-சென்னை நெடுஞ்சாலையில், தொழுதூரில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலம் இருக்கிறது. அதில் பெரிய தடுப்புக் கதவுகள் உண்டு.

இரண்டு பருவ மழைகளின் போதும், வெள்ளாற்றில் வரும் நீரைத் தடுத்து, வடகரை வழியாக சிறு முளை எமனேரி என்கிற வெலிங்டன் ஏரிக்கு நீர்போக ஒரு பெரிய வாய்க் காலை அரசுப் பொதுப் பணித்துறையே வெட்டி இருக்கிறது.

வெள்ளாற்றின் தென்கரையை ஒட்டி ஒகளூர் ஏரி, வடக்கலூர் ஏரிகளுக்கு என்று அந்த இரண்டு ஊர்க்காரர் களும் ஆண்டுதோறும் மராமத்து வேலை செய்து, வெள்ளாற்று வாய்க்காலைத் தூர் வாரி விடுவார்கள்.

வடக்கலூர், பழைய அரசமங்கலம், வடக்கலூர் அக்ரகாரம், கத்தாழைமேடு ஆகிய நான்கும் ஒரே வருவாய் ஊர்கள் (ரெவின்யூ கிராமம்).

ஆதலால் வெள்ளாற்று நீரால் வடக்கலூர் ஏரி நிரம்பியவுடன், மீதி நீரைத் தடங்கலின்றி, வடக்கலூர் அக்ரகாரம் ஏரியில் விட்டுவிடுவார்கள்.

இப்படி, வாய்க்கால்களை மட்டுமே ஊரார் மராமத்து செய்வார்கள். எனக்கு விவரம் தெரிய, ஏரிகளைத் தூர் எடுப்பதை அரசுப் பொதுப்பணித் துறைதான் செய்தது.

1960 வரையில் பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் முதல் ''லஸ்கர்'' என்கிற அரசுப் பொறுப்புக் கீழ்வேலை வரையில் 100க்கு 90 பேர் பார்ப்பனர்களே!

**மூன்றாண்டுக்கு ஒருமுறை ஏரி ஒவ்வொன்றும் தூர் வாரப்படும். அதற்கான முழுச் செலவையும் அரசு செய்யும்.**

தூர் எடுப்போர் நீண்ட சதுரக் குழிகளாக வெட்டி, வெட்டிய மண்ணை ஏரிக்கரையில் கொட்டுவார்கள்.

ஒவ்வொரு குழியிலும் மண் எடுத்த உயரத்தை அளப்ப தற்காக, இரண்டு முட்டுகளை விடுவார்கள்.

பொதுத்துறைக்கான கண்காணிப்பாளர் (Supervisor) நேரில் பார்வையிட்டு, முட்டுகளையும், குழிகளின் நீள அகலங்களையும் அளந்து உரிய கணக்குச் செய்வார். அவர்கள் அப்போது பெறும் கைக்கூலி என்பது, ஒரு சேர் எடையுள்ள வெண்ணெய், பச்சை நிலக்கடலை, ஒரு வேளை நெய்யுடன் சாப்பாடு, இவை மட்டுமே. குத்தகை எடுத்த ஒப்பந்தக்காரரிடம் 5 விழுக்காடு கைக்கூலி அதிகாரிகள் பெறுவர். இவர்கள் அன்று பார்ப்பனர்களாகவே இருந்தார்கள்.

இன்று அதிகாரிகள் சூத்திரர்களே; அமைச்சர்கள் நேற்று சூத்திரர்களே; இன்றும் 99 விழுக்காட்டுப் பேர் சூத்திரர்களே!

ஆனால் 1967க்குப் பிறகு பணம், பணம், பணம்தான் ஆளுவோருக்கு முதன்மை, முதன்மை என்று ஆகிவிட்டது.

அதன் விளைவாகத்தான் 2015 அக்டோபர் 26 முதல் திசம்பர் 10 வரையில் தமிழக மக்கள் கொடிய வெள்ளத்துக்கு ஆளாக வேண்டிய துன்ப நிலைக்கு ஆளானோம்.

வடக்கலூர், பழைய அரச மங்கலம் நிலங்கள் பெரும்பாலும் ரெட்டியார் வகுப்பினருக்குச் சொந்தம். வடக்கலூர் அக்ரகாரம், கத்தாழைமேடு நிலங்கள் பெரிதும் வன்னியர் களுக்குச் சொந்தம். இவர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத வேளாண் பண்ணைக்காரர்களாக உழைத்தவர்கள் வடக்கலூர், கிளியூர் ஆதித்திராவிட வகுப்பினர்.

மேலே கண்ட 4 ஊர்களிலும் குறுவையில் எள், நிலக் கடலை, துவரை பயிராகும். ஆடிப்பட்டத்தில் கரும்பும் நெல்லும் கருகருவென வளரும்.

வெள்ளையர் காலத்தில் அவுரிச் செடி பயிரிட்டு, அவுரிச் சாயம் (இயற்கை அவுரி நீலம்) உருவாக்கி நெசவுத் தொழிலுக்கும், கோயில் ஓவியங்களுக்கும் கொடுத்தவர்கள் வடக் கலூர் அக்ரகாரம் மக்கள்.

1940 வரையில் என் போன்றவர்கள், சிறு பருவத்தில் அவுரித் தொட்டிகளில் பதுங்கிப் பதுங்கி விளையாடி இருக் கிறோம்.

ஊர் முழுவதும் நெல் போர் அடிப்பதும், கரும்பு ஆலைகள் வெல்லம் செய்வதும் இருந்தும் - அன்று அதிகம் பேர் படிக்கவில்லை.

முருக்கன்குடியிலும், வடக்கலூர் அக்ரகாரத்திலும் நான் தான் 1946இல் பள்ளியிறுதி வகுப்புத் தேறிய முதல் படிப்பாளி.

இன்று இவ்வூர்களில் நூற்றுக்கணக்கானோர் படித்திருக் கிறார்கள். சிலர் அரசுப் பணிகளில் இருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் பலரும் 1, 2, 3 இலக்கம் ரூபா செலவு செய்து சவுதி அரேபியா, துபாய், சிங்கப்பூர் சென்று 10, 15 ஆண்டு கள் அங்கே சம்பாதித்து வந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்கள் தம் ஊரிலுள்ள கோவில்களுக்கு இலட்சக்கணக்கில் செலவிடும் மூடர்களாக இருக்கிறார்கள்.

புன்செயில் விளைந்த கடலை, எள் இவற்றைக் கொண்டு எண்ணெய் ஆட்டிக் கொண்டோம்.

**வெள்ளைச் சட்டை போட்ட பிறகும் சொந்த ஊருக்குப் போனால் 30, 40 அகவை வரையில் ஆடு, மாடுகள் மேய்த்தோம்; புல் அறுத்து வந்தோம்; வரகுச் சூடு, நெல்தாம்பு அடித்தோம்; கரும்பு ஆலை யில் மாடுகளை ஓட்டினோம். இன்றைய படித்த இளைஞர்கள் இவற்றைச் செய்வது இழிவு என்று எண்ணுகிறார்கள்.**

இன்று எல்லா ஏரிகளும் தாம்பாளம் போல் ஆகிவிட்டன. எல்லா வரத்து வாய்க்கால்களும், நீர்ப்போக்கு வாய்க்கால் களும் தூர்ந்து போய்விட்டன.

1962க்குப் பிறகு தமிழகத்தை ஆண்டவர்களும்; ஏரி களை ஆழப்படுத்த வேண்டிய சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அமைச்சர்கள், பொதுப் பணித்துறை அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சிகளின் தலைவர்கள், ஊராள்வோர் (V.A.O.)கள், கணக்கர்கள் - எல்லோரும் ஏட்டில் போட்ட எல்லாத் திட்டங்களுக்கான பணத்திலும் பாதிக்குமேல் கைக்கூலியாகப்பெறும் கொள்ளைக்காரர்களாக மாறிப் போனார்கள்.

இந்தக் கேடுகளைக் கண்ணாரக் கண்ட பிறகும் - தன் சாதி, தன் சொந்தம், தன் கட்சி என்கிற காட்டுவிலங்காண்டித் தனக்காரர்களாக - கூட்டுக் கொள்ளைக்காரர்களாக வாழ்ந்து, மக்களையும் நம்மையும் துன்பக் கேணியில் தள்ளிக் கொண் டோம்; தள்ளிவிட்டோம்.

இவையெல்லாம் முறையா எனச் சிந்தியுங்கள்! இக்கேடு கெட்ட நிலையை ஒழிக்க எல்லோரும் பாடுபடுங்கள்!

## பெரியார்–நாகம்மை கல்வி அறக்கட்டளை தாம்பரம் பெரியார் பெருந்தொண்டர் இரண்டாந்தடவை ரூ.1,00,000 நன்கொடை

காஞ்சி மாவட்டம், தாம்பரம் பெரியார் பெருந்தொண்டர் ஒருவர், பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளைப் பணிகளைப் பாராட்டி, ரூபா 1,00,000 (ஓர் இலக்கம்) இரண்டாந்தடவையாக நன்கொடையாக வழங்கினார்.

**பணிச்சுமைகள் :**

| | | |
|---|---|---|
| * | **நூலகம் ஊதியம், அறக்கட்டளை, நிருவாகப் பணிகளுக்கு மாதந்தோறும்** | **ரூ. 25,000** |
| * | **40 ஞாயிற்றுக்கிழமைகளில் பயிற்சி பெறும் 50 தோழர்-தோழியர்களுக்கு, ஒருநாள் பகல் உணவு, இருவேளை தேநீர் செலவுகளுக்கு ஞாயிறுதோறும் ரூ.5000 வீதம் மாதச் செலவு** | **ரூ. 20,000** |
| * | **பெரியார்-நாகம்மை இலவசப் படிப்பகத்துக்கு 10 நாளிதழ்கள்; 10 வார, மாத இதழ்களுக்கு மாதந்தோறும் செலவு** | **ரூ. 2,000** |
| * | **அஞ்சல், தொலைபேசி செலவு மாதந்தோறும்** | **ரூ. 3,000** |
| * | **போக்குவரத்துச் செலவுகள் மாந்தோறும்** | **ரூ. 3,000** |

இவ்வளவு பெருஞ்செலவுகளுக்கும், தமிழ்ப் பெருமக்கள் தாம், தாங்களாகவே முன்வந்து ரூ.10,000; ரூ.25,000; ரூ.50,000; ரூ.1,00,000; ரூ.2,00,000 என வழங்க வேண்டும் என வேண்டுகிறோம்.

**எங்களின் பயிற்சி வகுப்புப் பாடத்திட்டங்களைப் பாருங்கள் (சனவரி இதழில்) :**

**தந்தை பெரியார் பெயரால், இப்படிப்பட்ட ஒரு பயிற்சி நிறுவனம், தமிழகத்திலோ, இந்தியாவிலோ வேறு இல்லை.**

**அருள்கூர்ந்து, இதன் முதன்மையை உணர்ந்து தமிழகப் பெருமக்கள் நன்கொடை வாரி வழங்குங்கள் என மீண்டும் வேண்டுகிறோம். இந்த அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு, 80ஜி-விதியின் கீழ், வருமானவரி தள்ளுபடி உண்டு.**

**- வே.ஆனைமுத்து**

தலைவர்-மேலாண்மை அறங்காவலர் மற்றும் அறங்காவலர்கள்

முகவரி : **பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை**

எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 098.

கைப்பேசிகள் : 9444804980, 9444105892

## தமிழர்க்காக நாம் செய்பவை என்ன? தந்தை பெரியார் அவர்கள், "பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கம்" என்பதை 26-12-1926இல் மதுரையில் நிறுவினார்.

* 1929 முதல் 1949 முடிய 3 நாள்கள், 8 நாள்கள் எனப் பயிற்சி வகுப்பை ஆண்டு தோறும் நடத்தினார்.
* 1964 முதல் 1972 வரையில் ஏதேனும் ஓர் ஊரில் 8 நாள்கள் பெரியார் பயிற்சி அளித்தார்; அவருடன் தங்கி வே. ஆனைமுத்துவும் பயிற்சி அளித்தார்; பயிற்சி பெற்றார்.
* பெரியார் இயக்கத் தொண்டர்கள், ஆண்டுதோறும், இப்போது, ஓரிடத்தில் சில நாள்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள்.

## இதற்கிடையே, நாம் செய்வது என்ன?

"பெரியார் ஈ.வெ.ரா. இராமசாமி - நாகம்மை
கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை"
என்ன செய்கிறது என்பதை எல்லாத் தமிழரும் அறிந்திடுங்கள்! ஆதரவு தாருங்கள்!
பயிற்சி பெற்றிடுங்கள்! "சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி" வகுப்பில்,

### 2015 ஆகத்து முதல் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் :

* வள்ளுவம், பெரியாரியம் : வே. ஆனைமுத்து
* பௌத்தம் : துரை. கலையரசு
* காந்தியம் : முனைவர் சூ. குழந்தைசாமி
* மார்க்சியம், அம்பேத்கரியம் : க. முகிலன்
* இலெனினியம் : இரா. குபேந்திரன்
* தமிழிலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு: முனைவர் க. இராமசாமி
  பிழை திருத்தம் புலவர் தமிழேந்தி
* கணினி அறிமுகம் : முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன்
  சோ. அண்ணாதுரை

வருகை தரு பேராசிரியர்கள் :
பேராசிரியர் பொற்கோ, பொறிஞர் ஆ. கிருஷ்ணசாமி

**2015 ஆகத்து முதல், ஞாயிறு தோறும்**
**40 ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது!**

***இது, உங்களுக்கான பெரியாரியல் கொள்கைப் பயிற்சி நிறுவனம்!***
***எல்லோரும் இதை வளர்த்தெடுக்க முன் வாருங்கள்!***

***நல்ல அளவில் நன்கொடை தாருங்கள்!***

# மூடநம்பிக்கைக்கு அதிர்ச்சி மருத்துவம்

- குட்டுவன்

இந்திய மக்கள்தொகை 2015இல் ஏறக்குறைய 128 கோடி எட்டியிருக்கும். குறிப்பாக மக்கள் தொகையில் 15-34 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் பங்கு 35 விழுக் காடாகும். ஆனால் இந்தியாவில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள்-ஏற்றத்தாழ்வு அடிப்படை வசதிகள் இல்லாதவர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 40 விழுக்காடாகும். இந்தப் புள்ளிவிவரங்கள் மாநிலங் களுக்கு மாநிலம் வேறுபட்டு இருக்கின்றன. தலா வருமானம், வறுமையின் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர், அனைவருக்கும் கல்வி, சுகாதாரம்-கருவுற்ற தாய்மார் களின் இறப்புவீதம், குழந்தைகள் இறப்புவீதம் இது போன்ற பல்வேறு முதன்மையான அளவுகோல்களின் அடிப்படையில் மானுட மேம்பாட்டுக் குறியீடுகள் (HDI) கணக்கிடப்பட்டு, உலக நாடுகளின் தர வரிசைப் பட்டியல் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. இந்தத் தர வரிசைப் பட்டியலில் இந்தியா 134ஆம் இடத்தில் உள்ளது.

இந்தியாவில் உள்ள மானுட மேம்பாட்டுத் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டு அல்லது மூன்றாம் இடத்தில் மாறி மாறி இடம் பெற்று வருகிறது. இந்தியப் பொருளாதாரத்தினுடைய வளர்ச்சியை வெறும் பொரு ளாதாரக் காரணிகளால் மட்டும் உருவாக்க முடியாது. வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகளில்கூட எல்லோ ருக்கும் கல்வி சுகாதாரம் போன்ற சமூக வளர்ச்சிக் கூறுகளை இனங்கண்டு கல்வியை வளர்த்தெடுத்தத னால்தான் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் உயர்கல்வி ஓங்கி வளர்ந்துள்ளது; ஆய்வுத் துறையில் உச்சத்தை அடைந்தது. இயற்பியல், வேதியல், மருத்துவ இயல் போன்ற துறைகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளால்தான் இந்தியா உட்பட உலக நாடுகளில் சராசரி மனித வாழ்நாள் பெருகி வருகிறது. அறிவியல் மருத்துவத் துறையில் தன்னல மற்ற அர்ப்பணிப்பால்தான் பல அறிவியல் அறிஞர்கள் நோபல் பரிசினைப் பெற்றார்கள். சர்.சி.வி.ராமன், சுப்ரமணியம், சந்திரசேகர், வெங்கட்ராமன் ராமகிருஷ் ணன் ஆகிய மூவர் மட்டுமே அறிவியலில் நோபல் பரிசினைப் பெற்ற இந்தியர்கள்.

மறைந்த சுப்ரமணியம் சந்திரசேகர் இந்தியா போதிய அளவிற்கு அறிவியல் வளர்ச்சியை எட்டாததற்கு மத மூடநம்பிக்கைகள்தான் காரணம் எனப் பல்வேறு உரைகளில் சுட்டினார். வாழ்நாள் இறுதிவரை பகுத்தறி வாளராகவே வாழ்ந்து மறைந்தார். இந்தியாவில் இன்றளவும் அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டாலும் அறிவியல் சார்ந்த பகுத்தறிவு உணர்வு இன்றும் வளரவில்லை. மெக்காலே ஆங்கிலவழிக் கல்வியை இந்தியாவில் புகுத்தினார் என்ற கருத்துதான் எல்லோரிடமும் மேலோங்கி இருக்கிறது. 2012இல் இந்தியாவின்



மங்களூரு குக்கே சுப்ரமணிய சுவாமி கோயிலில் பலத்த பாதுகாப்புடன் எச்சில் இலை மீது உருளும் சேவை நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு பார்ப்பனர்கள் உண்ட எச்சிலை மீது உருளுவதற்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்தால் இப்போது பசுக்கள் தின்ற எச்சிலை மீது உருளும் சேவை நடந்தது

புதுமைக்கான முன்னோடி மெக்காலே (Macaulay – Pioneer of India's Modernization by Zareer Masani) என்ற நூலில் இதுவரை வெளிவராத பல கருத்துகள் சுட்டப் பட்டுள்ளன.

மெக்காலே இந்தியாவில் பணியாற்றிய போது சமஸ்கிருத மொழிப் பள்ளிகள் 'மதராசா பள்ளிகளை முழுமையாக மூட வேண்டும்' இதற்கு மாறாக ஆங்கிலக் கல்வியின் வழியாக அறிவியல் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இசுலாமியர்களும் பார்ப்பனர்களும் இணைந்து இங்கிலாந்துக்குச் சென்று அரசிடம் அறிவியல் சார்ந்த பாடங்களைக் கற்பிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று வாதிட்டனர். மெக்காலே விற்கு கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் காட்டினர். இவர்கள் கொடுத்த அழுத்தத்தினால் சீர்த்திருத்தக்காரர் எனப் போற்றப்பட்ட பென்டிங் பிரபு கூட படிப்படியாகத்தான் கல்வி சீர்த்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும்-சமஸ்கிருத, உருது மொழிகளுக்குக் கொடுக்கப்படும் நிதியை நிறுத்தக் கூடாது என்றும் முடிவெடுத்தார். இங்கி லாந்துக்குச் சென்ற பின்பு நாடாளுமன்ற உறுப்பினராகி மெக்காலே இந்தியாவில் அறிவியல் கல்வியும் ஆங்கில கல்வியும் சேர்ந்தே கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என வாதிட்டார். வெள்ளையர்களாலேயே தீவிரமான சீர்த்திருத்தத்தைக் கல்வியில் இந்தியாவில் கொண்டு வர முடியவில்லை அதற்குக் காரணம் மதவாத சக்திகள்தான் என்பதை இந்நூல் விவரிக்கிறது. மேலும் மெக்காலே இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு அளித்த பங்கினையும் நேர்மையான நிர்வாகியாகச் செயல்பட்டதையும் நேர்த்தியாக விளக்குகிறது இந்நூல்.

1950களில் இந்தியாவிற்கு வந்து பல திங்கள்கள் தங்கி நேரு உட்பட பல இந்தியத் தலைவர்களைச் சந்தித்து உரையாடிய பெருமை பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற குன்னர் மிர்தலையே (Gunnar Myrdal) சாரும். இவர் எழுதிய ஆசிய நாடகம் (Asian Drama) என்ற நூலில் இந்திய நாட்டில் வேரூன்றி இருக்கின்ற சாதிய அமைப்பை உடைத்தால் ஒழிய பொருளாதார வளர்ச்சியைச் சீரான முறையில் எட்ட முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினார். சமூகப் புரட்சியில்லாமல் பொருளாதார வளர்ச்சி இந்தியாவில் நிலை பெறாது என்று கூறினார்.

1990ஆம் ஆண்டிற்குப் பிறகு உலகமயமாதல் கொள்கை பின்பற்றப்பட்டது. தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயன்கள் கூட ஆதிக்க சமூகத்தினால்தான் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலையில்தான் மற்ற பின்தங்கிய இவர்களே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் கணினி, தகவல் தொழில்நுட்பத் துறையில் இடம் பெற்றனர். மெக்காலே காலத்தில் ஆங்கிலத்தை வேண்டாமென்று எதிர்த்தவர்கள் வெள்ளையனைச் சுரண்டி வெள்ளையன் மொழியைக் கற்று அதன் முழுப் பலனையும் அடைந்தவர்கள்தான் இந்த உயர் வகுப்பினர் என்பதை ஏராளமான புள்ளிவிவரங்கள் நமக்குச் சுட்டுகின்றன. தாய்மொழி வளர்ச்சிக்கும் கல்விக்கும் இன்றும் பெரும் தடையாக இவர்கள்தான் உள்ளனர். இன்றளவும் இந்திய ஆட்சிப் பணியிலும் நீதித் துறையிலும் உயர்கல்வித் துறையிலும் இவர்களே பேராதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஆனால் உயர் வர்க்கத்தினர் பெரும்பாலானோர் சமஸ்கிருத மொழி ஆதிக்கத்தை மீண்டும் கொண்டு வர எல்லா முயற்சி களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பொதுத் துறை நிறுவனமான நெய்வேலி நிலக்கரிக் கழகம் 2015இல் சமஸ்கிருத மொழியில் சிறந்த முறையில் கட்டுகரைகள், நூல்களை எழுதியவர்களுக்கு அகில இந்திய அளவில் 10 பரிசுகளைப் பல இலட்ச ரூபாய் மதிப்பில் அளிக்கப்படும் எனச் செய்தி வெளியிட்டது.

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் படி இந்தியாவிலேயே வெறும் 14135 பேர் மட்டுமே பேசும் சமஸ்கிருத மொழிக்காகப் பொதுத்துறையின் பணம் வாரி வழங்கப்படுகிறது. நடுவண் அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை சமஸ்கிருத மொழிக்கு அதிக அளவில் தொடர்ந்து நிதி அளிக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சுட்டப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகளில் ஒன்றான 51ஏ(எச்), அறிவியல் உணர்வு-ஆய்வு இவை களை மேம்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இந்த அடிப்படைக் கடமைகளுக்கு எதிராக மெக்காலே காலத்திலிருந்து இன்றுவரை அரசினுடைய எல்லாப் பலன்களையும் துய்த்துக் கொண்டு மூட நம்பிக்கைகளை அறிவியல் துறைகளிலேயே வளர்த்து வருகின்றனர். பகுத்தறிவாளர்களான தபோல்கர், பன்சாரே, கல்புர்கி ஆகியோர் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும் குறிப்பாக இந்து மதத்தில் காணப்படுகிற மானுட வளர்ச்சியைத் தடை செய்யும்-பல பிற்போக்கான மக்களை இருட்டறை யில் தள்ளும் குருட்டுத்தனமான கருத்துகளைக் கடு மையான முறையில் விமர்சனம் செய்தனர். இதற்கா கவே இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மத எதிர்ப்புக் கருத்துகளை எடுத்துரைத்தார்கள் என்பதற்காக இவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மூவரும், ஒரே விதமான துப்பாக்கியும் குண்டுகளும் பயன்படுத்தப் பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று கர்நாடக அரசின் உயர்காவல் துறை அதிகாரிகள் உறுதிப்படுத்து கின்றனர். ஆனால் இதற்கு நடுவண் அரசின் புலனாய் வுத் துறை ஒத்துழைக்க மறுக்கிறது என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் கண்காணிப்பு எல்லாம் கெஜ்ரிவாலையே சுற்றிச்சுற்றி வருகிறது. மேலும் தகவல் தொழில்நுட்பத் துறையால் நாள்தோறும் பல கோடிகளை இலாபமாக ஈட்டும் அச்சு, ஒளி ஊடகங் களில் மூட நம்பிக்கைகளை வளர்க்கும் சோதிடம் நாள் நட்சத்திர கணிப்பு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஊடகங்களில் காலை எழுந்தால் பக்திப் பாடல்கள் மத மூட நம்பிக்கைகள் ஆகியவைதான் நம் கண் முன்னே கட்டாயம் நிறுத்தப்படுகின்றன. நாளேடு களும் வார ஏடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு பக்கம் மூடநம்பிக்கை மாதவாத எதிர்ப்புக் கட்டுரைகள்; மறுபக்கத்தில் பக்தி பரவசம் சொட்டும் புனைந்துரைகள் சோதிடக் கணிப்புகள் நிரம்பி சாக்கடை போல் வழிகின்றன. இந்திய மாநிலங்களிலேயே கர்நாடக முதல்வர் சித்த ராமையா மட்டும்தான் சோதிட மூட நம்பிக்கைகளுக்கு எதிராகச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித் துள்ளார். பன்சாரே மறைந்தபோது மராட்டிய மாநிலத்தி லும் இது போன்று ஒரு சட்ட வடிவம் கொண்டு வரப்படும் என்ற அரசு அறிவித்தது. ஆனால் மராட்டிய மாநிலத்தில் பாஜக அரசு அமைந்தவுடன் இது பற்றிக் கவனம் செலுத்தவில்லை. மாநில அரசு கொலையாளிகளைக் காப்பாற்றும் மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

புத்தர் காலத்தில் இருந்து பெரியார் காலம் வரை மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துக் களங்கள் உருவாக்கப்பட்டன. இன்றும் தமிழ்நாட்டில் பெரியாரின் தொண்டர்களால் இந்தப் போர் தொடர்கிறது. இதற்குச் சமூக வலைத்தளங்கள் பெரிதும் பயன்படுகின்றன; பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

நட்சத்திரங்களைப் பார்ப்பது சோதிடம் கணிப்பது குறி யீடுகளைக் கற்பித்து நல்ல பலன் ஏற்படுமா ஏற்படாதா என்று கணிப்பது மற்றும் நற்செயல் விளையுமா தீச் செயல் உண்டாகுமா என்று மக்களை மூடநம்பிக்கை களில் ஆழ்த்தும் கருத்துகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றார் உலகின் முதல் பகுத்தறிவாளரான

புத்தர். அறிவியல் பயன்களைத் துய்த்துக்கொண்டே இன்றும் குழந்தை பிறக்கும் நேரத்தையும் நாளையும் கணக்கிட்டு நட்சத்திரத்தைக் கணிக்கிறார்கள் சோதிடர்கள். தாய் மொழியைப் புறக்கணித்து வடமொழியில் பெயர் சூட்டுகினறனர். குறிப்பாக இரண்டு குழந்தைகள் பிறக்கும்போது முழுமையான முறையில் அறிவியல் அடிப்படையைத் தகர்க்கிறார்கள்.

**தமிழகத்தின் புகழ்மிக்க இரட்டையர்களான அரசியல் அறிஞர் ஏ.இராமசாமி, மருத்துவ அறிஞர் ஏ.லட்சுமணசாமி பற்றய ஒரு சுவையான நிகழ்வை அவரது நண்பர்கள் சுட்டியுள்ளனர். பிள்ளைப்பேறு மருத்துவ மேதையான ஏ.லட்சுமண சாமி அவர்கள் இரண்டு குழந்தைகள் எப்படிப் பிறக்கின்றன என்பதைப் பற்றி ஓர் ஆய்வுக் கருத்தினை வெளியிட்டார். குழந்தைப் பிறக்கும்போது இரண்டாவதாகக் கருவுற்ற குழந்தைதான் முதலில் வெளி வருகிறது. முதலில் கருவுற்ற குழந்தை இரண்டாவதாக வெளி வருகிறது. மருத்துவ அறிவியலின்படி இரண்டாவதாகப் பிறக்கும் குழந்தைதான் மூத்த குழந்தையாகும். முதலாவதாகப் பிறக்கும் குழந்தை இளையதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் இன்றளவும் பெரும்பான்மையான குடும்பங்களில் ராமன், லட்சுமணன் என்று பெயர் சூட்டி பார்ப்பனியத்துக்கும் மூடநம்பிக்கைக்கும் அடிபணிகிறோம். எங்கள் வாழ்க்கையிலும் இதுதான் நடைபெற்றது என்றார் மருத்துவ அறிஞர் லட்சுமணசாமி.**

இவ்வாறாக அன்றாட வாழ்வில் மதத்திற்காக-சடங்குகளுக்காக-திருமணத்திற்காகச் செலவினைப் பெருக்கிக் கொண்டே வருகின்ற போக்கு உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் நிலை பெற்றுள்ளது. மிகக் குறைந்த அளவே தங்கத்தை உற்பத்தி செய்யும் இந்தியாவில் தங்க நுகர்வு மக்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் 2015ஆம் ஆண்டு அட்சய திருதய அன்று ஏறக்குறைய ரூ.3000கோடி அளவிற்குத் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மோடி அரசு பொறுப்பேற்ற பிறகு தங்கப்பத்திரம் விற்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் தோல்வியடைந்துவிட்டது என்பதை அண்மையில் நடுவண் அரசின் மைய வங்கி அறிவித்துள்ளது. எனவே மூடநம்பிக்கை சமூக வளர்ச்சியையும் தடுத்து பொருளாதாரத்தில் அரசு எடுக்கும் முற்போக்கான நடவடிக்கைகளையும் புறந்தள்ளுகிறது. திருப்பதி, சிதம்பரம், வேலூர், பொற்கோயில், திருவரங்கம் போன்ற பல நூற்றுக்கணக்கான கோயில்கள் இன்றும் தங்கத்தால் வேயப்பட்ட கோபுரங்களைக் காட்சிப்படுத்துகின்றன. நாட்டிற்குத், தேவையான தங்கம் கோயில்களில் கொட்டப்படுகிறது. ஆனால் அரசோ தங்கத்திட்டத்தால் தோல்வியுற்று தடுமாறுகிறது. எனவேதான் அண்மையில் நோபல் பரிசு பெற்ற அறிஞர் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் மைசூர் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் மூடநம்பிக்கைக்கு எதிராகப் போர்க்கொடி எழுப்பியுள்ளார். அவரவர் வீட்டைத் தூய்மையாகவும் வெளிச்சமாகவும் வைப்பதற்கு சோதிட ஆலோசனைகள் தேவையில்லை. மூடநம்பிக்கைகள் சோதிடம் போன்ற அடிப்படை ஆதாரங்கள் இல்லாத பல வழக்கங்கள் இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுத்து வருகின்றன. இந்தியர்கள் எதையும் ஆராய்ந்து நோக்கும் பகுத்தறிவாளர்களாக மாற வேண்டும். இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க மங்கள்யான் விண்கலம் விண்ணில் ஏவப்படுவதற்கு முன்பு அத்திட்டத்தின் இயக்குநர் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் கே.ராதாகிருஷ்ணன் திருப்பதிக்குச் சென்று பிரார்த்தனை செய்தார். இது எனக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. மேலும் மங்கள்யான் விண்கலத்தை ஏவுவதற்குப் பொருத்தமான நாளாகச் செவ்வாய்கிழமையைத் தேர்ந்தெடுத்தனர். இது போன்ற நடவடிக்கைகள் மேற்கு நாடுகளில் காண முடியாது. மக்களிடையே உயிரியல் சார்ந்த அடிப்படைப் புரிதல் இல்லை.

ஆண் குழந்தையை ஈன்றெடுக்காததற்குத் தாயைக் குறைச் சொல்லும் மூட நம்பிக்கை இந்தியாவில் உள்ளது. குழந்தை ஆணா-பெண்ணா என்பதைத் தீர்மானிக்கும் குரோமோசோம்கள் ஆணிடம்தான் உள்ளன என்பது உயிரியல் அறிவியலாகும். 2009ஆம் ஆண்டு சூரிய கிரகணம் ஏற்பட்ட போது அதனால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்ப்பதற்காக கர்நாடாக அரசு சார்பில் கோயில்களில் பூசைகள் நடத்த தாராளமாக நிதி ஒதுக்கப்பட்டது. விண்வெளி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ள கர்நாடகத்தில் இது போன்ற நிகழ்வுகள் நடப்பது வியப்பளித்தது. ஒரு பக்கம் அதீத தொழில் நுட்பம்-மறுபக்கம் மூட நம்பிக்கைகள் இந்தியாவில் குவிந்துள்ளன. தந்தை பெரியார் வழியில் படித்த வர்கத்திற்கும் ஆளும் வர்க்கத்திற்கும் சாட்டையடி கொடுத்துள்ளார் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன். மூன்றாண்டுகளுக்கு முன்பே சிந்தனையாளன் ஏட்டில் சுப்ரமணியம் சந்திரசேகரையும், வெங்கட்ராமன் ராமகிருஷ்ணனையும் பாராட்டி அக்ரகாரத்தின் அதிசிய அறிவியல் அறிஞர்கள் என்ற தலைப்பில் இக்கட்டுரையாளர் தனது கருத்தினை வெளியிட்டுள்ளார். தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா ஊழல் வழக்கில் தண்டனை பெற்றுச் சிறைக்குச் சென்ற போதும் பின்பு விடுதலையான போதும் அம்மையாரின் அமைச்சர்கள் கோயில்களுக்கு முன்பு ஆடிய ஆட்டங்களையும் இறைக்கப்பட்ட பணத்தையும் பால் குடங்கள் எடுக்கப்பட்டதையும் தமிழ்நாட்டைச் சார்ந்த ராமகிருஷ்ணன் அறிந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாரோ? தந்தை பெரியார் தலைமையில் திராவிட இயக்கம் அளித்த பங்களிப்பை-ஆற்றிய பகுத்தறிவுப் பணிகளைச் சிதைக்க முற்படும் பிற்போக்குச் சக்திகளுக்கு வெங்கட்ராமனின் பேச்சு ஓர் அதிர்ச்சி மருத்துவமாக அமையும் என்பதுதான் உண்மை.

# ஒரு பசு பேசுகிறது...

- பி.எஸ்.லீலா

நான் ஒரு பசு. நான் பேசுவதைக் கேளுங்கள்... உங்களுக்கு நான் 'கோமாதா'. நான் மும்பையில் பிறந்து வளர்ந்தேன். என்னுடைய முன்னோர்களும் அவர்களின் எசமானர்களும் நீண்ட காலத்துக்கு முன்பே மும்பைக்குக் குடியேறியவர்கள்.

மும்பை நகரின் கீழ்ப்பரேல் பகுதியில் நாள் முழுவதும் சுறுசுறுப்பான மக்கள் நடமாட்டம் இருக்கும். கீழ்ப்பரேல் பணம் கொழிக்கும் இடம். அங்குத் தொழிற்பேட்டைகள், வணிகப் பூங்காக்கள், பெரிய மருத்துவமனைகள், கோயில்கள் முதலானவை உள்ளன. என் எசமானியும் அவருடைய பேரனும் கீழ்ப்பரேலில் மக்கள் அதிகமாகப் புழங்கும் இடங்களுக்கு என்னை அழைத்துச் செல்வார்கள். என் கழுத்தில் ஒரு மணி கட்டப்பட்டிருக்கும். அங்கே வேலைக்காகச் செல்லும் மக்கள் கடவுளிடம் வேண்டுதல் செய்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. பேருந்து நிறுத்தத்தின் ஒரு கம்பத்தில் என் எசமானி என்னைக் கட்டி வைப்பார். என் அருகில் அழுக்கான ஒரு துண்டை விரித்து வைப்பார்-மக்கள் காசு போடுவதற்காக. நடைபாதையை அடைத்துக் கொண்டு நான் நிற்பது பற்றி யாரும் எரிச்சலடைவதில்லை. எனக்குத் தொல்லைதர யாரும் முனைவதில்லை. காலை வேளையில் அலுவலகத்துக்கு விரைந்து நடப்பவர்கள் என்முன் நின்று வணங்கி வேண்டுதல் செய்வார்கள். பதவி உயர்வு, நல்லவேலை, திருமணம், வருமானவரி, நோய்கள், வணிகம் முதலானவற்றில் அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்று என்னை வணங்குவார்கள். இவர்களுடைய வேண்டுதலை நான் கடவுளிடம் எடுத்துரைப்போன் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களின் வேண்டுதல்களை நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பேன். வெளிப்படையாகச் சொல்வதானால், என் தேவைக்காக நான் கடவுளிடம் ஒருபோதும் வேண்டிக் கொண்டதில்லை. ஏனெனில் மாடுகளாகிய எங்களுக்குக் கடவுள்கள் இல்லை... இன்னும் சரியாகச் சொல்வதானால், நாங்கள் நாத்திகர்கள்.

கயிற்றால் கம்பத்தில் என்னைக் கட்டிய பிறகு, என் எசமானி தவிட்டையும் தண்ணீரையும் கலந்து பிசைந்து 'இலட்டு' உருண்டைத் தயாரிப்பார்கள். சர்க்கரையோ, வெல்லமோ அதில் கலப்பதில்லை. ஆயினும் அதற்கு இலட்டு என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த 'இலட்டை' ஒன்று அய்ந்து உருபாவுக்கு என என் எசமானி விற்கிறார். விரித்து வைக்கப்பட்டுள்ள துண்டின் மீது மக்கள் காசைப் போடுவார்கள். பிறகு என் எசமானி அக்காசுகளைத் திரட்டித் தன்னுடைய சுருக்குப் பையில் போட்டுத் தன் உடம்பில் மறைவாக வைத்துக் கொள்வார். சில நாணயங்களைத் தன் பேரனுக்குத் தருவாள். அவள் பார்லே பிஸ்கெட் வாங்கித் தின்பான். எனக்கும் தருவான்.



நகரங்களில் உள்ள மாடுகளிடையே நாங்களும் எங்கள் உடல்நலத்துக்கு ஏற்ற சுவையான நல்ல உணவை உண்ண விரும்புகிறோம். ஆனால் மும்பையில் நான் பசும் புல்லையோ, நல்ல வைக்கோலையோ உண்ண முடிவதில்லை. சாலை ஓரங்களில் கொட்டப்பட்டுள்ள கழிவுப் பொருள்களில் நான் தின்னக்கூடியவற்றை என் நாக்கால் துழாவி எடுத்துத் தின்ன வேண்டியிருக்கிறது. இதற்காகப் பலசமயம் நாய்களுடன் சண்டைபோட வேண்டியிருக்கிறது. காய்கறிக் கழிவுகளைத் தேடித் தின்னும்போது அவற்றுடன் உலோகக் கழிவுகள், பிளாஸ்டிக், சுவரொட்டிகள், கிழிந்த துணிகள் முதலானவையும் சேர்ந்து என் வயிற்றுக்குள் போய்விடுகின்றன. மாடுகளாகிய நாங்கள் மனிதர்களைப் போல் உணவை வாயில் மென்றபிறகு விழுங்குவதில்லை; மாறாக முதலில் விழுங்கிவிட்டு, பிறகு விழுங்கிய உணவை மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து ஆற அமர அசைபோட்டு மென்று மீண்டும் விழுங்குவோம். எங்கள் உடல் நலனுக்குக் கேடான கழிவுகளையும் விழுங்கி விடுவதால் அவற்றை அசைபோட்டு மெல்ல முடிவதில்லை. அதனால் அவை செரிக்காமல் எங்களுக்கு வயிற்றுவலியை உண்டாக்குகின்றன.

இது என்ன வாழ்க்கையோ! எனக்குச் சுவையான பசும்புல் கிடைப்பதில்லை. மும்பை ஒரு 'கான்கிரீட் காடு; இதில் பசும்புல்லுக்கு இடம் ஏது? உயரமான கட்டடங்களை, மூடப்பட்ட நுழைவாயிலைக் கொண்ட வீடுகளை மட்டுமே காணமுடிகிறது. நடைபாதைகளில் வாழ்வோர் நிலை, பன்றிகளைவிட அவலமானதாக இருப்பதைப் பார்க்கும்போது, என்னுடைய வாழ்க்கை எவ்வளவோ மேல் என்று நினைத்துக் கொள்வேன்.

அடிக்கடி என் முன்னோர்களை நினைத்துக் கொள்வேன். அவர்கள் பசும்புல்வெளிகளில் மேய்த்தார்கள். ஆனால் மும்பையில் என் வாழ்நிலையே...! ஒரு துண்டு வைக்கோலை மெல்லுவது பற்றியோ, கஞ்சித் தொட்டியில் கூழ் குடிப்பது பற்றியோ கனவுகூட காண முடியாத நிலையில் இருக்கிறேன்.

எங்கள் முன்னோர் காலத்தில் பசுக்கள் குடும்பத்தின் செல்வமாகக் கருதப்பட்டன. அவைகளைப் பராமரிப்பதற்காகத் தனியாக ஆண்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். மாட்டுத் தொழுவம் மும்பை நகரில் உள்ள குடிசைப் பகுதியைவிடத் தூய்மையாகவும் நன்றாகவும் இருந்தது. கன்றுகளுடன் குடும்பத்தின் குழந்தைகள் கொஞ்சி விளையாடுவார்கள். அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி என அனைவரும் எங்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பார்கள். கோடைக் காலத்தில் பகலில் பலா மரம் அல்லது மாமரத்தின் நிழலில் பசுவைக் கட்டி வைப்பார்கள். பசுவுக்கு வயிரார உணவும் நீரும் தருவதுடன் நாள்தோறும் குளிப்பாட்டுவார்கள்.

மும்பை நகரில் பசுமையான மேய்ச்சல் கிடைக்காதா என்று தேடித்தேடி நான் சோர்ந்துவிட்டேன். நான் நாள் தோறும் பச்சையாகப் பார்ப்பது பாதையில் ஊர்திகள் செல்வதற்காக வழிகாட்டும் பச்சை விளக்கு-அடையாளக்குறி ஒன்றுதான். அந்தப் பச்சையும் உடனே மஞ்சளாகவும் சிவப்பாகவும் மாறிவிடும். நான் நடைபாதையில் அமர்ந்து கொண்டு, பாதையில் சிவப்பு அடையாள ஒளி தெரிந்ததும், சாலையில் திடீரென நிற்கும் பணக்காரர்களின் மகிழுந்துகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். குளிரூட்டப்பட்ட அறைகளில் அமர்ந்து கொண்டு பணம் ஈட்டும் அவர்களுக்கு ஒரு பசுவின் வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்? ஆனால் அவர்கள், அவர்களின் கடவுள்கள் உள்ள கோயில்களில் (கோசாலைகளில்) என்னைச் சிறைவைத்து விடுவார்களோ என்ற அச்சம் என்னை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

(நன்றி : Economic and Political Weekly, நவம்பர் 21, 2015.
பி.எஸ்.லீலா இக்கிழமை ஏட்டின் துணை ஆசிரியர்)

## இசை தோற்றம்

பெரியார் பற்றாளர் - மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி ஆதரவாளர் - நாளை விடியும் இதழாசிரியர் தோழர் பி.இரெ.அரசெழிலன் அவர்களின் மகன் அ.இரா.தமிழமுதன் - வெ.ரெ.இறையரசி இணையர் 2015 சனவரி 18இல் சாதிமறுப்பு - தன்விருப்ப மணமேற்றனர். இவ் இணையருக்கு 06.12.2015இல் ஆண்மகவு பிறந்துள்ளது என்பதை சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினரின் சார்பில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இக் குழந்தைக்கு **இசை** என அழகுத் தமிழில் பெயரிட்டுள்ளனர். இம் மகிழ்ச்சியினைப் பகிரும் வண்ணம் சிந்தனையாளன் இதழுக்கு உருவா 1000 நன்கொடை அளித்துள்ளனர்.

## ஜப்பானியத் தமிழறிஞர் நொருபு கரஷிமா மறைந்தார்



ஜப்பான் நாட்டில் பிறந்தவரும், பௌத்தமதத்தைச் சார்ந்தவரும், டோக்கியோ, டாய்சோ பல்கலைக்கழகங்களில் கிழக்கு ஆசிய வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கியவருமான நொருபு கரஷிமா அவர்கள், தம் 82 ஆம் அகவையில், 26-11-2015 வியாழன் அன்று மறைவுற்றார்.

அப்பேரறிஞரின் மறைவு தென்னிந்திய வரலாற்றுத் துறைக்கும்-குறிப்பாக சோழர் ஆட்சிக்கால வரலாற்றுத் துறைக்கும் பேரிழப்பாகும். 2014 ஆம் ஆண்டில் அவரால் வெளியிடப்பட்ட தென்னிந்திய வரலாற்றுச் சுருக்கம் (A concise history of South India) என்னும் ஆய்வு நூல், தென்னிந்திய வரலாறு, தமிழக வரலாறு பற்றிய கல்வெட்டு ஆய்வுகளை ஆவணப்படுத்தியது.

அவர் சோழர் காலக் கல்வெட்டுகளை முதன் முதலாக ஆய்வு செய்தார். சோழநாட்டில், சோழ அரசர்கள், 15 முதல் 20 விழுக்காடு ஊர்களை பார்ப்பனர்களுக்கு பிரமதேயமாக வழங்கினார்கள் என்பதை அவர் நிலைநாட்டியுள்ளார்.

தமிழகத்தில் 1968இல் நடத்தப்பட்ட இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தம் 35ஆம் அகவையில் கலந்து கொண்டார். 1989இல் 2010 வரை உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் தலைவராக விளங்கினார்.

கடந்த 50 ஆண்டுகளாக ஆண்டுதோறும் தமிழகத்துக்கு வந்து ஆய்வு செய்தார்.

டாக்டர் மன்மோகன்சிங் பிரதமராக இருந்த காலத்தில் அவர் ஜப்பான் நாட்டுக்குச் சென்றபோது, நொருபு கரஷிமா அவர்களுக்கு பத்மசிறீ விருது வழங்கப்பட்டது.

தமிழக வரலாற்றுக்கும் தமிழ் மொழி ஆய்வுக்கும் நொருபு கரஷிமா அவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது.

தமிழர்கள் என்றென்றும் நொருபு கரஷிமா அவர்களின் பெருமையைப் போற்றக் கடமைப்பட்டவர்களாவர்.

வளர்க நொருபு கரஷிமா புகழ்!

**- வே.ஆனைமுத்து**

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி முன்னெடுக்கும்
# நான்கு பெரும் நிகழ்வுகள்

**சந்திரசேகர் திருமண மண்டபம்,** மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

## 2016 சனவரி 23 சனி

காலை 9.30 முதல் 10.30 மணி வரை

**நாத்திகனின் சம்பூகன்** கலைக்குழுவினரின் **இசை முழக்கம்**

முற்பகல் 10.30 முதல் 01.30 மணி வரை

## "சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2016" வெளியீடு

<u>தலைமை</u>
**க. முகிலன்**
மா.பெ.பொ.க. உயர்மட்டக் குழு உறுப்பினர்

<u>வரவேற்புரை</u>
**சி. நடராசன்**
காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்

<u>மலர் வெளியீட்டுச் சிறப்புரை</u>
எழுத்தாளர்
**வ. கீதா**

<u>மலர் பெறுவோர்</u>

**வீ.இராசாப்பிள்ளை** — சிதம்பரம் நகரச் செயலாளர்

வரகூர் **மா. நாராயணசாமி** — பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்

பொறிஞர் **ஆ. கிருட்டிணசாமி**

**ஆ.கு. ஆறுமுகம்** — விழுப்புரம் மாவட்டச் செயலாளர்

**முத்து. அன்பழகன்** — நாகை மாவட்டச் செயலாளர்

புலவர் **இரா. கலியமூர்த்தி** — அரியலூர் மாவட்டச் செயலாளர்

தாம்பரம் **மா. சுப்பிரமணி** — காஞ்சிபுரம் மாவட்டத் துணைச்செயலாளர்

**இரா. கலியபெருமாள்** — திருச்சி மாவட்டச் செயலாளர்

**செ. ஆனையப்பன்** — சேலம் மாவட்டச் செயலாளர்

**கு. தொல்காப்பியன்** — உதவியாளர், பெரியார்-நாகம்மை அறக்கட்டளை

<u>வாழ்த்துரை</u>

மாம்பலம் **ஆ.சந்திரசேகர்**

**வாலாசா வல்லவன்** — சென்னை மா.செயலாளர்

**துரை. கலையரசு** — பெரியார்-நாகம்மை அறக்கட்டளை

**இரா. திருநாவுக்கரசு** — புதுச்சேரி மாநிலச் செயலாளர்

**க. பன்னீர்செல்வம்** — புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம், வேலூர்

**இரா. கல்யாணசுந்தரம்** — தொழிலாளர் அணித் துணைச் செயலாளர்

**பி. அறிவழகன்** — கடலூர் மாவட்டத் துணைச் செயலாளர்

நன்றியுரை : **ப. வடிவேலு** அலுவலக மேலாளர், சிந்தனையாளன்

பிற்பகல் 2.30 முதல் 7.00 மணி வரை

## தமிழ்வழிக் கல்வி ஆதரவு - இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு

<u>தலைமை</u>
முனைவர் **ஆ. முத்தமிழ்ச் செல்வன்**
மா.பெ.பொ.க. மாணவர் - இளைஞரணி மாநிலச் செயலாளர்

<u>வரவேற்புரை</u>
**சோ. அண்ணாதுரை**
மா.பெ.பொ.க. மாணவர் - இளைஞரணி

தொடக்கவுரை : **கல்வியாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு**
பொதுச்செயலாளர், பொதுப்பள்ளிகளுக்கான மாநில மேடை

<u>உரையாற்றுவோர்</u>

**தி. துரை சித்தார்த்தன்** — மாணவர்-இளைஞரணித் துணைச் செயலாளர்

**இரா. பகுத்தறிவாளன்** — மாணவர் - இளைஞரணி

**மு. குடியரசு** — மாணவர் - இளைஞரணி

மற்றும் **கல்லூரி மாணவர்கள்**

சிறப்புரை

கவிஞர் **தமிழேந்தி**
செயலாளர், புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம்

மருத்துவர் **நா. எழிலன்**
அமைப்பாளர், இளைஞர் இயக்கம்

நன்றியுரை : **சா.சீனிவாசன்** செந்துறை ஒன்றியச் செயலாளர்

## 2016 சனவரி 24 ஞாயிறு

முற்பகல் 10 முதல் 1.30 மணி வரை

# தமிழக நீராண்மை – வேளாண்மைப் பாதுகாப்பு மாநாடு

தலைமை

**அரங்க. சானகிராமன்**
மா.பெ.பொ.க. வேளாண் அணி மாநிலச் செயலாளர்

தொடக்கவுரை

பேராசிரியர் **எஸ்.ஏ. சின்னசாமி**
தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம்

வரவேற்புரை : **மா. முருகேசன்** மா.பெ.பொ.க., தீத்தாண்டப்பட்டு

உரையாற்றுவோர்

**பா. மோகன்**
கடலூர் மாவட்டச் செயலாளர்

**சா. குப்பன்**
தொழிலாளர் அணிச் செயலாளர்

**மு. சாமிநாதன்**
பு.க,கலை இலக்கிய மன்றம்,வேலூர்

**கோ. கோதண்டராமன்**
மா.பெ.பொ.க. வேளாண் அணி

**ஏ.வெங்கடேசன்**
பாலாறு பாதுகாப்பு இயக்கம்

**ந.ப. அன்பழகன்**
தமிழக விவசாயிகள் சங்கம்

நன்றியுரை : **மோ. புரட்சித்தமிழன்** மா.பெ.பொ.க. மாணவர் – இளைஞரணி

பிற்பகல் 2.30 முதல் 6.30 மணி வரை

# மது ஒழிப்பு மாநாடு

தலைமை

**சி. பெரியசாமி**
மா.பெ.பொ.க. மாநிலத் துணைப் பொதுச் செயலாளர்

தொடக்கவுரை

முனைவர் **வைர.ந. தினகரன்**
நிறுவுநர், அகில இந்திய மகாத்மா காந்தி சமூகநலப் பேரவை

வரவேற்புரை : **மீ. டில்லிபாபு** மா.பெ.பொ.க. நகரச் செயலாளர், வேலூர்

உரையாற்றுவோர்

**கோவி இராமலிங்கம்**
மகளிரணி மாநிலச் செயலாளர்

மருத்துவர்
**சா.மா. அன்புமணி**

**மோ.சி. சங்கர்**
வேலூர் மாவட்டச் செயலாளர்

**பொ. சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்

**ந. கருணாகரன்**
புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம்

நன்றியுரை : **நா. மதனகவி**
மா.பெ.பொ.க. ந.செ.வாணியம்பாடி

**புத்தாண்டுப் பரிசு** எனும் மது ஒழிப்புக் குறும்படம் திரையிட்டுச் சிறப்புரை : இயக்குநர் **வ. கவுதமன்**

நிறைவுரை : **வே. ஆனைமுத்து**
பொதுச்செயலாளர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

தொடர்புக்கு : **மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**
2B/85, K.S.R.நகர், MWB 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை-600 053. 94448 04980, 72994 41712

# அடித்தட்டு மக்களின் அடிப்படை உரிமைப் பறிப்புக்கு ஆலவட்டம் சுற்றும் உச்சநீதிமன்றம்

- க. முகிலன்

உச்சநீதிமன்றம் 10-12-15 அன்று, அரியானா மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்குக் கல்வித் தகுதி அளவுகோலை நிர்ணயித்துப் பிறப்பித்துள்ள 2015 ஆம் ஆண்டின் உள்ளாட்சிச் சட்ட திருத்தம் செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது. உச்சநீதிமன்றத்துக்கே சனநாயக அடிப்படைக் கோட்பாடுகள் மீது நம்பிக்கை இல்லையோ என்று நினைக்கும்படியாக இத்தீர்ப்பு அமைந்துள்ளது. உச்சநீதிமன்றத்துக்கான-உயர்நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை அமர்த்தும் அதிகாரம் உயர்நீதித்துறைக்கு மட்டுமே உண்டு; இதில் நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் கூட தலையிட உரிமை இல்லை என்று உச்சநீதிமன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பு, உச்சநீதிமன்றத்தின் சனநாயக மறுப்புச் சிந்தனைப் போக்கினைப் புலப்படுத்தியது.

நாடாளுமன்றத்துக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அய்ந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல் நடத்த வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுபோன்றதோர் சட்டம் இல்லாதிருந்தது. இதைப் பயன்படுத்தி, தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் பத்து ஆண்டுகள் முதல் இருபது ஆண்டுகள் வரை உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலே நடத்தப்படாமல் இருந்தது. உள்ளாட்சி அமைப்புகள் சனநாயகத்தின் வேர்கள்; மக்கள் அதிகாரத்துக்கான அடிப்படை அலகுகள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை இல்லாததால், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகளும், ஆளும் கட்சியினரும் தங்கு தடையின்றி கொள்ளை அடித்தனர். உள்ளாட்சி அமைப்புகள் மக்களாட்சி முறையில் செம்மையாகச் செயல்பட, அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து வலிமை பெற்றது.

இராசிவ் காந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது, அவர் நேரடியாகத் தலையிட்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் தேர்தல் நடத்துவதற்கான அரசமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டுவர அடித்தளமிட்டார். ஆனால் பி.வி.நரசிம்மராவ் ஆட்சியின் போது 1992இல் 73 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் இந்தியா முழுவதும் மூன்று அடுக்கு முறை கொண்ட உள்ளாட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. 1958இல் தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சிக்கு வந்தபின் உருவாக்கிய ஊராட்சிமன்றம், ஊராட்சி ஒன்றியம் எனும் இரண்டு அடுக்குமுறையே நல்ல திட்டமாக இருந்தது. இப்போதுள்ள மூன்றடுக்குமுறையில் பல குறைபாடுகள் உள்ளன. ஆயினும் 1994 முதல் இந்தியா முழுவதும் அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசமைப்புச் சட்டத்தின் 73 ஆவது திருத்தத்தின் கட்டாயத்தால் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.



*அடித்தட்டு மக்கள் வாக்களிக்கும் மந்தைகளாகவே இருக்கவேண்டும் என்று கூறும் அரியானா மாநில உள்ளாட்சிச் சட்டம்*

1992இல் இயற்றப்பட்ட உள்ளாட்சிச் சட்டத்தின்படி, ஊராட்சிகள், ஒன்றியம், மாவட்டம் அளவிலான உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மொத்த உறுப்பினர்கள், தலைவர்கள் பதவிகளில் 33 விழுக்காடு பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும், பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினர்க்கும் இடஒதுக்கீடு அளிக்கப்படவேண்டும். இது ஒரு முற்போக்கான சிறந்த ஏற்பாடாகும். நடுவண் அரசு இயற்றிய உள்ளாட்சிச் சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசுகளும் உள்ளாட்சிகளுக்கான புதிய சட்டங்களை 1994இல் இயற்றின.

இவ்வாறு 1994ஆம் ஆண்டு அரியானா மாநிலத்தில் இயற்றப்பட்ட உள்ளாட்சிச் சட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் அரியானா அரசு, சட்டத்தைத் திருத்தியது. இதன்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிட சில நிபந்தனைகளை விதித்துள்ளது. 2016 சனவரி மாதத்தில் உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரியானாவில் ஆட்சியில் இருக்கும் பாரதிய சனதாக் கட்சி இத்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது.

1. பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத ஆண்களும், 8ஆம் வகுப்பில் தேர்ச்சி அடையாத பெண்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் போட்டியிட முடியாது. பட்டியல் இனத்தவர்க்குக் கல்வித் தகுதி அளவுகோல்-ஆடவர்க்கு 8ஆம் வகுப்பில் தேர்ச்சி எனவும் மகளிர்க்கு 5ஆம் வகுப்பில் தேர்ச்சி எனவும் விதிக்கப்பட்டுள்ளது.

2. மாநில அரசிடம்-அதாவது வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்திருக்க வேண்டும்.
3. மின்கட்டண நிலுவை ஏதும் வைத்திருக்கக் கூடாது.
4. வீட்டில் நவீன கழிப்பறை வசதி இருக்கவேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இவை எல்லாச் சாதிகளிலும் உள்ள ஏழைகளுக்கு எதிரான வைகளாகவும் பணக்காரர்களுக்கும் பண்ணையார்களுக்கும் ஆதரவானவைகளாகவும் உள்ளன. ஜாட் சாதியினரின் ஆதிக் கத்தில் இருக்கும் அரியானா மாநிலம் பிற்போக்கான கொடுஞ் செயல்கள் நடைபெறுவதில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. கவுரக் கொலைகள், பெண்சிசு கருக்கலைப்புகள், சாதிக் கட்டப் பஞ்சாயத்துகள் அதிக அளவில் அரியானாவில் நடக்கின்றன. நிலப்பிரபுத்துவக் கலாச்சார மேலாதிக்க மனப்போக்கின் வெளிப்பாடே இந்த நிபந்தனைகள்.

எல்லோருக்கும் கல்வி தரவேண்டியது அரசின் முதற் கடமையாகும். 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அரியானாவில் 76.6 விழுக்காட்டினர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். பெண்களில் 66.8 விழுக்காட்டி னர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். எழுத்தறிவு பெற்றவர் என்பதற்கான அளவுகோல் 5ஆம் வகுப்பு அல்லது 8ஆம் வகுப்புப் படித்திருக்க வேண்டும் என்பது போன்ற வரம்பு ஏதுமில்லை. சுருக்கமாகச் சொன்னால், தன் பெயரை எழுதத் தெரிந்த எவரும் எழுத்தறிவுப் பெற்றவராகக் கருதப்படுவார். இதன்படி அரியானாவில் தன் பெயரைக்கூட எழுதத் தெரி யாதவர்களாக 24 விழுக்காடு ஆண்களும், 35 விழுக்காடு பெண்களும் இருக்கின்றனர். இவ்வாறு தற்குறிகளாக இருக்க வேண்டும் என்பது இவர்களின் சொந்த விருப்பமா? வருணா சிரம-சாதி அமைப்பின் பெயரால் இரண்டாரயிரமாண்டு களுக்கு மேலாக இவர்களுக்குக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட கொடுமையே இந்த இழிநிலைக்குக் காரணம். சுதந்தரம் பெற்று 68 ஆண்டுகளான பின்னும் இந்த அநீதி களையப் படாமலிருப்பதற்கு ஆளும் வர்க்கத்தின் ஆதிக்க மனப்போக்கே காரணமாகும்.

அரியானா அரசு விதித்துள்ள கல்வித்தகுதியின்படி, மொத்தம் உள்ள 96 இலட்சம் வாக்காளர்களில் 42 இலட்சம் வாக்காளர்கள் உள்ளாட்சிகளுக்கான தேர்தலில் போட்டியிட முடியாது. பட்டியல் குலத்தவர்களில் 68 விழுக்காடு பெண்களும் 41 விழுக்காடு ஆண்களும் தேர்தலில் போட்டியிட முடியாது. இந்தப் புள்ளி விவரங்கள் அரியானா அரசின் உள்ளாட்சிச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் தொடுக்கப் பட்ட வழக்கில் அளிக்கப்பட்டன. ஆனால் உச்சநீதிமன்றம் இதைக் கருத்தில் கொள்ளவில்லை.

உச்சநீதிமன்ற-உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் உடைய குடியரசுத் தலைவர் பதவிக்கே எந்தவொரு கல்வித் தகுதியும் விதிக்கப்படவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, நடுவண் அரசும் மாநில அரசுகளும் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்கும் அதிகாரம் கொண்ட குடியரசுத் தலைவர் பதவிக்கு வருபவர் அரசியல் சட்டத்தைக் கரைத்துக் குடித்திருக்க வேண்டும் என்று கூறுவது போலிக்கிறது-அரியானா அரசின் உள்ளாட்சிச் சட்டத்திருத்தம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு. சட்டமன்றங்கள், நாடளுமன்றத்தின் மக்களவை, மாநி லங்கள் அவை ஆகியவற்றுக்கான தேர்தலில் போட்டியிடக் கல்வித்தகுதி எதுவும் அரசியலமைப்புச் சட்டத்தில் விதிக்கப் படவில்லை. ஏனெனில் இந்தியாவில் காலங்காலமாக வெகுமக் களுக்குக் கல்வி உரிமை மறுக்கப்பட்டு வந்த வரலாற்றுப் பின்னணியைக் கருத்தில் கொண்டே அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தின்போது கல்வித் தகுதி நிர்ணயிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் உச்சநீதிமன்றம் குருட்டுத்தனமாக அரியானா அரசின் சட்டத்திருத்தம் செல்லும் என்று தீர்ப்பு அளித்துள்ளது.

1950 சனவரி 26 அன்று நடப்புக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அரசின் வழிகாட்டு நெறிப்பகுதியில் பத்து ஆண்டுகளுக்குள் (அதாவது 1960க்குள்) 14 அகவைக்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. காலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பெரும்பாலான நாடுகளில் பத்து பதினைந்து ஆண்களுக்குள் 8ஆம் வகுப்பு வரையிலான அடிப்படைக் கல்வி அளிக்கப்பட்டுவிட்டது. இந்தியாவில் 68 ஆண்டுகளான பிறகும் ஏன் தரவில்லை? கல்வியை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்த்தால், விரைவில் கல்வி அளித்திட வாய்ப்பு ஏற்படும் என்று எண்ணி, 2002 ஆம் ஆண்டு கல்வி உரிமை, அடிப்படை உரிமைகளின் கீழ் சேர்க்கப்பட்டது. இதற்கான சட்டம் 2009இல் இயற்றப்பட்டது. 2010 ஏப்பிரல் முதல் இது நடப்பில் இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு குழந்தை எட்டாம் வகுப்பு வரையில் படிக்காவிட்டால், அதற்கான பொறுப்பை யார் ஏற்பது என்று இந்தச் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவே இல்லை.

தொடக்கப்பள்ளியில் சேரும் 100 மாணவர்களில் அய்ந்தாம் வகுப்பை முடிப்பதற்குள் 54 மாணவர்கள் பள்ளியைவிட்டு நின்றுவிடுகின்றனர். எட்டாம் வகுப்புக்குள் 72 மாணவர்கள் இடைநிற்றல் பட்டியலில் சேருகின்றனர். பள்ளியிலிருந்து இடையில் நிற்கும் மாணவர்கள் யார்? பழங்குடியினர், பட்டியல் வகுப்பினர், உழைக்கும் சாதியினராக உள்ள பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் குடும்பங்களின் குழந்தைகளாகவே இவர் கள் இருப்பது ஏன்? இதற்கு, சாதிகாரணமான வாழ்நிலையும் வறுமையும் முதன்மையான காரணிகளாகும். இடைநிற்ற லில் பெண்கள் விழுக்காடு அதிகம். தொடக்கக் கல்வியே தனியாரின் கல்வி வணிகமாக வேகமாக வளர்ந்து வரும் சூழலில், உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட, பத்தாம் வகுப் பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது சரியே என்று கூறும் நீதிபதிகள் இந்தியாவில் வாழ்கிறார்களா? அல்லது செவ்வாய்க் கோளில் வாழ்கிறார்களா?

அரியானாவுக்கு முன்பே, பா.ச.க.வின் கோட்டையாகத் திகழும் இராஜஸ்தான் மாநில அரசு மாவட்ட, ஒன்றிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிட 10ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்றும், ஊராட்சிகளுக்கு எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் சட்டத்திருத்தம் செய்துள்ளது. பட்டியல் வகுப்பினர் ஊராட்சிக்குப் போட்டியிட அய்ந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று தளர்த் தப்பட்டுள்ளது.

இராஜஸ்தான் மாநிலத்தில் ஊரகப் பகுதியில் பெண்களில் 45.8 விழுக்காட்டினர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்கள். பழங்குடியினருள் 25.22 விழுக்காட்டுப் பெண்கள் மட்டுமே எழுத்தறிவு பெற்றுள்ளனர். அனைவருக்கும் உரித்தானதாக இருக்க வேண்டிய சனநாயக உரிமைகள் பெரும்பான்மை யான பெண்களுக்கு மறுக்கப்படுகிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பில், “உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் தலைவர்களும் குறைந்த அளவிலான கல்வித் தகுதியைப் பெற்றிருந்தால்தான் அவர்களுடைய கடமை களைச் செம்மையாகச் செய்யமுடியும்” என்று கூறியிருப்பது பள்ளியில் படித்தவன் மட்டுமே அறிவாளி, திறமைசாலி என்கிற பார்ப்பனியச் சிந்தனையின் வெளிப்பாடேயாகும். உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கு வழக்குகளை நிர்வாகம் செய்ய கல்வித்தகுதி தேவை என்று அரியானா அரசும், இராஜஸ்தான் மாநில அரசும் வாதிடுகின்றன. மாநில நிதி அமைச்சர்களும் நடுவண் அரசின் நிதி அமைச்சர்களும் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்களாகவா இருக்கிறார்கள்? எனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான வேட்பாளர்களுக்குக் கல்வித்தகுதி என்ற அளவுகோலை நீட்டுவது என்பது காலங்காலமாக கல்வியைப் பிறப்பின் அடிப் படையில் தம்முற்றுரிமையாகக் கொண்டிருந்த பார்ப்பன-மேல்சாதி ஆதிக்கச் சிந்தனையின் சீழ்பிடித்த வெளிப்பாடே யாகும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பல இலட்சம் கோடிப் பணம் வாராக்கடனாக உள்ளது. இதில் 90 விழுக்காடு இந்தியப் பெருமுதலாளிகளின் கடன் நிலுவையாகும். ஆனால் வேளாண்கடனை அடைக்காவிட்டால் தேர்தலில் போட்டியிட முடியாதாம்! சீரழிந்துவரும் வேளாண்மையால் நாள்தோறும் பல ஆண்டுகளாக உழவர்கள் தற்கொலை செய்து கொண்டு வருகின்றனர். இதற்குத் தீர்வுகாண முயலாமல், வேளாண் தொழிலையும், உழவர்களையும் இழிவுபடுத்துவதுபோல் இச்சட்டத்தின் நிபந்தனை இருக்கிறது.

மின்கட்டண நிலுவை இருக்கக்கூடாதாம்! மின்கட்டணம் செலுத்தவில்லை என்றால் மின்வாரியம் மின் இணைப்பைத் துண்டித்துவிடும். இது ஒரு சாதாரண நடைமுறை. ஆனால் இதை வேட்பாளருக்கான ஒரு நிபந்தனையாக்கி இருப்பது வெட்கக்கேடு! பெருமுதலாளிகள் பல இலட்சம் உருபாய்க்கு மின்கட்டண நிலுவை வைத்திருக்கிறார்களே! அவர்களுடைய நிறுவனங்களின் கதவுகளைப் பூட்டி முத்திரை வைத்துவிடுமா அரசு! இந்தியாவில் ஊரகப்பகுதியில் 40 விழுக்காடு வீடுகளுக்கு மின்இணைப்பு இல்லை. இக்கேடான நிலையைப் போக்கா மல், மின்கட்டண நிலுவை என்பதை நிபந்தனையாக வைத் திருப்பது போன்ற போக்கிலித்தனம் வேறு இருக்கமுடியுமா?

அடுத்து நவீன கழிப்பறை வசதி இருக்கவேண்டும் என்ப தாகும். தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் ‘தூய்மை இந்தியா’ அறிவிப்பு நீதிபதிகளின் மூளையைச் சலவை செய்து விட்டது போலிக்கிறது. தந்தத்திலான கோபுரத்தில் அமர்ந்து கொண்டிருப்பது போன்ற மனநிலையில் இருப்பதால்தான் ஊரகப்பகுதியில் பெரும்பான்மை மக்களின் இயலமைகளும், அவலங்களும் இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை போலும்.

மாற்றுத் திறனாளிகளுக்கும், திருநங்கையர்க்கும் மற்ற வர்களுக்கு இருப்பது போன்ற எல்லா உரிமைகளும், வாய்ப்பு களும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும் இன்றைய சமூகச் சூழலில், அடித்தட்டு மக்கள் பெற் றுள்ள உரிமைகளைப் பறிக்கின்ற உள்ளாட்சிச் சட்டத்திருத் தங்களை எதிர்க்க வேண்டும். இது செல்லும் என்று தீர்ப்பு அளித்துள்ள உச்சநீதிமன்றத்தின் நிலைப்பாடு கண்டனத் துக்குரியதாகும். உச்சநீதிமன்றம் அரியானா அரசுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்ததால், நகராட்சிகளுக்கான தேர்தலில் போட்டியிட 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டுவர உள்ளது. அதன்பின் பட்டம் பெற்றிருக்கவேண்டும் என்பது கல்வித் தகுதியாக ஆக்கப்படலாம்.

பாக்கித்தானில் பர்வேசு முஷாரப் அதிபராக இருந்தபோது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்ட தாரியாக இருக்கவேண்டும் என்று சட்டம் போட்டார். உயர் நீதித்துறையின் பல தீர்ப்புகள் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகவே அமைந்துள்ளன. எனவே ‘நீதிமன்ற அவமதிப்பு’ என்கிற பூச்சாண்டிக்கு அஞ்சாமல் அடிப்படை சனநாயக உரிமைகளைக் காத்திட, நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து கருத்துரைப்போம். வாக்குரிமை உள்ள எந்தவொரு குடிமகனுக்கும் தேர்தலில் போட்டியிடும் உரிமையும் இருக்கவேண்டும். இதைப் பறிக்க முனையும் ஆதிக்கச் சக்திகளை எதிர்த்துப் போராடுவோம்.

**25-12-2015 வெண்மணி நினைவுநாளை நினைவுகூரும் தன்மையில், சூலூர் பாவேந்தர் பேரவை ம.சரவணகுமார்-இராசலட்சுமி மகள், மாணவி ரா.ச.வெண்மணி “சிந்தனையாளன்” வளர்ச்சி நிதியாக வே.ஆனைமுத்துவிடம், ரூ.2,000 அளித்தார். நன்றி.**

**கட்டுரைத் தொடர்-35**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

### தமிழர் பெரும்படை பிரயாண விபரம்

தமிழர் பெரும்படையின் இராணுவ மந்திரி தோழர் மணவை ரெ. திருமலைசாமி, சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரைக் கூட்டத்தில் 11-9-38-ந் தேதி மாலை வெளியிட்ட அறிக்கையாவது :-

கடல் போலத் திரண்டோடி வந்திருக்கும் அன்பர்களே! தாய்மார்களே!

தமிழர் படையின் சார்பாக இராணுவ மந்திரி என்கிற தோரணையில் உங்களுக்கு எமது வணக்கந் தெரிவித்துக் கொள்கிறேன்.

### படையெடுப்பின் நோக்கம்

தமிழர் பெரும்படையின் சரித்திரத்தை நீங்கள் தெரிந் திருப்பீர்கள். காங்கிரஸ் கட்சித் திரையில் நின்று, அகில இந்திய பாஷை ஒன்று வேண்டும் என்கிற சொல்லால், நம் தமிழ்மொழி மீது வடமொழியொன்று படை எடுத்து வரு வதைத் தடுப்பான் வேண்டியும், தாய்மொழிக்கேற்பட்டுள்ள இன்னல்களைக் களைவான்கருதியுமே தமிழர் பெரும்படை திரட்டப்பட்டதென்பதை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

எமது படையில் இந்து, முஸ்லிம், கிறிஸ்து ஆகிய மதச்சார் பினரும், இந்துக்களில் பார்ப்பனரல்லாத சகல வகுப்பைச் சேர்ந்தவர்களும் (ஆதித்திராவிடர்கள் உள்பட) அங்கம் பெற் றிருக்கிறார்கள். மலையாள நாட்டினரும் தெலுங்கு தேசத்தி னருங்கூட இதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள்.

தமிழர் பெரும்படையில் சேர்ந்து செல்ல 101 தொண் டர்கள் தேவை என்று விடுதலை, நகரதூதன், குடிஅரசு ஆகிய மூன்று பத்திரிகைகளில் பிரசுரித்தேன். அதைக் கண் ணுற்றவர்களில், 425-பேர்கள் வரை விண்ணபித்துக் கொண்டார்கள். இவர்களுள் 101 பேர்களை மட்டும் வடிகட்டிப் பொறுக்கி எடுத்துப் பயணப்பட்டோம்.

### 42 நாட்களில் 87 பொதுக்கூட்டங்கள்

நாங்கள் ஆகத்து 1-ந் தேதி புறப்பட்டோம். இன்றோடு 42 நாட்களாகின்றன. இந்த 42 நாள்களில் 234 கிராமங் களைக் கடந்து, 60 முக்கிய ஊர்களில் தங்கி, ஆங்காங்கே எங்கள் நோக்கங்களை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் வந்திருந்து 87 பொதுக்கூட் டங்களில் எங்கள் கருத்தை மணிக்கணக்கில் சவிஸ்தாரமாக எடுத்துப் பேசியிருக்கிறோம்.

### 42 நாள்களில் 577 மைல்கள்

இந்த 42 நாள்களில் தஞ்சை, கும்பகோணம், மாயவரம், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, கடலூர், மஞ்சகுப்பம், விழுப்புரம், திண்டிவனம், மதுராந்தகம், செங்கல் பட்டு, காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், போரூர், கோடம்பாக்கம், மைலாப் பூர் ஆகிய 16 இடங்களில் ஒய்வுக் காக அரைப்பொழுது ஒரு பொழுதாகத் தங்கிய வகையில் 9 முழு நாட்கள் அலுப்பாறினோம். அதுபோக 33 நாட்கள் நடந்து வந்திருக்கிறோம். எங்கள் நடையில் 577 மைல்கள் போயிருக்கின்றன. ஊர்விட்டு ஊர் போவதற்காக நடந்த மைல் கள் 409-தேயாயினும் ஊர்வலமாகச் சுற்றிய சுற்று 168 மைல்களுக்கு மேற்பட்டுவிட்டன.



### நதிகளைக் கடந்த பரிதாபம்

தஞ்சை ஜில்லாவையும், தென் ஆர்க்காடு ஜில்லாவை யும் பிரிக்கின்ற ¾ மைல் அகலமுள்ள கொள்ளிடம் நதியைத் தோணி மூலம் கடந்தோம். பண்ருட்டிக்கும் கோலியனூ ருக்கும் மத்தியிலிருக்கும் ½ மைல் அகலமுள்ள பெண்ணை யாற்றில் வயிற்றளவு ஜலம் ஓடியதால், அதை நீந்திக் கடந்தோம். செங்கற்பட்டு ஜில்லா பூதூருக்கும் திருக்கழுக் குன்றத்துக்கும் மத்தியிலிருக்கும் பாலாற்றை சுள்ளுவெயில் நேரத்தில் 3 மணிக்கு நடந்து கடந்தோம்.

### மழையால் நேர்ந்த துயரம்

இது மாரிகால ஆரம்பம் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. இக்காலத்தில் அடிக்கடி மழை பொழியும் என்பதையும் நீங்கள் அறிந்திருப்பது போலவே நாங்களும் அறிவோம். இது சமயம் நடந்து செல்வதென்னும் ஏற்பாட்டு டன் புறப்பட்டால் இடையில் எங்களை மழை இம்சிக்கும் என்பதை நாங்கள் அறிவோம். அப்படியிருந்தும் எங்கள் தலைமீது சுமந்துள்ள கடமை எவ்வித இடையூறுகளையும் கவனியாது போரைத் தொடர்ந்து நடத்தும்படி தூண்டிற்று.

திருச்சி நகரை விட்டுப் புறப்பட்டு காவிரி நதியைக் கடக் கும் போதே மழையும் எங்களைத் தொடர்ந்து வருஷித்தது. சுமார் 1½ மைலுக்குமேல் மழையிலேயே நடந்து சென் றோம். அதேபோல் திருக்காட்டுப் பள்ளிக்கு அப்பால் சாத்த னூருக்கருகில் செல்லும்போது 2 மைல்கள் நடந்து சாத்தனூர் சத்திரத்திற்குள் நுழைந்துங்கூட இரவு 11 மணிவரை மழை ஓயவில்லை. திருவையாற்றைவிட்டு தஞ்சைக்குப் போக அடி எடுத்து வைத்ததும் ஆரம்பித்த மழை ½ மைல் தூரம் எங்கள்மீது பொழிந்து கொண்டே வந்தது. பசுபதி கோயிலை விட்டுப் பாபநாசம் போகும் போது சக்கராப்பள்ளியில் பிடித்த மழை பாபநாசத்தில் ஊரைச் சுற்றி உஸ் என்று குந்தும்

வரை 2 மணி நேரம் விடவில்லை. பொது ஜனங்களும் எங்களைத் தொடர்ந்தே ஆயிரக்கணக்கில் நடந்து வந்தனர். பரங்கிப்பேட்டையில் பொதுக்கூட்டத்துக்கு முன்னும், அது முடிந்து தங்குமிடம் போகும் வரையும் தூற்றலிலேயே நடந்தோம்.

### மழைக்கு மத்தியில் 27 மைல்

பூண்டியாங்குப்பத்தில் இரவில் தங்கியிருந்தோம். அங்கு இரவு 10 மணிக்குப் பிடித்த மழை காலை 3 மணிக்குத்தான் விட்டது. எங்கள் இராத்தங்கல் இடத்தின் மேற்கூரை, ஓட்டைகள் நிரம்பியிருந்தமையால் இரவு பூராவும் உட்கார்ந்து கொண்டேயிருந்தோம், நெல்லிக்குப்பத்திலிருந்து பண்ருட்டி 9 மைல். நெல்லிக்குப்பத்தை விட்டதும் 2 மைலில் பிடித்த கடும் மழை பண்ருட்டி போய்ச் சேரும் வரை 7 மைல் தூரம் விடவே இல்லை. கோலியனூரை அணுகும் போது 1 மணி நேரமும், வளவனூருக்குப் புறப்பட்ட போது ஒரு மணிநேரமும் மழை தூறிக் கொண்டே இருந்தது. காஞ்சிபுரத்தில் 2ஆம் நாள் பொதுக்கூட்டத்திலிருந்து புறப்பட்ட போது பிடித்த மழை சகிக்க முடியாதது. 2½ மைல் அந்தக் கடுமழையைப் பிளந்து சென்றோம். கடைசியாக கோடம்பாக்கத்தை நெருங்கிய போதும் 2 மைல் தூரம், அந்தப் பாடாவதி ரோட்டில் விழுந்தும் எழுந்தும் மழையில் நடக்க வேண்டியதாயிற்று. ஆயிரக் கணக்கான பொது ஜனங்களும், எங்களோடு மழையில் கஷ்டப்பட்டனர். எல்லாவிடங்களிலும் மழையோடு மழையாய் நடந்து சென்றோமே தவிர, எங்கும் ஒண்டி நிற்கவில்லை. அநேக இடங்களில் கையில் கொண்டுவரும் பையிலிருந்த மாற்றுடுப்புகளும் நனைந்துபோனதால் வேறு உடுப்புகளின்றி நனைந்தவை உலரும் வரை வெடவெடத்துக் கொண்டிருந்திருக்கிறோம். மொத்தம் சுமார் 27 மைல்கள் நனைந்த உடுப்புகளோடு குடையில்லாமல் மழையிலேயே ஊடுருவிப் பாய்ந்து வந்திருக்கிறோம்.

### உடல்நலிவும் படை குறைவும்

குறித்த தேதியில், குறிப்பிட்ட இடத்தை அடைய வேண்டுமென்ற கருத்தோடு, இப்படி மழையில் நனைந்து, காற்றில் உலர்ந்து நடையை நிறுத்தாமல் படை போய்க் கொண்டிருந்தாலும், கோரக் குளிரிலும் நெஞ்சையும் சில்லிடச் செய்யும் நச்சுக் காற்றிலும் படை சென்றதாலும் கல்போன்ற உடலும் கலையத் தலைப்படுமன்றோ? எங்களை விரோதிகளாகப் பாவித்துத் தூஷிக்கும் அன்பர்களைப் போல நாங்களும் மனிதர்கள் தானே? எங்களுக்கும் நோய்வரத்தானே செய்யும்? நீரும் மழையும் காற்றும் எல்லோருக்கும் ஒரே மாதிரி ஒத்துக்கொள்ளாதல்லவா? இதனால் எமது படை வீரர்களில் சுமார் 60 பேர்கள் வரை ஜுரத்தாலும், ஜலதோஷத்தாலும், இருமலாலும், சீதபேதியாலும் கஷ்டப்பட நேர்ந்தது. இப்படி நோய்வாய்ப்பட்டோரில் பலர் மருந்து சாப்பிட்டுக் கொண்டே படையோடு தொடர்ந்து வந்தனர். சிலரை சில இடங்களில் விட்டுவைத்து மருந்து சாப்பிட ஏற்பாடு செய்து வைத்து வந்தோம். சிலரை, தாங்க முடியாமை காரணமாக அவரவர் ஊருக்குத் திருப்பி அனுப்பினோம். இடையில் தங்கி மருந்து சாப்பிட்டவர்கள் எல்லோரும் திரும்பி வந்துவிட்டனர். ஊருக்கு அனுப்பப்பட்டவர்களிலும் சிலர் தொண்டருள் தொண்டராகச் சேர்ந்து கொண்டனர். இவ்வாறான மழைத் தொந்தரவால் ஏற்பட்ட வியாதியின் காரணமாக 24 பேரை விட்டுவிட வேண்டியதாயிற்று. இன்றுகூட 2 தொண்டர்கள் ஜுரத்தால் வருந்துகின்றனர்.

### தலைவர்கள் கஷ்டம்

எமது தமிழர் பெரும்படையின் சேனாதிபதி தோழர் கே.வி.அழகர் சாமி உடல்நலிவுள்ளவர் என்பதை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அவர் சிகிச்சை முறையிலிருந்து மீண்டு சொற்பதினத்தில் படையெடுக்க வேண்டியதாயிருந்ததால், பச்சைப்புண் உடம்போடு படையை நடத்த முற்பட்டார். அதோடு ஒவ்வோர் ஊரிலும் மணிக்கணக்கில் பேசிவந்தார். இதனால் அவரது உடல் நலிவு முற்றி, துரதிர்ஷ்டவசமாக, கடலூரிலிருந்து மதுராந்தகம் வரையில் படையை விட்டு அவர் பிரிந்திருக்க வேண்டியதாயிற்று.

படைத்தலைவர் ஐ. குமாரசாமிப்பிள்ளை அவர்களும், தமது வயது தளர்ந்த வாழ்க்கைத் துணைவியாருக்கு நேர்ந்த உடல் நலிவின் காரணமாக சில நாள்கள் ஊர் போய் வரவேண்டியதேற்பட்டது.

### படைப்பலம்

**உடல் நலிவின் காரணமாக ஊருக்குத் திரும்பியோர் போக, இன்று எங்கள் படையிலிருப்போரின் தொகை 79. இருவரை மட்டும் மிகச் சிபாரிசின் பேரில், தமிழுக்குழைத்த ஆர்வத்தின் காரணமாக இடையில் சேர்த்துக் கொண்டோம். மற்றவர்கள் அத்தனை பேரும் திருச்சியிலிருந்து வருகிறவர்கள்.**

### பிரயாண விவரம்

திருச்சி ஜில்லாவில் 3 ஊர்களும், தஞ்சை ஜில்லாவில் 17 ஊர்களும், தென்னார்காடு ஜில்லாவில் 22 ஊர்களும் எங்களுக்குத் தங்கிப் புறப்படும் ஊர்களாக இருந்திருக்கின்றன. திருச்சி ஜில்லாவில் 16 மைல்களும் தஞ்சை ஜில்லாவில் 108 மைல்களும், தென்ஆர்க்காடு ஜில்லாவில் 136 மைல்களும், செங்கற்பட்டு ஜில்லாவில் 154 மைல்களுமாக ஊர் விட்டு ஊர்போவதற்காக மட்டும் நடந்திருக்கிறோம்.

### எதிர்ப்பு

நாங்கள் போகுமிடமெல்லாம் எங்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்கள் அனந்தம். ஆயிரம், பதினாயிரக் கணக்கிலேயே கூட்டங்களிலெல்லாம் ஜனங்களிருந்தனர். இரண்டோரிடங்களில் எதிர்ப்பும் இருந்ததென்பதையும் கண்யமாக ஒப்புக்கொள்கிறேன். திருக்காட்டுப்பள்ளி, சிதம்பரம், கடலூர், பண்ருட்டி, காஞ்சிபுரம் ஆகிய 5 ஊர்களில் சிலர் எதிர்ப் பிரச்சாரம் செய்திருந்தனர். திருக்காட்டுப் பள்ளியில் எதிர்ப்பு வாசகங்கள் எழுதிக்கட்டியிருந்ததோடு நின்றுவிட்டது.

சிதம்பரத்தில் கறுப்புக் காகிதத் தோரணங்கட்டி விட்டதோடு மறைந்துவிட்டது. கடலூரில் தமிழராகப் பிறந்த சிலர், எவரோ தூண்டியதைக் கேட்டு எங்கள் மீது ஒரு பாய்ச்சல் மாட்டை விரட்டி விட்டனர்; எங்கள் பொறுமைக்கு ஊறு நேரும் விதமாக ஆபாச வசனங்களைச் சரமாரியாகப் பொழிந்தனர். பண்ருட்டியில் இரண்டொருவர் 4, 5 வயது சிறுவர் பலரை அழைத்து வந்து எங்கள் கூட்டத்தில் கூச்ச லிடச் செய்தனர். காஞ்சிபுரத்தில் காலித்தனத்தில் சிலர் இறங்க முன்வந்தனராயினும், அவர்கள் எண்ணம் நிறைவேற வில்லை. இவ்வளவுக்கு மத்தியில் சுமார் 4 இலட்சம் மக்களி டம் எங்கள் நோக்கங்களை எடுத்துச் சொல்லி வந்திருக் கிறோம். அதே மூச்சில் இன்றும் சுமார் 1½ லட்சம் ஜனங் களுக்கு முன் நாங்கள் நிற்கின்றோம்.

**தலைவர்கள் தரிசனம்**

என்ன எண்ணத்தோடு தமிழர் பெரும்படை புறப்பட்ட தோ, அது பூரண வெற்றி கண்டுவிட்டதென்பதில் நான் சந்தோஷப்படுகிறேன். திருச்சியில் ஆசி கூறி வழியனுப்பிய எங்கள் ஒப்புயர்வற்ற பெருந்தலைவரான அதே ஈ.வெ.ரா. அவர்கள் இன்று எங்களை வரவேற்று வாழ்த்திச் சந்தோ ஷிக்க எங்கள் முன் உங்கள் மத்தியில் வந்திருக்கிறார். மற்றும் மறைமலை அடிகள், தோழர்கள் சோமசுந்தர பாரதியார், சர்.பி.டி.ராஜன், சண்முகானந்தா, டாக்டர் தர்மாம்பாள், தோழியர் மீனாம்பாள் சிவராஜ் முதலிய பல தலைவர்களும், ஜனசமுத்திரம் எனச் சொல்லத்தக்கவாறு பொது மக்களும் எங்களுக்குத் தங்கள் தரிசனத்தின் மூலம் மகிழ்ச்சியளிக் கின்றனர்.

**நன்றிகூறல் : தலைவர்**

**எமது வேண்டுகோளுக்கிணங்கி ராவ் சாகிப் ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள் 60க்கு மேற்பட்ட தமது தள்ளாத வயதில் இப்படையைத் தலைமை வகித்து நடத்த இசைந்தமைக்கு தமிழர் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**சேனாதிபதி**

சேனாதிபதியான தோழர் அழகர்சாமி அவர்கள் எமது வந்தனத்தை எதிர்பார்க்கமாட்டார் என்பதை நான் அறிவேன். அவர் இப்படையின் சேனாதிபதி பதவியை ஒப்புக்கொண்ட தன் மூலம் தமது கடமையைச் செய்ததற்காக நன்றிகூற வேண்டிய அவசியமே இல்லை. அவருக்குள்ள ஊக்கமும், அவர் எமது வேண்டுகோளைத் தட்டமாட்டார் என்கிற நம்பிக்கையுமே என்னை இத்தமிழர் பெரும்படையைத் திரட்டும்படி தூண்டிற்றென்றால் மிகையாகாது.

**துணைத் தளகர்த்தர்**

துணைத் தளகர்த்தராக வந்த தோழர் ரவூப் சாயபு அவர்களுக்கு தமிழர் சார்பாக எமது வணக்கம் உரியதாகுக.

**மெஸ் கேப்டன்**

பெருஞ் சோற்றுக்கிழவியாக (மெஸ் கேப்டன்) அங்கம் பெற்று எங்களுக்குச் செவிலித்தாய் போன்றிருந்து ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிப் படையோடு நடந்துவந்த அன்னை ராமாமிர்தம் அம்மையாருக்கு என் இருதயப்பூர்வமாக நன்றியறிதலைத் தெரிவித்தாக வேண்டும்.

**ஸ்டோர்கீப்பர்**

தொண்டருள் தொண்டராகச் சேர்ந்து வந்து, எங்கள் கண்காணிப்பாளராகவிருந்து பொறுமையோடு பொறுப்புடனி ருந்து சேவை செய்த தோழர் எம். ரெங்கசாமி முதலியார் அவர்களுக்கும் எமது வணக்கம் உரியதாகும்.

**படை வீரர்கள்**

படை வீரர்கள் இடையிடையே ஏற்பட்ட எல்லாவிதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் உட்பட்டு நடந்து வந்த தன்மையை நினைக்கும்போது இத்தகைய தொண்டர்கள் ஆயிரக்கணக் கில் இருந்தும் தமிழர் நிலை உயரவில்லையே-இன்னும் பல தமிழர் உணர்வற்றுப் பார்ப்பனர் பாதம் வருடிக் காலங்கழிக் கின்றனரே என்று ஏங்கி வருந்த வேண்டியவனாயிருக் கிறேன். தமிழர் படையில் சேர்ந்தவர்களைப் போன்ற ஊக்கமுள்ள - எதற்கும் சளைக்காத வீரர்களை நான் என்றும் கண்டதில்லை. இந்த 42 நாள்களாக எல்லோரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல் ஒன்று சேர்ந்திருந்த ஒற்று மையை நினைக்கும்போது உள்ளூரச் சந்தோஷப்படுவதைத் தவிர, அந்த உணர்ச்சியை வெளியிடுவதற்கான வார்த்தை கள் தெரியாது தவிக்கிறேன் என்று தான் சொல்லி ஆறுதல் அடைய வேண்டியதிருக்கிறது.

**பரவஸ்து ஆச்சாரியார்**

படை திருச்சியை விட்டுப் புறப்பட்டது முதல், விழுப்புரம் வரை எங்களுடன் வந்து எங்கள் கொள்கையில் ஒன்றாகக் கலந்து, அநேக இடங்களில் சொற்பொழிவாற்றி, பலவித இன்னல் இடைஞ்சல்களுக்கு ஆளான காஞ்சி பரவஸ்து ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் உதவியை என்னால் ஒருக்காலும் மறக்க முடியாது.

**கலியாணசுந்தரம்**

உடல் நலிவின் காரணமாக சேனாதிபதி தோழர் அழகர்சாமி கடலூரில் ஓய்வெடுத்து நின்றது முதல் செங்கல் பட்டு வரை எங்களோடு வந்து எல்லா ஊர்களிலும் சொற் பொழிவாற்றித் தமிழர் பெரும்படைக்கு உதவி செய்த காஞ்சி கலியாணசுந்தரம் அவர்களுக்கு எமது வந்தனம் உரித்தாகுக.

**கயப்பாக்கம் ஜமீன்தார்**

படைக்கு சகலவித உதவியும் செய்து, எங்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணைவராகவுமிருந்த கயப்பாக்கம் ஜமீன்தார் தோழர் முத்துலிங்கா ரெட்டியார் அவர்களுக்கு எமது படையின் சார்பாக வணக்கங் கூறாவிட்டால் தமிழ் மரபின் வழக்கத்தைக் கைவிட்டவனாவேன்.

**இணையற்ற படை**

**தமிழர் பெரும்படையைப் போன்ற பெரும்படை இவ்வளவு தூரம் சுமார் 600 மைல் நடந்தது இது வரை எதுவுமே இல்லை. காந்தியின் டாண்டிஜதாவும், தோழர் ராஜகோபாலாச்சாரியின் வேதாரண்ய உப்பளப் படையும், தமிழர் பெரும் படையில் நாலில் ஒருபாக அளவில் கூட நடக்கவில்லை. ஆகவே இது இந்திய சரித்திர உலகில் ஒப்பற்ற பெரும்படை என்ற உயர்வை அடைந்துவிட்டதென்பது மிகையாகாது. இவ்வளவுக்கும் காரணம் இதிலுள்ள தொண்டர்களே ஆகும்.**

**படை கலைப்பு**

ஆரம்பத்திலேயே தமிழர் படையின் முடிவைப் பற்றி எனது அறிவிக்கை மூலம் வெளியிட்டிருக்கிறேன். அதே பிரகாரம் படை இன்றோடு இந்த கடற்கரைக் கூட்டத்தோடு முற்றுப் பெறுகின்றது. உத்தியோக தோரணையில் இன்று மாலையோடு படையைக் கலைக்கின்றேன் என்பதை இதன் மூலம் இலட்சக்கணக்கான உங்கள் முன்னிலையில் தெரிவிக்கிறேன். ஆனால் படையைச் சேர்ந்த தொண்டர் களாகிய நாங்கள் கடந்த 42 நாள்களாகத் தொடர்ந்து நடந்து வந்த களைப்பினால் இன்னும் 5 நாட்கள் மட்டும் சென் னையில் தங்கி ஓய்வுபெற்றுக்கொண்டு, அவரவர் இஷ்டப்படி விலகிப் போய் விடுவோம்.

எல்லோருக்கும் எமது வணக்கம்.

(குடியரசு 18-9-1938)

**(தொடரும்)**

# வாலாச வல்லவனின் தாயார் முனியம்மாள் படத்திறப்பு



வேலூர் மாவட்டம் வாலாசா வட்டம் வை. ச.மோட்டூரில் வாலாசா வல்லவனின் தாயார் முனியம்மாள் 16.11.2015 அன்று மறைவுற்றார். அம்மையாரின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி அவர்தம் இல்லத்தில் நடைபெற்றது. கி.மாசிலாமணி தலைமை தாங்கினார். வாலாசா வல்லவன் வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர் க.முகிலன் முனியம்மாளின் படத்தினைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரை நிகழ்த்தினார். மோ.சி.சங்கர், முனைவர் ப.வெங்கடேசன் மக்கள் நெஞ்சம் ஆசிரியர் கலச.இராமலிங்கம் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

# 95 அகவை பெரியார் தொண்டர் செ.இராமச்சந்திரன் மறைந்தார்



பெரியாரின் பெருந்தொண்டரும், சென்னை ஆலந்தூர் திராவிடர் கழகத்தில் நீண்டநாள் தொண்டாற்றியவரும், இறுதி வரையில் பெரியாரின் கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றிய வருமான பெரியவர் சென்னை, ஆலந்தூர் செ.இராமச்சந்திரன் அவர்கள் தம் 95ஆம் அகவையில், 29-11-2015 அன்று மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

அன்னார் தொடர் வண்டித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்ச்சி 30-11-2015 அன்று நடை பெற்றது.

மறைந்த செ.இராமச்சந்திரன் அவர்களுக்கு மனங்கசிந்த இறுதி அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.

**- ஆசிரியர் குழு**

# உவமைக்கவிஞர் சுரதா அவர்களின் துணைவியார் சுலோச்சனா அம்மையார் மறைவு



மறைந்த உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் துணைவியார் சுசீலா அம்மையார் கடந்த 23-11-2015 செவ்வாயன்று (அன்றுதான் சுரதா அவர்களின் 95ஆவது பிறந்தநாள்) தம் 80ஆம் வயதில் சென்னையில் மறைவுற்றார். இவர் சுரதா அவர்களில் ஒப்பற்ற வாழ்க்கைத் துணைவராய் வாழ்ந்தவர். இல்லம் நாடிவந்த அத்தனை பேர்க்கும் இனிய விருந்தோம்பிய பண்பாளர். அன்னாரின் படத்திறப்பு 22.12.2015 செவ்வாய் மாலை 6 மணியளவில் தியாகராய நகர் அஞ்சலகம் அருகில் உள்ள லிங்கமூர்த்தி அரங்கில் நடைபெற்றது. பலரும் அன்னாரின் அரும் பண்புகளை நினைவு கூர்ந்து உரையாற்றினர். மறைந்த அம்மையார் அவர்களின் மறைவுக்கு அவரின் மகன் கல்லாடன் மற்றும் அவர்தம் இல்லத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலை மா.பெ.பொ.க. சார்பில் உரித்தாக்குகிறோம்.

# குற்றம் சாட்டப்பட்ட நீதிபதி

- இராமியா

பொதுப் போட்டி முறையில் திறமைசாலிகள் தேர்ந்து எடுக்கப்படுவது இல்லை என்பதையும், இட ஒதுக்கீட்டின் மூலம் ஓரளவிற்காவது திறமைசாலிகளைத் தேர்ந் தெடுக்க முடிகிறது என்பதையும், முழு அளவில் திறமைசாலிகளைத் தேர்ந்து எடுப்பதற்கான ஒரே வழி விகிதாச்சாரப் பங்கீடுதான் என்பதையும் புரிந்து கொள்ள முடியாத ஹர்திக் படேல் என்ற இளைஞர் மீதான வழக்கின் மீது தீர்ப்புக் கூறிய குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி ஜே.பி.பர்திவாலா (..) தனது கருத்தையும் அதில் தெரிவித்தார். "இந்திய நாட்டைக் கெடுக்கும் அல்லது முன்னேறவிடாமல் தடுக்கும் இரண்டு விஷயங்கள் என்னவென்று கேட்டால், அவை இட ஒதுக்கீடும், ஊழலும் என்று கூறுவேன். சுதந்தரம் அடைந்து 65 ஆண்டுகளுக்குப் பின்னும் ஒருவன் இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்பது மிகவும் வெட்கக்கேடான விஷயம்" என்பதுதான் அந்தக் கருத்து. இத்தீர்ப்பும், கருத்தும் வெளிவந்த பின் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், இந்திய பொதுவுடைமைக் கட்சி, தி.மு.க., பகுஜன் சமாஜ் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அந்நீதிபதி மீது குற்றஞ்சாட்டி, நாடாளுமன்றத்தில் விவாதித்து, தண்டனை வழங்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவரிடம் மனு கொடுத்தனர். இட ஒதுக்கீட்டிற்கு எதிரான இக்கருத்தை ஒப்புக் கொள்ள முடியாது என்றும், இப்படிப்பட்ட கருத்து உடைய ஒருவர் நீதிபதியாகப் பதவி வகிப்பது, நீதித்துறையின் மீது நம்பிக்கை இழக்கச் செய்வதாக உள்ளது என்றும் அம்மனுவில் அவர்கள் கூறியுள்ளனர், இதன் தெடர்ச்சியாக 18.12.2015 அன்று அந்த நீதிபதி, தனது கருத்து வழக்கின் தீர்ப்புக்குத் தொடர்பு இல்லாதது என்றும், தேவை இல்லாதது என்றும் கூறி, அத்தீர்ப்புரையில் இருந்து விலக்கிக் கெண்டுவிட்டார். அதன் மூலம் குற்றச்சாட்டில் இருந்து நழுவிக்கெண்டார். இட ஒதுக்கீட்டிற்கு எதிராக ஒரு நீதிபதி கருத்தைக் கூறியவுடன், அதை எதிர்த்து அவர் மீது குற்றஞ்சாட்ட முனைந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் பாராட்டிற்கு உரியவர்கள். அதுவும் அவர்களுடைய உடனடியான செயல்பாடு மிகவும் பாராட்டிற்கு உரியது. ஆனால் மண்டல் குழுவின் சில பரிந்துரைகளை ஏற்று வி.பி.சிங் அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு மைய அரசு வேலை வாய்ப்பில் 27 இட ஒதுக்கீடு அளித்ததற்கு எதிரான வழக்கில், இட ஒதுக்கீட்டிற்கு 50 உச்ச வரம்பு விதித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, சமூக நீதிக்கு மிகவும் கேடு பயக்கும் தீர்ப்பாகும். அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இட ஒதுக்கீட்டு அளவுக்கு எவ்விதமான உச்ச வரம்பும் விதிக்கப்படவில்லை. அப்படி இருக்கையில், சமூக நீதிக்குக் கேடு பயக்கும் இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள் மீது குற்றஞ் சாட்டி, நாடாளுமன்றத்தில் விவாதித்து, தண்டனை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வராதது மிகவும் மானக்கேடான விஷயமாகும். இட ஒதுக்கீடு சிறப்பான முறையில் செயல்பட்ட இடங்களில் எல்லாம், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர்சாதிக் கும்பலினரைவிடத் திறமைசாலிகள் என்று மெய்ப்பித்து இருக்கும்போது, இட ஒதுக்கீட்டுக் கெள்கையை மேலும் விரிவுப்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்காமல் 50க்குக் குறுக்கிய நீதிபதிகள் நாட்டு முன்னேற்றத்திற்கு எதிரானவர்கள் என்று நாடாளு மன்றத்தில் விளக்கி இருக்க வேண்டும். அப்படி விளக்கி விட்டு, நாட்டு முன்னேற்றத்தைப்பற்றி அக்கறை கொள்ளாதவர்கள் தகுந்தபடி தண்டிக்கப்பட்டு இருக்க வேண்டும். எந்த அரசியல் கட்சியும் அப்படிச் செய்ய முன்வராதது மிகவும் வேதனைக்குரியது. சரி! அப்படித் தான் செய்யவில்லை. உச்சநீதிமன்றத்தின் 50 உச்ச வரம்புத் தீர்ப்பைச் செயலற்றுப் போகச் செய்யும் விதமாக, அரசியல் நிர்ணயச் சட்டத்தில் திருத்தம் செய்து இருக்கலாம் அல்லவா? அதையும் செய்யவில்லை. சரி! காலம் கடந்து, இப்போதாவது இதைச் செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வருவார்களா?

## வாணியம்பாடியில் பெரியார் ஈ.வெ.ரா மேதை அம்பேத்கர் ஆகியோர் நினைவு நாள் கூட்டம்

வாணியம்பாடி தமிழ்ச் சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில், 27-12-2015 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு பிரைட் டுடோரியல் மையத்தில் பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் நினைவுநாள் கூட்டம், மன்றத்தின் தலைவர் மு.சுப்ரமணியம் தலைமையில் நடை பெற்றது. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் தோழர் மோ.சி.சங்கர் தொடக்கவுரையாற்றினார்.

மன்றத்தின் செயற்குழு உறுப்பினர், சகாதேவன் வரவேற்புரையும், மா.பெ.பொ.கட்சியின் மாநில இளைஞர் அணிச் செயலாளர் அ.முத்தமிழ்ச்செல்வன் பெரியாரியலைப் பற்றிய சரியான பார்வையில் விரிவாக பல புதிய செய்திகளைப் பதிவு செய்தார். அம்பேத்கரியம் பற்றி வாணியம்பாடி தோழர் அ.கசேந்திரன் தற்போது நம்முன் உள்ள நெருக்கடியில் அம்பேத்கரியத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து விளக்கிக் கூறினார். துணைச் செயலாளர் சினி.பழனி நன்றியுரையோடு கூட்டம் நிறைவு பெற்றது.

# திராவிடர்களே, பார்ப்பனரைப் பாருங்கள்!

## கும்பகோணத்தில் கி.பி.1542 முதல் 2015 வரை 473 ஆண்டுகளாக நடைபெறும் ராஜவேத காவிய பாடசாலை



கும்பகோணம் மகாமகக் குளத்தைச் சுற்றி 16 கல் மண்டபங்கள் உள்ளன. இந்த மண்டபங்களைக் கட்டியது நாயக்க மன்னர்கள் ஆட்சியில் முதன்மை அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதர்.

கன்னடரான மைசூர் தசரத ராம அய்யரின் மகன்தான் கோவிந்த தீட்சிதர். தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களான சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர் இம்மூவரின் ஆட்சிக்காலங்களில் முதன்மை அமைச்சராகவும் குலகுருவாகவும் இருந்தவர் கோவிந்த தீட்சிதர்.

ரகுநாத நாயக்கர் தனது ஆட்சிக்காலத்தில் கோவிந்த தீட்சிதரின் சேவையை மெச்சி அவருக்கு எடைக்கு எடை பொன் கொடுத்தார். அதை அறப்பணிகளுக்குச் செலவிட்ட கோவிந்த தீட்சிதர், கும்பகோணம் மகாமகக் குளத்துக்குப் படிக்கட்டுகள் அமைத்ததுடன் குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்களை எழுப்பினார்.

**இவரது காலத்தில் கும்பகோணம் யாகசாலை தெருவில் இவரால் கி.பி.1542இல் தொடக்கப்பட்ட 'ராஜ வேத காவிய பாடசாலை'க்கு இப்போது வயது 473.**

கோவிந்த தீட்சிதர் வழி வந்த ஒன்பதாம் தலைமுறை வாரிசான ரவி தீட்சிதர் வேதபாடசாலை குறித்து, 'தி இந்து'விடம் பேசினார். ''ராஜவேத காவிய பாடசாலையில் வேதம் படித்தவர்கள் இப்போது உலகம் முழுவதும் உள்ளனர். வேத பாராயணங்களைப் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு இங்கு தங்குமிடம், உணவு உள்ளிட்டவை இலவசமாகக் கொடுத்து மூன்று வேதங்களையும் முறைப்படி கற்றுத் தருகின்றனர். மூன்றிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரையிலான வேதப் படிப்புகள் இங்கு உள்ளன. வேதம் படித்துக் கொண்டே பள்ளிப்படிப்பையும் தொடரலாம்'' என்றார். ரவி தீட்சிதர்.

பல ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்படாமல் இருந்த கோவிந்த தீட்சிதரின் ராஜவேத காவிய பாடசாலை மகாமகத் திருவிழாவை முன்னிட்டு. கடந்த ஏப்ரல் முதல் புதுப்பிக் கப்பட்டு வந்தது. இதற்கான பணிகள் முடிந்து இன்று (நவ.1) மீண்டும் திறக்கப்படுகிறது.

(''தி இந்து'', 01-11-2015, சென்னை)

* இங்கு, 170 பார்ப்பன மாணவர்கள்,
மூன்று வேதங்களையும்;
புரோகிதம் செய்கிற முறையையும்;
சமற்கிருத மொழியையும்
5 ஆண்டுகளுக்குப் படிக்கிறார்கள்.

நால்வருணம் இந்து மதத்தில் மட்டுமே உண்டு. பார்ப்பனர் அல்லாதார் அனைவரின் வீடுகளிலும் பார்ப்பனர்கள் புரோகிதம் செய்வதற்கு, இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. தேவ மொழி எனப்படும் சமற்கிருதம் கற்றுத் தரப்படுகிறது.

இங்கே இவற்றைக் கற்றவர்கள்,

* தமிழகம் முழுவதிலும்
* இந்தியா முழுவதிலும்
* உலக நாடுகளிலும்

வேதக் கொள்கைகளைப் பரப்புகிறார்கள்!

நமக்கு-திராவிட இனத் தமிழர்களுக்கு
நாம் என்னென்ன கற்றுத் தருகிறோம்?

# வெள்ளப்பாழ்! தாம்பரம் பகுதியின் உண்மை நிலை

2015, திசம்பர் 1 முதல் 6 வரை கொட்டிய மழை இதுவரை நாம் எவரும் கண்டிராத பெருமழை யாகும். இந்த ஆறு நாள்களில் பெய்த மழை அளவு சுமார் 100 செ.மீ. இருக்கும். எங்குப் பார்த்தாலும் வெள்ளம்; கடலில் தெரியும் தீவுகள் போல் பல மாடி வீடுகள் மட்டும் தெரிந்தன. தெருக்களில் வெள்ளம் நிற்கவில்லை; காவிரி ஆறுபோல் பாய்ந்து ஓடியது. பாம்புகள் நீரில் அடித்து வரப்பட்டன; அவை வீடுகளில் புகுந்தன.

பழைய பெருங்களத்தூரில் அனைத்து வீடுகளிலும் கீழ்த்தளத்தில், பள்ளத்திற்கு ஏற்ப, 3 அடிமுதல் 10 அடிவரை நீர் தேங்கியது. கீழ்த்தளத்தில் இருந்த அனைத்துப் பொருட்களும் நாசமாகிவிட்டன. உணவுப் பொருட்கள், மின்மோட்டார்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், கட்டில், மெத்தை, புத்தகங்கள் போன்ற பல பொருட்களும் முற்றிலும் சேதமடைந்தன. கீழ்த்தளத்தில் வெள்ளம் புகுந்ததால் பலர் வீட்டைவிட்டே சென்றுவிட்டனர். சிலர் மாடி வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கினர்.

இவ்வளவு சேதத்திற்கும் காரணம் நம்மை ஆட்சி செய்த-செய்கிற திராவிடக் கட்சிகளே காரணம். நாட் டைச் சுரண்ட அய்யா விதைபோட்டார். அம்மா அறு வடை செய்தார் என்ற கூத்துப்போல் மக்கள் ஏமாந்த னர். வெள்ளப் பகுதியில் உதவிகள் செய்தவை தொண்டு நிறுவனங்களும் இசுலாமிய இளைஞர் அமைப்பினரும் பொது மக்களும் சில கல்லூரி மாணவ-மாணவிகளும் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவர்கள்,

உணவு, பால், தண்ணீர், போர்வை, ரொட்டித் துண்டுகள், மருத்துவச் சேவைகள், மீட்புப் பணிகள் போன்றவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கும் தொண்டை இவர்கள் செய்தனர். இந்த நிலையை பெரும்பாலான அரசியல்வாதிகளும் அரசு அதிகாரி களும் கள ஆய்வு செய்யவில்லை. காலம் கடந்து வந்த கட்சிக்காரர்களையும் அரசு அதிகாரிகளையும் பொதுமக்களே பலர் திருப்பி அனுப்பிவிட்டனர். இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்று வாய்கூசாமல் அவர்கள் பொய் சொல்லி நாடகமாடுகின்றனர்.

இதுபோன்ற பேரிடர்கள் நேராமல் இருக்க, குறைந் தது வரும் 100 ஆண்டுகளுக்கு முன்கூட்டித் திட்டங்கள் தீட்டி, திருடாமல் அரசு செயல்பட்டால் இனிவரும் காலங்கள் நல்லபடியாக இருக்கும். இதுபோன்ற இப் போதைய வெள்ளப்பெருக்கிற்குக் காரணம் அனைத்து ஏரிகள், நீர்நிலைகள், நீர்வழி வாய்க்கால்கள், குறிப்பாக நம்மை ஆண்ட கட்சிக்காரர்கள் ஆக்கிரமித்து, அவர



வர்கள் ஆட்சிக் காலத்தில் மனை போட்டு விற்றனர். தடுக்க வந்த பொதுமக்களை இன்றுவரை காவல்துறை யினரும் அரசு அதிகாரிகளும் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் மக்களின் பக்கமில்லை. ஆளும் கட்சிக்குக் கூட்டுக்கொள்ளையடித்துக் கெடுத்துவிட்டனர். உலங்கு வானூர்தியில் நானும் பார்த்தேன் என்பதும், கட்சித் தொண்டர்கள் அவரவர் கட்சிக்காரர்களை வைத்து உதவி செய்வது போல் படமெடுத்துக் கொண்டதும் நாங்கள் முன் எச்சரிக்கையாகக் காவல்துறையினர் மூலம் எச்சரித்தும் போகாமல் இருந்ததால்தான் இவ்வளவு உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்பட்டது என்பதும், இவ்வளவு பாதிப்பை மழையால் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை என்பதும் நாடகமேயாகும்.

வெளிநாட்டில் வாழும் தமிழ் நெஞ்சங்கள் ரூ.4000 கோடிக்குமேல் உதவித்தொகை அனுப்பி உள்ளதாக வும், பாதிப்பு இல்லாத பகுதியிலிருந்து மனம்நிறைந்த உதவிகளைச் செய்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

மத்திய அரசும் உதவிகள் செய்வதாக உறுதி கூறு கின்றது. ஓட்டுக்காக அனைத்து உதவிகளும் நான் மட்டுமே செய்தேன் என்று விளம்பரம் செய்து கொள் ளும் கூத்தாடிகளும் உள்ளனர். தமிழ்நாடு முழுக்கப் பழையபடி அனைத்து நீர்நிலைகள் வரத்து வழி வாய்க்கால்கள், ஏரிகள், குட்டைகள் அனைத்தும் 1960 இல் இருந்தபடி ஆக்கிரமிப்பை அகற்றிச் சரிசெய்தால் தமிழ்நாடு வளம்பெற வாய்ப்பு உள்ளது. இனியும் இதைச் செய்யாத அரசுகள் அனைத்தும் மக்கள் விரோத அரசுகளே ஆகும்.

தாம்பரத்தில் பழைய பெருங்களத்தூரில் முழுக்க நான்கு அடிக்கு குறைவில்லாமல் அதிக அளவு 10 அடி வரை நீர் தேங்கியது. இந்த நீர்த்தேக்கத்தால் அனைத்து எலிகளும், நாய்களும், நீரில் சிக்கிய ஆடு, மாடுகளும் அடித்துச் செல்லப்பட்டன.

கழிவுநீர் வாய்க்கால்கள் மேல் உள்ள சிமெண்ட் பலகைகளை அகற்றிவிட்டு அகலப்படுத்தாமல் செலவு காட்டும் வகையில் தரமற்ற கால்வாய்களை மழைக் குப் பிறகு வெட்டுகின்றனர், மழைக்குப் பிறகு வெட்டின கால்வாய்கள் அனைத்தும் சோதனை செய்தால் ஒப்பந்தம் செய்து வேலை செய்தவர்களைப் பல நாள் கைதியாகச் சிறையில் அடைக்கலாம். மனசாட்சியே இல்லாமல், மக்கள் வரிப்பணத்தைச் செலவு செய் கின்றனர். பாதாள சாக்கடை கட்ட ஒவ்வொரு வீட்டுக் காரரிடமும் ரூ.16000 முதல் 20000 வரை பணம் நகராட்சியில் மன்ற உறுப்பினர்கள் வசூலித்ததாகப் பகுதிவாழ் மக்கள் கூறுகின்றனர். இன்னமும் பாதாள சாக்கடை திறக்கப்படவில்லை.

சில மாடி வீட்டுக்காரர்கள் இப்பொழுதும் பொறுப் பில்லாமல் நடந்துகொள்கின்றனர். அனைத்துக் குப்பை மற்றும் கழிவுகளைக் கழிவுநீர் கால்வாயில் போடு கின்றனர். மீதமான உணவுகளையும், வேண்டாத பொருட்களையும் கால்வாயில் போடுவதால், அடைப்பு ஏற்பட்டு நீர் தேங்குகின்றது. குப்பை மற்றும் கழிவு களைச் சேர்த்துக் குப்பைத் தொட்டியில் போட்டால், அனைவரும் நலம் பெறலாம்.

**- உழவர் மகன் ப.வ.**

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **ப.வீரமணி** |
| பிறந்தநாள் | : | 14-05-1985 |
| தந்தை | : | இரா. பன்னீர்செல்வம் |
| தாய் | : | நா. தமிழ்ச்செல்வி |
| படிப்பு | : | எம்.எஸ்ஸி (அப்லைடு) புவியியல் (Geography) |
| கல்வி | : | B.E., (ICE) |
| பணி | : | OMR RESEARCH COMPANY |
| மாத ஊதியம் | : | ரூ.30,000 |
| வகுப்பு | : | அகமுடையார் (அகமுடையார் அல்லாதவர்கள் தொடர்பு கொள்ளவும்) |
| உடன்பிறந்தோர் | : | தங்கை ஒருவர் |
| மணமகள் தேவை | : | பட்டப் படிப்புப் பெற்றுப் பணி யில் உள்ளவர்; பெரியாரியல் கொள்கையாளர் |
| முகவரி | : | சூலூர் அஞ்சல், கோவை மாவட்டம் - 641 402. |
| கைப்பேசிகள் | : | 9942645497, 9842090054 |

## வறுமை

**ர.தமிழ்ச்செல்வி**

சாணம் மெழுகிய சமதளத்தில்
சின்னதாய் நான்கு மண்சுவர்கள

நின்றாலும் இடிக்கும் காலை
நீட்டினாலும் இடிக்கும்
பனைஓலைப் பந்தலென
குடிசை!

எங்கள் அடுப்பருகில்
உறங்கும் பூனை
அவ்வப்போது
அதற்குள்ளேயும் உறங்கும்!

ஆழாக்கு நொய்யிருந்தால்
அரைவயிற்றுக் கஞ்சியாகும்
குப்பைக் கீரைகள்
குழம்புக்குத் துணையாகும்

வேகவைத்த பருப்புக்குழம்பு
வெகுநாளுக்கொருமுறைதான்

எவர் வீட்டிலாவது
எஞ்சிய குழம்பு கிடைக்கையில்
வீணாக்க விரும்பாமல்
கெட்டிக்கூழுக்குத் தொட்டுக்கொள்ளுவோம்

காய்கறிகள் நறுக்குவதற்காக
வாங்கிவந்த
எரவானத்தில் சொருகிவைத்த கத்திக்கு
வேலையே இல்லை
எங்கள் குடிசைக்குள்!

## தோழர் பெ. சரவணன் மறைந்தார்



பெரியார் தொண்டர் செஞ்சி பெரியார் சாக்ரடீசு அவர்களின் அண்ணன்-சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பெ. சரவணன் அவர்கள் உடல் நலக் குறைவால் 09-12-2015 அன்று மறைந்தார் என்பதை வருத்துத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி மற்றும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினரின் சார்பில் அன்னாரின் குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்கு கிறோம்.

# திருப்பி அடிப்பேன்



ஆன்ற மக்காள்! அரசியல் மக்காள்!
மாமழை போற்றும் மாத்தமிழ் மக்காள்
வேண்டி வந்துயிர் காக்கும் மனமுட
மாண்ட மழையின் மடலிது கேளீர்!

நீள்நெடுங் காலமாய் மண்ணும் நானும்
நேரிடர் இன்றி நெருங்கி இருந்தோம்
ஊழி ஊழியாய் உறவில் கலந்த
மாளாக் காதலில் மயங்கிக் கிடந்தோம்

எனக்கென எங்கும் ஏரி குளங்கள்
இருந்தன குட்டைகள் கால்வா யோடைகள்
வானி லிருந்து நான் வரும்போ தெல்லாம்
மண்மகள் எனக்கு மடியை விரிப்பாள்!

புல்முதல் மரம்வரை புவியில் யாவும்
என்னின் உறவால் மண்மகள் ஈன்றவை
ஓரறி வுள்ள உயிர்கள் முதலாய்
ஆறறி வுள்ள அனைத்துமென் பிள்ளைகள்

**மண்ணவள் மடியில் தாங்கிக் காத்தாள்**
**வானமு தூட்டி நானும் வளர்த்தேன்**
**ஆயினும் இன்றென் நிலைமை என்ன?**
**ஆரத் தழுவிய இடங்கள் எங்கே?**

**எனெக்கென இருந்த எல்லா**
**இடத்தையும்**
**தனக்கென வாழும் தன்னல மாக்கள்**
**மனைகள் போட்டு விற்றுத் தின்றார்!**
**மாடிகள் சமைத்தார்! மடக்கி**
**வளைத்தார்!**

**ஓடும் எங்கள் வழியை மறித்தார்**
**தேங்கும் எங்கள் நிலையைத் தூர்த்தார்**
**திராவிட ஆட்சிகள் தொடங்கிய முதலாய்**
**தொடங்கிய தெமக்கு அழிவுக் காலம்!**

எத்தனை நாள்தான் அமைதி காப்பது
எதற்கிவர் தொடர்பென வாரா திருப்பது
எந்தன் துணைவி மண்ணவள் கொதித்து
எத்தனை நாள்தான் காய்ந்து கிடப்பது?

இயற்கைக் கெதிராய் நடத்தும் போரை
இத்துடன் நீங்கள் நிறுத்திட வேண்டும்
மழைக்கென இருந்த இடங்களை யெல்லாம்
மறுபடி திருப்பித் தந்திட வேண்டும்

மண்ணில் வாழும் எல்லா உயிர்க்காய்
விண்ணில் இருந்து வருகின் றேன்நான்
மரம்செடி கொடிகள் பல்லுயிர் அழித்த
சுயநலம் தேடும் மக்களை வெறுத்தேன்!

என்னை அழித்து வாழ நினைத்தால்
எதிர்த்து அழிப்பேன்! திருப்பி அடிப்பேன்!
என்பதை உணர்த்த சென்னையைக் கொஞ்சம்
புரட்டி எடுத்தேன்! பொருத்தருள் வீரே!

**– பாவலர் வையவன்**

# நீதிக்கட்சி ஆட்சியின் சமூகப் புரட்சி

## (நீதிக்கட்சியின் நூற்றாண்டு சிறப்புக் கட்டுரை)

சென்ற இதழ் தொடர்ச்சி

- வாலாசா வல்லவன்

ஆதித் திராவிடர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏராளமான தொகை கடன் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 31.10.1931 இல் சட்டமன்றத்தில் ரங்கநாத முதலியார் நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ஆதித்திராவிடர்களுக்குக் கூட்டுறவுச்சங்கள் மூலம் எவ்வளவு கடனாக தரப்பட்டது. அதில் எவ்வளவு தொகை திரும்பப் பெறப்பட்டது என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு அரசு தெரிவித்த விடை வருமாறு:

| ஆண்டுகள் | கடன்கொடுத்த தொகை | கடன் வசூலான தொகை |
|---|---|---|
| 1921 - 22 | 1, 04, 543 | 73, 728 |
| 1922 - 23 | 1, 40, 340 | 87, 886 |
| 1923 - 24 | 93, 005 | 63, 413 |
| 1924 - 25 | 4, 29, 465 | 1, 89, 732 |
| 1925 - 26 | 2, 07, 542 | 76, 748 |
| 1926 - 27 | 5, 53, 283 | 1, 30, 098 |
| 1927 - 28 | 51, 252 | 60, 180 |
| 1928 - 29 | 49, 377 | 1, 21, 897 |
| 1929 - 30 | 63, 068 | 52, 589 |

*(ஆதாரம் சென்னை சட்டமேலவை விவாதக் குறிப்புகள் தொகுதி LVIII பக் 268)*

அனைவருக்கும் கட்டாயக் கல்விச் சட்டம் G.O.No.376 சட்டம் (கல்வி) நாள் 9.3.1923 மூலம், தொடக்கக் கல்விக்கு முக்கியத் துவம் அளித்தனர். நீதிக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கல்வித்துறையில் உயர்கல்விக்கே அதிகமாகச் செலவழித்து வந்தனர். இதனால் பெரிதும் பயனடைந்தவர்கள் பார்ப்பனர் களே. அதை மாற்றிப் பெருமளவு நிதி தொடக்க கல்விக்குச் செலவழிக்க வேண்டுமென நீதிக்கட்சியின் மாநாடுகளில் வலியுறுத்தப்பட்டது. அதனை ஆட்சிக்கு வந்தவுடன் செயல் முறையிலும் நடைமுறைப்படுத்தினர். தொடக்கக் கல்விக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்து வந்த மானியம் விவரம்:

| ஆண்டு | தொகை |
|---|---|
| 1920 - 21 | 34, 79, 134 |
| 1921 - 22 | 30, 37, 641 |
| 1922 - 23 | 41, 72, 787 |
| 1923 - 24 | 44, 51, 359 |
| 1924 - 25 | 49, 43, 065 |
| 1925 - 26 | 55, 37, 396 |

(ஆதாரம் சட்டமன்ற விவாத குறிப்புகள் பக் 407 நாள் 27.8.1927.) அந்தக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தான் தொடக்கக் கல்வியைப் - பள்ளிகளை நடத்தி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

28.7.1929 இல் மு.ஏ.ஹ சாமி என்பவர் சட்டமன்றத்தில் 1921 முதல் 1928 வரை புதிதாகத் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் எத்தனை என்று கேள்வி கேட்டார். அரசு தரப்பில் 19,095 பள்ளிகள் என்று பதில் அளிக்கப்பட்டது.

1925 - 26 இல் அரசு ஊழியர் வகுப்பு வாரி விவரத்தைச் சென்னை அரசின் நிர்வாக ஆண்டறிக்கையில் வெளியிடப் பட்டுள்ள புள்ளிவிவரம்.

| எண் | வகுப்பு | கெசட்ட் பதவி | கெசட்ட் அல்லாத பதவி மாத வருமானம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 100ரூ. மேல் | 35ரூ. மேல் | 35ரூ. கீழ் |
| 1. | பார்ப்பனர் | 402 | 3,403 | 8,197 | 92 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 215 | 1,901 | 5,238 | 29,357 |
| 3. | ஆதித் திராவிடர் | – | 2 | 54 | 1,175 |
| 4. | முகமதியர்கள் | 53 | 323 | 1,139 | 9,445 |
| 5. | ஆங்கிலோஇந்தியர் | 408 | 456 | 106 | 38 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 102 | 456 | 643 | 1,888 |
| 7. | மற்றவர்கள் | 16 | 2 | 17 | 412 |

*ஆதாரம்: 1925 - 26 ஆம் சென்னை மாகாண அரசின் ஆண்டறிக்கையின் பக்க எண் 201*

| எண் | வகுப்பு | கெசட்ட் பதவி | கெசட்ட் அல்லாத பதவி மாத வருமானம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 100ரூ. மேல் | 35ரூ. மேல் | 35ரூ. கீழ் |
| 1. | பார்ப்பனர் | 656 | 3,935 | 9,827 | 1,400 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 361 | 2,506 | 8,455 | 35,769 |
| 3. | ஆதித் திராவிடர் | 6 | 27 | 111 | 1,870 |
| 4. | முகமதியர்கள் | 101 | 404 | 1,821 | 10,556 |
| 5. | ஆங்கிலோ இந்தியர் | 392 | 474 | 522 | 22 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 10 | 760 | 1,551 | 2,648 |
| 7. | மற்றவர்கள் | – | 9 | 26 | 154 |

(1.04.1935 இல் வெளியிடப்பட்ட அரசு ஆண்டறிக்கை பக் 207)

இந்த இரண்டு புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆதித் திராவிடர்கள், மற்றும் பார்ப்பனரல்லாதார் அரசு வேலைகளில் சற்று அதிகரித்திருப்பதைக் காணலாம்.

முத்தையா முதலியர் பிறப்பித்த உத்தரவில் வகுப்புவாரி சுழற்சி முறை 1928இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 5 | 44% |
| 2. | பார்ப்பனர்கள் | 2 | 16% |
| 3. | முகமதியர்கள் | 2 | 16% |
| 4. | ஐரோப்பியர் ஆங்கிலோ இந்தியர் | 2 | 16% |
| 5. | ஆதி திராவிடர்கள் | 1 | 8% |
| | மொத்தம் | 12 | 100 |

இந்தப் பனிரெண்டு இடங்களும் சுழற்சி அடிப்படையில் நிரப்பப்பட்டன.

1. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
2. முகமதியர்கள்
3. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
4. ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறித்தவர்
5. பார்ப்பனர்கள்
6. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
7. ஆதித் திராவிடர்
8. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
9. முகமதியர்
10. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
11. ஆங்கிலோ இந்தியர், இந்தியக் கிறித்தவர்
12. பார்ப்பனர்கள்

இந்த வரிசை அடிப்படையில் தான் பதவிகள் நிரப்பப்பட்டன. ஆதித் திராவிடர்களில் படித்தவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் தான் அவர்களுக்குக் குறைந்த அளவு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் உயர்கல்வியில் பார்ப்பனர் ஆதிக்கத்தைக் குறைக்க முயற்சி செய்தது. **'கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவைக்'** கலை அறிவியல் கல்லூரி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் ஏற்படுத்தியது.

அந்தக் குழுவில் கல்லூரியின் முதல்வர், நீதிக்கட்சியைச் சார்ந்த துறைரீதியான அறிவு பெற்ற அறிஞர் ஒருவர் அந்தத் துறையின் இயக்குநர் (அ) செயலாளர் கல்லூரி முதல்வர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். 50 விழுக்காடு இடங்களுக்கு மேல் பார்ப்பனர் மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என்று அக்குழுவிற்கு அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (அரசு ஆணை எண் 536 கல்வி நாள் 20.05.1922)

1922 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் அக் கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவில் டாக்டர் நடேச முதலியார் இடம் பெற்றிருந்தார். மொத்தம் இடங்கள் 242. பார்ப்பன மாணவர்கள் 167 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். 50 விழுக்காடு அடிப்படையில் 121 பார்ப்பன மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மீதம் 46 பார்ப்பன மாணவர்களை சேர்க்க மறுத்தனர் (Madras mail 21.07.1922). கடந்த இரண்டாயிரம் ஆண்டு இந்திய வரலாற்றில் முதல் முறையாகப் பார்ப்பன மாணவர்களுக்கு இடமில்லை என்று சேர்க்க மறுத்த சமூகப் புரட்சி, நீதிக் கட்சி ஆட்சியில் தான் நடைபெற்றது.

7.12.21 இல் சி. நடேச முதலியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்புவாரி அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார்.

18.9.22. எஸ். சீனிவாச அய்யங்கார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்புவாரி அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார். இவர்கள் இருவர் கேள்விக்கும் அவரவர்கள் கேட்ட தேதியிலேயே சட்ட மன்றத்தில் பதில் அளிக்கப்பட்டது. ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இரண்டையும் இணைத்துக் கொடுத்துள்ளேன்.

| வ.எண் | | 1921 | 1922 |
|---|---|---|---|
| | மருத்துவர் படிப்பில் சேர்ந்த மொத்த மாணவர் எண்ணிக்கை | 88 | 91 |
| 1. | பார்ப்பனர் | 58 | 33 |
| 2. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 15 | 36 |
| 3. | இந்தியக் கிறித்தவர் | 9 | 15 |
| 4. | ஆங்கிலோ இந்தியர் | 6 | 2 |
| | மொத்தம் | 88 | 91 |

மருத்துவக் கல்லூரிச் சேர்க்கையில் 1921க்கும் 1922க்கும் இடைப்பட்ட ஓர் ஆண்டுக் காலத்தில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.1921 இல் 58 ஆக இருந்த பார்ப்பன மாணவர் எண்ணிக்கை 1922 இல் 33 ஆகக் குறைந்தது. 1921 இல் 15 ஆக இருந்த பார்ப்பனரல்லாத மாணவர் எண்ணிக்கை 36 உயர்ந்துள்ளதைக் (இரண்டு மடங்கு) காணலாம். இது கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவால் ஏற்பட்ட நன்மையாகும்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தாங்கள் ஆட்சியில் பணி புரிய உயர் கல்வி படித்த இந்தியர்களை உருவாக்குவதற்காக 1857 இல் சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. அவை இந்தியப் பல்கலைக் கழகச் சட்டத்தின் படி இயங்கி வந்தன.

1920 இல் நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு 1921 முதலே வகுப்பு அடிப்படையில் மாணவர் சேர்க்கை முதலானவற்றுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் இணங்க மறுத்து வந்தது. எனவே நீதிக்கட்சி அரசு 1923 இல் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டமசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி,

மாகாண அரசின் கட்டுப் பாட்டில் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்தது. சட்டப்படி, கல்வி அமைச்சர், துணை வேந்தருக்கும் மேலாக இணை வேந்தராக்கப்பட்டார்.

பல்கலைக் கழகச் செனட் அவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தினர். நீதிக் கட்சியினர் பலர் நடேச முதலியார் உட்பட செனட் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அதன் பிறகு தான் அதில் பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.

உயர்கல்வியில் பார்ப்பனர்கள் மட்டுமே படிக்க வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகப் படிக்காமல் தமிழ் உள்ளிட்ட எந்த மொழியிலும் பட்டம் வாங்க முடியாத நிலை இருந்தது.

**1924 இல் கல்வி அமைச்சராக இருந்த ஏ.பரசுராம பாத்ரோ சட்டமன்றத்திலேயே, இது திராவிட அரசு,இந்த அரசின் பணம் திராவிட மொழிகளுக்கு மட்டுமே செலவிடப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல், அரசாணையும் பிறப்பித்தார். [அரசாணை எண் 2123 சட்டம் [கல்வி] நாள் 08.12.1925.]**

அதன் பிறகு தான், 1925 இல் சென்னைப் பல்கலைக் கழகச் செனட் கூட்டத்தில் சமஸ்கிருதம் படிக்காமலேயே தமிழைப் படித்து புலவர் பட்டம் பெறலாம் என்ற நிலை உருவாயிற்று. 1926 முதல் தமிழை மட்டுமே படித்துத் தமிழ் பண்டிட்-பிற்காலத்தில் புலவர் படிப்புப் படிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. 1927 முதல் சமஸ்கிருதம் படிக்காமல் பி.லிட் படிக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழ் மொழிக்கு சமஸ்கிருதத்திலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தது நீதி கட்சி ஆட்சி தான்.

**இங்கிலாந்தில் I.C.S. படித்துவிட்டுத் தமிழகத்தில் வேலைக்கு வருபவர்களுக்குத் தமிழறிவு இருக்க வேண்டும் என்பதற்காகத், தமிழ் லெக்சிகன் தொகுக்கும் பணிக்கு 1906ல் பணம் ஒதுக்கியது ஆங்கில அரசு. பணம் செலவானாதே தவிர, ஒரு வேலையும் நடக்கவில்லை. 1921 க்குப் பிறகு பனகல் அரசர் திட்டமிட்டுப் பணம் ஒதுக்கி, 1922 இல் தமிழ் லெக்சிகன் முதல் தொகுதி வெளிவந்தது. நீதிக் கட்சி ஆட்சி முடிவதற்குள் 1936 இல் தமிழ் லெக்சிகன் ஏழாம் தொகுதி வெளியிடப்பட்டது. அவர்கள் தெலுங்கு மொழிக்கு இப்படி ஒரு லெக்சிகன் உருவாக்கிக் கொள்ளவில்லை. தமிழ் மொழிக்கு மட்டும் தான் செய்தார்கள்.**

**நீதிக் கட்சி தொடங்கிய காலத்தில் அரசியலில் காங்கிரசின் பேரால் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். கவர்னர் கவுன்சிலுக்கும், கவர்னர் ஜெனரல் கவுன்சிலுக்கும் பெரும்பாலும் பார்ப்பனர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில் தேர்தல் நடைபெற்றால் பார்ப்பனர்கள் மட்டுமே வெற்றி பெறுவார்கள் பார்ப்பனரல்லாதார்கள் முன்னேறுவது கடினம் என்று கருதிய நீதிக்கட்சியினர், அதன் செயல் தலைவர் டாக்டர் டி.எம். நாயரை இரண்டு முறை இலண்டனுக்கு அனுப்பிப் பார்ப்பனரல்லாதாருக்குத் தேர்தலில் நிற்கத் தனித்தொகுதியைப் பெற்றனர்.**

Non. Brahmin Reserved Seat என்ற பெயரில் தான் முதல் அரசாணை வெளிவந்தது.

(MRO Public (Retorms) G.O.335 A May 25 - 1920) பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் இருக்கக் கூடாது என்று கூறிப் பார்ப்பனர்கள் ஆங்கிலேயே அரசிடம் கோரிக்கைவைத்து, ஒரே மாதத்தில், ‘முகமதியர் அல்லாத தொகுதி’ என்று பெயர் மாற்றம் செய்து விட்டனர். முகமதியர்களுக்கு மிண்டோ மார்லி சீர்திருத்தப் படி 1909 முதலே அரசு பதவிகளில் 25% இட ஒதுக்கீடு, வழங்கப்பட்டிருந்தது.

நீதிக் கட்சியைச் சார்ந்த கிருஷ்ணன் நாயர் 4.7.1921 இல் பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்று சென்னை சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 44 பேர் ஆதரித்த னர் 13 பேர் எதிர்த்து வாக்களித்தனர். அதை உடனடியாகச் சட்டமாக்க ஆளுநர் மறுத்தார். 1926 முதல் தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

அதனால் தான், 1927 இல் முத்துலட்சுமிரெட்டி சட்டசபைக்கு நியமனம் செய்யப்பட்டார். அவைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட முத்து லட்சுமி ரெட்டிப் தேவதாசி ஒழிப்பு மசோதாவை முன்மொழிந்தார். அவர் நீதிக்கட்சியினரை நம்பாமல் சர். சி.பி. ராமசாமி அய்யரிடம் கொடுத்து மசோதாவைத் தயார் செய்திருந்தார். 1.12.1929 இல் அது சட்டமன்றத்தில் நிறைவேறிச் சட்டமானது. ஆனால் 18 வயது நிரம்பிய பெண்கள் தாமாக விரும்பினால் தேவதாசியாக ஆகலாம் என்று அந்தச் சட்டத்தில் ஒரு ஓட்டை இருந்தது.

9.10.1947 இல் ஓமந்தூரார் ஆட்சியில் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன், தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கொண்டு வந்து தேவதாசியாக மாறும்படி வற்புறுத்துவோருக்கு 500 ரூபாய் அபராதமும் ஆறுமாதம் சிறையும் என்று சட்டம் கொண்டு வந்து அந்த முறையை முற்றிலுமாக ஒழித்தார்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகச் சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் ஆற்றிய பங்களிப்புகள் ஏராளம். பெண்கள் கல்விக்காகப் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கினர். இந்தியாவில் பெண்கள் முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது என்பதை ஆராய்வதற்காக ‘அண்டர்’ (Hunter) தலைமையில் 1928 இல் ஒரு குழுவை இந்தியா முழுவதும் அனுப்பியது அன்றைய இந்திய அரசு. அக்குழுவின் அறிக்கையில் சென்னை மாகாணத்தில் பெண்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததைப் பாராட்டியுள்ளது.

பெண்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வரை கட்டணமில் லாமல் இலவசக் கல்வி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்படிச் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாக்கவும் பாடுபட்டது. நீதிக்கட்சி ஆட்சி இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் அன்று இல்லை என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

**இந்துமத பரிபாலன போர்டு:**

தென்னகத்தில் ஆட்சிபுரிந்த அரசர்கள் பெரிய பெரிய கோவில்களைக் கட்டி அவற்றிற்கு ஏராளமான சொத்துக்களையும் வைத்துச் சென்றனர். இவற்றைப் பார்ப்பனர்கள் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தனர். இந்தப் பார்ப்பனக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த பனகல் முயன்றார். இந்துமத பரிபாலனைச் சட்ட மசோதாவை 18.12.1922இல் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். கோவில்களின் வருமானத்தை அரசு ஊழியர்களைக் கொண்டு பராமரித்தல், உபரிநிதியைக் கல்வி, மருத்துவம் போன்றவற்றிற்குப் பயன்படுத்துதல் முதலானவை இச்சட்டத்தின் நோக்கங்களாகும். நீண்ட விவாதத்திற்குப் பிறகு, பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு 1923 நவம்பரில் இது சட்டமாக்கப்பட்டது. இதை நடைமுறைப் படுத்துவதற்குள் 1923 நவம்பர் மாதத்தில் முதல் அமைச்சரவையின் பதவிக் காலம் முடிவுற்றது.

இரண்டாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் 19.11.1923இல் பனகல் அரசரே முதல்வராகப் பொறுப்பேற்றார். இம்முறை ஒரு தமிழர் சிவஞானம் பிள்ளை அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்துமத பரிபாலனைச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காவண்ணம் பார்ப்பனர்கள் சதி செய்து, ஆளுநரும் ஒப்புதல் அளிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்.

**பனகல் அரசர் சளைக்கவில்லை. எப்படியாவது இதை நிறைவேற்றியே தீருவது என்று முடிவுசெய்து, மீண்டும் ஒரு மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இம்முறை சத்தியமூர்த்தி அய்யர் சென்னைப் பல்கலைக்கழக பட்டதாரித் தொகுதி மூலமாகச் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந் தார். அவர் இதை எதிர்த்து ஓயாமல் சட்டமன்றத்தில் பேசினார்; திட்டினார். 475 திருத்தங்களை அவர் ஒருவர் மட்டுமே கொண்டு வந்தார். மொத்தம் 800 சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. திருப்பதி கோவிலுக்கு மட்டும் விலக்கு அளித்தால் ரூ.5 இலட்சம் கையூட்டுத் தருவதாக பனகலிடம் பேசிப்பார்த்த னர். எதற்கும் பனகல் மசியவில்லை. 1925 நவம்பரில் வெற்றிகரமாகச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்தினார். பனகல் அரசுமீது மடாதிபதிகளும் கோவில் நிர்வாகிகளும் 50க்கும் மேற்பட்ட வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தனர். இதனால் காங்கிரசில் இருந்த பெரியாருக்கு, பனகல் அரசர் மீது நேசம் ஏற்பட்டது. காங்கிரசை விட்டுப் பெரியார் வெளியேறிய காலகட்டமும் அதுதான்.**

**பனகல் அரசர் காலத்தில்தான், 1924இல் சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் சமஸ்தான அரசுக்கும், இடையே காவிரி நீர்ப் பங்கீடு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் பயனாக மேட்டூர் அணைகட்டத் திட்டம் உருவாக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று 1924 முதல் 1933க்குள் 10 ஆண்டுகளில் 5,91,38,000ரூ. செலவில் கட்டி முடிக்கத்திட்டமிடப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு 3,10,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுத் தமிழகம் பஞ்சமில்லாமல் இருக்க வழிவகை செய்தார்.**

**ஆதித்திராவிடர்களின் நலனுக்காகச் செயல்பட்ட நீதிக் கட்சியைத் தலித்துக்கள் 'மேல்சாதியினருக்கான கட்சி' என்று கூறுவதும், சமஸ்கிருதப் பார்ப்பன மேலாண்மைக்கு எதிராகப் போராடி தமிழ் மொழிக்கு சமஸ்கிருதத்திலிருந்து விடுதலைப் பெற்றுத் தந்த நீதிக் கட்சியை 'தெலுங்கர்கள் கட்சி' என்று தமிழ்த் தேசியர்கள் கூறுவதும், உழைக்கும் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட நீதிக்கட்சியைப் பொதுவுடைமை வாதிகள் 'நிலக்கிழாரியக் கட்சி' என்று கூறுவதும் ஏற்கத்தக்கதல்ல. ஆயிரம் ஆண்டுகளாகச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை மற்றச் சாதிமக்களோடு இரண்டறக்கலந்து பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததே நீதிக்கட்சி ஆட்சி தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.**


## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **கோ. தமிழரசி** |
| பிறந்தநாள் | : | 16-02-1989 |
| கல்வி | : | B.E., (ICE) Full time preparation and resouce for UPSC, TNPSC - Group-I and II. Ultimate aim IAS or Gr.I or Gr.II Officer well versed in Civil attitude |
| உயரம் / நிறம் | : | 165 செ.மீ. சிவப்பு |
| இனம் | : | கவரா நாயுடு **(சாதி தடையில்லை)** |
| தமக்கை | : | கோ. விடுதலைச்செல்வி, MCA., திருமணமானவர். |
| தந்தை/தாய் | : | இல. கோவிந்தசாமி, வனச்சரக அலுவலர் (ஓய்வு) கோ. ஜெயஸ்ரீ, குடும்பத் தலைவி |
| எதிர்பார்ப்பு | : | பகுத்தறிவுச் சிந்தனையுள்ள படித்த பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். |
| நிலையான முகவரி | : | இல. கோவிந்தசாமி, FRO (Retd.) 576, அன்னை இல்லம், 5-வது குறுக்குத் தெரு, சண்முகா நகர், உய்யக்கொண்டான் திருமலை, திருச்சி - 620 102. |
| கைப்பேசி | : | 9443817261, 0431-2781086 |

# பார்ப்பனர்கள் படிப்பாளிகளேயொழிய அறிவாளிகள் அல்லர் - ஏன்?

**- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்**

இன்று, கல்வி அறிவென்பது பார்ப்பனர்களின் முற்றுரிமையாக உள்ளது. ஆனால், தம்மை உருவாக்கிய கத்தோலிக்க ஆலய வழிமுறைக்கு எதிராகப் போர் தொடுத்த அறிவு நாணயமுள்ள வால்டேரைப் போல, கெடுவாய்ப்பாக, தான் சார்ந்துள்ள மதத்தை எதிர்க்க எந்தவொரு பார்ப்பானும் இன்றுவரை முன்வரவில்லை. எதிர்காலத்திலும் எவனாவது ஒருவன் அப்படித் தோன்றுவான் என்றும் தெரியவில்லை. ஏகபோக கல்வி மான்களான பார்ப்பனர்களிடையே ஒரு வால்டேர் தோன்றவில்லை என்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். “பார்ப்பனர்கள் படிப்பாளிகளே தவிர, அறிவாளிகள் அல்லர்” என்பதை நினைவில் கொண்டால் அது வியப்பாய் இருக்காது. ஒரு அறிவாளிக்கும்-படிப்பாளிக்கும் உள்ள வேறுபாடு, மலைக்கும்-மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. படித்தவன் வர்க்க உணர்வோடு அவன் சார்ந்த வர்க்கத்தின் தேவைகளை நிறைவேற்றுவான். ஆனால் ஒரு அறிவாளியோ வர்க்கக் கண்ணோட்டங்களுக்கு அப்பாற்பட்டு, விடுதலையடைந்தவனாகவும், முழு உரிமையுடன் சிந்தித்துச் செயல்படுவான். பார்ப்பனர்கள் படிப்பாளிகளேயொழிய அறிவாளிகளல்ல. எனவேதான் அவர்களிடையே ஒரு வால்டேர் உருவாகவில்லை.

பார்ப்பனர்கள் ஏன் ஒரு வால்டேரை உருவாக்கவில்லை? இந்தக் கேள்விக்கு, வேறொரு கேள்வியின் மூலமே விடையளிக்கமுடியும். முகமது நபி தோற்றுவித்த இஸ்லாம் மதத்தை, துருக்கியை ஆளும் சுல்தான் ஏன் அழித்தொழித்திடவில்லை? எந்தவொரு போப்பாண்டவரும் ஏன் கத்தோலிக்க மதத்தைப் புறக்கணிக்க முன்வரவில்லை? நீலநிற கண்களை உடைய குழந்தைகளை எல்லாம் கொன்றிட பிரித்தானிய நாடாளுமன்றம் சட்டம் தீட்டாதது ஏன்? துருக்கியை ஆளும் முகமதிய சுல்தான், கிறித்துவ போப்பாண்டவர் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்றம் எந்தக் காரணங்களுக்காக அந்தச் செயல்களைச் செய்யவில்லையோ, அதே காரணத்திற்காகவே பார்ப்பனர்களும் ஒரு வால்டேரை உருவாக்கவில்லை.

தனி ஒருவனின் தன்னலனே அல்லது அவன் சார்ந்த வர்க்க நலனே எப்போதும் அவனுடைய அறிவாற்றலைக் கட்டுப்படுத்தி, வழி நடத்துகின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பார்ப்பனர்கள் அடைந்துள்ள ஆளுமையும்-அதிகாரமும் இந்து வாழ்வியலின்படி அளித்துள்ள மேலாதிக்கமும், தாழ்ந்த பிரிவினரை வன்முறை மூலம் வலிமையற்றவர்களாக்கியுள்ள நிலையும், பல்வகை இன்னல்களுக்கு இலக்காகியுள்ள பார்ப்பனர் அல்லாத பிரிவினர் என்றுமே நிமிர்ந்து நிற்கவோ, எதிர்த்துப் போராடவோ, பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை அச்சுறுத்தவோ கூட முடியாத நிலைக்கு இந்து நாகரிகமே காரணமாகும்.

ஒரு பார்ப்பான் வைதீகனானாலும் அல்லது வைதீகன் அல்லாதவன் ஆனாலும், புரோகிதனானாலும், குடும்ப அளவில்



இருப்பவனாயினும், கற்றவனானாலும், கல்லாதனானாலும் பார்ப்பனியப் பெருமையைத் தாங்கிப் பிடிப்பதிலே ஒவ்வொரு பார்ப்பானும் இயல்பாகவே அக்கறை கொண்டிருக்கிறான்.

எப்படி இந்தப் பார்ப்பனர்கள் வால்டேர்களாக முடியும்? பார்ப்பனர்களிடையே ஒரு வால்டேர் தோன்றுவது என்பது பார்ப்பனர்கள் சூழ்ச்சியாக உருவாக்கியுள்ள, ‘பார்ப்பனிய ஏகபோக நாகரிகத்தை’ப் பேணிக்காப்பதிலிருந்து விலகிப் போகும் ஆபத்தினைக் கொண்டதாகும். பார்ப்பனக் கற்றிவாளன் ஒருவனுடைய அறிவுத்திறமை, அவனுடைய தன்னலத்தைப் பேணிக்காக்கும் போரார்வத்துக்குப் கட்டுப்பட்டது என்பதை கவனித்தில் கொள்ளவேண்டும். நாணயம் மற்றும் நேர்மைக்கு ஏற்றவாறு தன் அறிவாற்றலைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் பார்ப்பனர்கள் மிகுந்த விழிப்புடன் இருக்கிறார்கள். நாணயத்துடன் நேர்மையுடன் சிந்திப்பதும் செயல்படுவதும் தங்களுடைய வர்க்க நலனுக்கும், தம் சுயநலனுக்கும் கேடு விளைவிக்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்.

(1948 ஆம் ஆண்டில் மேதை அம்பேத்கர் எழுதிய “தீண்டப்படாதவர்கள் யார்? அவர்கள் தீண்டப்படாதவர்களாக ஆக்கப்பட்டது ஏன்?” என்ற நூலுக்கு அம்பேத்கர் எழுதியுள்ள முன்னுரையில் உள்ள ஒரு பகுதி இது)

# மதமற்ற குழந்தை வளர்ப்பே சிறந்தது... சமீபத்திய ஆய்வு முடிவுகள்

கடவுளுக்குப் பயப்படும் தாயாக இருப்பதுதான் பிள்ளை வளர்ப்புக்கு நல்லது என்று நம்பிய காலங்கள் போய்விட்டன என்று அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வுகள் காட்டுகின்றன. இதுபற்றி, "லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்சில்" ஒரு கட்டுரை வந்திருந்தது. How Secular Family Values Stack up என்ற தலைப்பில், ஃபில் ஜுகர்மேன் (Phil Zuckerman) என்பவர் அந்தக் கட்டுரையை எழுதியிருந்தார். இவர் சமூக இயல் துறையில் பேராசிரியராக அமெரிக்காவின் Pitzer கல்லூரியில் பணியாற்றுகிறார். பல நூல்களையும் எழுதியுள்ளார்.

2010இல் டியூக் பல்கலைக்கழகம் ஆய்வொன்றை மேற்கொண்டது. கடவுள் நம்பிக்கை இல்லாமல் வளர்க்கப்படும் குழந்தைகள் இனவெறிக்கு ஆளாவதில்லை. சக மாணவர்களின் தீய பழக்கங்களால் கெட்டுப் போவதில்லை. மனதில் வஞ்சம் வைப்பதில்லை. தேசிய வெறிக்கு ஆட்படுவ தில்லை. போர் வெறியர்களாக இருக்கமாட்டார்கள். அதிகாரத்துவப் போக்கு அவர்களிடம் வராது. சகிப்புத் தன்மை உள்ளவர்களாக இருப்பார்கள் என்று பல்வேறு ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. கடவுள் நம்பிக்கையோடு வளர்க்கப்படும் குழந்தைகளைக் காட்டிலும் நம்பிக்கையில்லாதவர்களாக வளர்க்கப்படும் குழந்தைகள் பல அம்சங்களிலும் சிறந்தவர்கள் ஆகிறார்கள் என்ற ஆய்வு முடிவுகள் பழைய நம்பிக்கைகளைத் தகர்ப்பனவாக உள்ளன.

Pew Research-யின் முடிவுகள் மதமற்றவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் வளர்ந்து வருவதைக் காட்டுகிறது. (<http://www.pewforum.org/2012/10/09/nones-on-the-rise/>>). தற்போது அமெரிக்காவில் மதமற்றவர்களின் எண்ணிக்கை 23 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. 1950களில் அமெரிக்காவில் மதமில்லாதவர்களின் எண்ணிக்கை வெறும் 4 விழுக்காடு மட்டுமே. கடவுள் இல்லை என்ற போக்கு அதிகரித்து வருவதால், மதமில்லாதவகையில் வளர்க்கப்படும் குழந்தைகள் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதுபற்றி ஆய்வாளர்கள் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

ஜுகர்மேன் சொல்வதைக் கேளுங்கள் : மதம் அளிக்கின்ற பாதுகாப்பும் தர்ம சிந்தனையும் இல்லையென்றால் செயலற்றவர்களாக, நம்பிக்கையிழந்தவர்களாக, நோக்கமற்றுத் திரிபவர்களாக ஆகிப்போவார்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் அது அப்படி இல்லை. மதமற்ற குடும்பங்கள் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த அடித்தளத்தை உருவாக்கித் தருகிறார்கள். இதனைப் பேராசிரியர் வார்ன் பெங்ஸ்டன் (Vem Bengston) உறுதி செய்கிறார். வார்ன் பெங்ஸ்டன் பல தலைமுறைகளின் மாற்றம் பற்றிய நீண்டகால ஆய்வினை மேற்பார்வை செய்பவராவார். இந்த ஆய்வுதான் அமெரிக்கத் தலைமுறைகள் பற்றிய மிகப் பெரிய ஆய்வாகும். மத நம்பிக்கையற்ற குடும்பங்களின் எண் ணிக்கை அமெரிக்காவில் அதிகரித்து வருவதைக் கண்ட பெங்ஸ்டன், 2013இல் மதச்சார்பற்ற குடும்பங்கள் என்ற அம்சத்தையும் ஆய்வில் இணைத்தார். "மத நம்பிக்கையுள்ள பெற்றோர்களைக்காட்டிலும் மத நம்பிக்கையில்லாத பெற்றோர்கள் தங்களின் நேர்மை-தர்மம் பற்றிய கொள்கையில் இழை பிசகாதவர்களாக இருக்கிறார்கள்" என்று பென்ஸ்டன், ஜுகர்மேனிடம் தெரிவித்தார். "மதச்சார்பற்ற குடும்பங்களின் பெரும் பகுதியினர் ஒரு நோக்கத்துடன் கூடிய வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர்களின் இலக்குகள் தெளிவாக இருக்கின்றன. அவர்கள் நன்னெறி உணர்வுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்" என்றும் அவர் சொன்னார்.

**மதநம்பிக்கையற்றவர்களுக்கு நன்னெறி என்பது மிகவும் எளிய கோட்பாடு. மற்றவர்களைப் புரிந்துகொண்டு அதற்கு இணங்க செயல்படு என்பதுதான் அந்தக் கோட்பாடு. மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ, அதனையே நீ அவர்களுக்குச் செய் என்பது எல்லாக் காலத்துக்குமான கோட்பாடாகும். அதற்கு அதீதச் சக்தி ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கை தேவையானதாக இல்லை.**

அப்புறம் மற்றொரு ஆச்சரியமான செய்தியைக் கேளுங்கள். "அமெரிக்கச் சிறைகளில் உள்ளவர்களில் நாத்திகர்கள் அநேகமாக இல்லை என்றே சொல்ல வேண்டும். 1990களுக்குப் பின்னர் சிறைப்பட்ட நாத்திகர்கள் அநேகமாக இல்லை" என்று அமெரிக்க மத்திய அரசின் சிறைத்துறை தெரிவிக்கிறது.

இதே விஷயத்தைத்தான், கடந்த ஒரு நூற்றாண்டுக் குற்றவியல் ஆவணங்களும் காட்டுகின்றன என்று, ஜுகர்மேன் சொல்கிறார். "எந்த மதத்தையும் சாராதவர்கள் அல்லது மதத்தொடர்பு இல்லாதவர்கள் குற்றம் செய்தவர்களின் பட்டியலில் மிகக் குறைவாகத்தான் காணப்படுகிறார்கள்" என்றார் அவர்.

கூடுதல் செய்தியொன்று! மத நம்பிக்கையற்ற குழந்தைகள், மத நம்பிக்கையுள்ள குழந்தைகளைக் காட்டிலும் சிறப்பாகக் கற்பனையையும் புனைகதைகளையும் யதார்த்தத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கிறார்கள் என்று, கடந்தஆண்டு பி.பி.சி. (B.B.C.) வெளி

யிட்ட அறிக்கை <http://www.bbc.com/new/blogs-echochambers-28537149> குறிப்பிடுகிறது. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் ஆய்வின் இணைப்பையும் அளித்துள்ளது. <http://www.bu.edu/learninglab/files/2012/05/corriveau-chen-harris-in-press.pdf>>. இந்த ஆய்வை நடத்தியது போஸ்டன் பல்கலைக்கழகம் ஆகும்.

ஆய்வின்போது கற்பனைக் கதைகளை அனைத்து மாணவர்களையும் படிக்க வைத்தனர். பின்னர், விசாரித்த போது மதநம்பிக்கையுள்ளவர்களால் வளர்க்கப்பட்ட குழந்தைகள் அந்தக் கற்பனைகள் அனைத்தும் உண்மை என்று நம்பினர். ஆனால், மதம் சாராதவர்கள் வளர்த்த குழந்தைகள் இவையெல்லாம் கற்பனை என்று தெளிவாகச் சொன்னார்கள்.

**மதச்சார்புள்ளவர்களின் குழந்தைகள்ஏன் கற்பனைக் கதைகளை யதார்த்தம் என்று குழப்பிக் கொள்கிறார்கள்? ஏனென்றால், குழந்தை களின் ஆய்வு உணர்வை மதம் குழப்பிவிடுவதால் அவர்களால் கற்பனையையும் யதார்த்தத்தையும் பிரித்தறிய முடியவில்லை.**

**அமெரிக்காவை எடுத்ததற்கெல்லாம் உதாரணம் காட்டிப் பின்பற்றுபவர்கள், இந்த ஆய்வுகள் பற்றி என்ன சொல்வார்கள் என்று தெரியவில்லை.**

(- நன்றி : ''சுற்றுச்சூழல் புதிய கல்வி'', அக்டோபர், 2015)

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### ச.அரசுமணிமேகலை-கு.சதீஷ்குமார்

புலவர் தங்கசங்கர பாண்டியன், மல்லிகா ஆகியோரின் மகள் ச.அரசு மணிமேகலை, ஊரப்பாக்கம் கு.குருமூர்த்தி-பத்மாவதி இணையரின் மகன் யுவன் கு.சதீஷ்குமார் ஆகியோருக்குமான திருமணம் 13.11.2015 அன்று பல்லாவரம் ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள கன்டோன்மண்ட் கழகத் திருமண மாளிகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### அருண்குமார் - அபிராமி

சென்னை இராயபுரம் காசித்தோட்டம் நினைவில் வாழும் பி.ஆர்.செல்வராஜ் - எஸ்.ஸ்டெல்லா இணையரின் மூத்த புதல்வன் எஸ்.அருண்குமார், வேலூர் மாவட்டம் வேப்பூர் வி.பி.தேவன்-டி.வசந்தி இணையரின் மகள் டி.அபிராமி ஆகியோரின் திருமணம் 7-12-2015 அன்று மாலை இராயபுரம் காசித் தோட்டத்தில் அமைந்துள்ள புனித குழந்தை தெரசம்மாள் தேவாலயத்தில் பங்குத் தந்தை அருட்பணி ஜேக்கப் ஆல்பர்ட் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

## செட்டிநாட்டு அரசகுடும்பத்தைச் சேர்ந்த மு.அ.மு.இராமசாமி மறைந்தார்!



செட்டிநாடடு அரசர் எனப் போற்றப்பட்டவர் மறைந்த இராசா அண்ணாமலைச் செட்டியார்.

அவர் பர்மாவில் திரட்டிய செல்வத்தைக் கொண்டு 1920 களில் சிதம்பரம் ஆறுமுகப்படையாட்சி மற்றும் உள்ள ஏழைகளிடமிருந்து 400 ஏக்கர் நிலத்தை வாங்கி, அங்கே மீனாட்சி கல்லூரியை நிறுவினார். அதுவே அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக 1929இல் வளர்ந்தது.

தமிழ்மொழி, தமிழ் இசை வளர்ச்சிக்கு அப்பல்கலைக் கழகம் பெரும் பங்கு ஆற்றியுள்ளது.

தமிழிசை இயக்க வளர்ச்சியை அண்ணாமலை அரசர் முன்னிலையில் நின்றார். அவரும் அவருடைய மகன்களுள் ஒருவரான மு.அ.முத்தய்யா செட்டியாரும் நீதிக்கட்சியின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர்கள். தந்தை பெரியாரிடம் அன்பு பாராட்டியவர்கள்.

1940 முதல் 1960 வரை காங்கிரசு, பொதுவுடைமை, திராவிடர் இயக்கச் செயல்பாடுகளில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் பேரீடுபாடு கொண்டிருந்தனர் என்பது ஓர் உண்மை.

1938 இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு மு.அ.முத்தய்யா செட்டியார் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அவருடைய மறைவுக்குப்பின், செட்டிநாட்டு அரச குடும்பத்தின் தலைவராக விளங்கிய மு.அ.மு. இராமசாமி அவர்கள் தம் 85 ஆம் அகவையில் 2-12-2015 அன்று மறைவுற்றார். அன்னாரின் இறுதி நிகழ்ச்சி 6-12-2015 இல் நடைபெற்றது. அன்னாரை இழந்து வருந்தும் செட்டிநாட்டுக் குடும்பத்தாருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**- ஆசிரியர் குழு**

# தமிழ்நாட்டின் நீர் பற்றாக்குறை

இந்திய மக்கள் தொகையில் 7 சதவீதம் மக்களைக் கொண்டது தமிழ்நாடு. ஆனால், இந்திய நீர்வளத்தில் தமிழ்நாடு பெறுவது வெறும் 3 சதவீதம் மட்டுமே. இதுவே நாம் நீர் பற்றாக்குறையில் இருக்கிறோம் என்பதற்கான எடுத்துக்காட்டு. அதோடு, தமிழ்நாட்டின் மொத்த நீர்வளமும் மழையை நம்பியே இருக்கிறது. தமிழகத்தின் உட்பகுதியில் ஆண்டுக்கு சராசரியாக 848 மி.மீ. முதல் 946 மி.மீ. வரை மழை பொழிகிறது. மலைப் பிரதேசங்களிலும், கடற்கரை சமவெளியிலும் 1,666 மி.மீ. வரை மழை பெய்கிறது. இந்த மழைகளையும் கொண்டு வந்து சேர்ப்பது இரண்டு பருவமழைகள் தான்.

**வடகிழக்குப் பருவமழை**

இவைகள்தான் தமிழகத்திற்குப் பெரும்பங்கு நீரைக் கொண்டுவந்து சேர்க்கின்றன. ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்யும் தென்மேற்குப் பருவமழையின் புண்ணியத்தாலும், அக்டோபர் முதல் திசம்பர் வரை பெய்யும் வடகிழக்குப் பருவ மழையின் கருணையாலும் தான் தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கிறது.

இதிலும் அதிக நீரைத் தருவது வடகிழக்குப் பருவமழைதான். அதாவது, 46 சதவீதம். அதற்கு அடுத்தபடியாக தென்மேற்குப் பருவமழை 35 சதவீதத்தையும், கோடை மழை 14 சதவீதத்தையும், குளிர்கால மழை 5 சதவீதத்தையும் கொடுக்கிறது.

**நிலமேற்பரப்பு நீர்**

இப்படி மழை மூலமும், மற்ற மாநிலங்கள் மூலமும் நமக்குக் கிடைக்கும் நீரை 'நிலமேற்பரப்பு நீர்' என்கிறோம். இது நம்மிடம் 24,160 மில்லியன் கன மீட்டர் இருக்கிறது. இதோடு நமது நிலத்தடி நீரையும் சேர்த்தால், தமிழகத்தின் மொத்த நீர் வளம் 46,540 மில்லியன் கன மீட்டராகும். இதுதான் நமது நீர்ச்செல்வம். இதைக் கொண்டுதான் நமது அனைத்து நீர்த்தேவைகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும். நமக்கு இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை என்னவென்றால், நிலமேற்பரப்பு நீரைச் சேமிப்பதுதான். இந்த நீரைச் சேமித்து ஒரு இடத்தில் தேக்கினால்தான் நிலத்தடி நீரை உயர்த்த முடியும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 1960களிலேயே நிலமேற்பரப்பு நீரில் 95 சதவீதத்தைப் பயன்படுத்திப் பழகிவிட்டோம். அதனால் நம்மால் நீரை சேமிக்க முடியவில்லை.

**கிராமங்களிலும் ஆழ்துளைக் கிணறு**

அதற்கு மேல் நீர்த்தேவை என்ற நிலை வந்தபோது, பூமியைத் துளையிடத் துவங்கினோம். 'ஆழ்துளைக் கிணறு' என்ற புதிய தொழில்நுட்பத்தில் நிலத்தடி நீரை முடிந்தவரை மொத்தமாக உறிஞ்சி னோம். இதிலும் இயற்கை நமக்குத் துணை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டின் நிலத்தடி பரப்பை எடுத்துக் கொண்டால் அதில் 73.4 சதவீதம் கடினமான பாறைகள் கொண்டது.

**அதனால் நிலமேற்பரப்பு நீர் பூமிக்குள் ஊடுருவி நிலத்தடி நீராக மாறுவது அத்தனைச் சுலபமில்லை. ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பூமித்தாய் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து வைத்திருந்த நீரைத்தான் இப்போது மொத்தமாக உறிஞ்சிக் கொண்டிருக் கிறோம். இதுவும் கொஞ்ச நாளைக்குத்தான். அதன் பிறகு நாம் தண்ணீருக்குத் தவிக்க நேரிடும் அபாயம் உள்ளது.**

**("தினத்தந்தி", 16-12-2015)**

# இடைமறித்துத் தாக்கும் ஏவுகணைப் பாவலர்

- கவிஞர் **த.பழமலய்**

பாவலர் வையவனுடைய அண்மைக் காலக் கவிதைகள் ஒரு தொகுதியாகச் "சதுரங்கக் காய்கள்" என்னும் பெயரில் வெளிவந்துள்ளது(2015). நெசவுக் குடில் வெளியீடு. நான்காவது நெசவு. பயிற்சியும் பட்டறிவும் பாங்குற வெளிப்பட்டுள்ளது.

வையவனுக்குத் தமிழன் தன் உடுக்கையை இழப்பது பற்றியும், அது பறிபோவது பற்றியும் தீராத கவலை. இடுக்கண் களைய எப்போதும் முன் நிற்பவர்.

படையலில், தன்னுடைய தாயும் தந்தையும் தன்னை எழுதி, வெளியிட்டு அழகு பார்த்துக்கொண்டிருப்பவர்கள் என்னும் குறிப்புதான் எத்துணை அழகு! என் கவிதைக் காவலர் என எழுதி, எனக்குக் கலை வழங்கியுள்ளார். உண்மையில், நான் வையவன் கவிதைக்கு ஆர்வலர். வை என்றால் கூர்மை. வையவன் கூர்மையானவரும் கூட.

அய்யா வே.ஆனைமுத்து, கவிஞர் தமிழேந்தி அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

முப்பத்தெட்டு கவிதைகள். அய்யா ஆனைமுத்துவைப் போலவே ஒரே மூச்சில் ஐந்து மணி நேரத்தில், நானும் படித்து முடித்தேன். பொறுப்புள்ள பாவலரைப் பொருட்படுத்தி அவர் பாக்களைப் படித்துப் பயன்பெற எத்தனை மணிகள் ஒதுக்கினாலும் தகும்.

வையவன் வரம், பேறு போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார். ஆனாலும் இவருடைய, இடி முழக்கத்தின் அடிமுழக்கம் எதையும் கேள்விக்கு உட்படுத்துவதே. சிறு தெய்வங்களையும், பெரு தெய்வங்களையும் பற்றிப் பேசும்போது, இறையன்பர்களை, அறையில் அடைந்து கிடக்கும் கல்லுச் சாமிகளுக்கு அர்ச்சனை செய்யும் அய்யரின் மூஞ்சிகளைத் தவிர வேறென்ன தெரியப் போகிறது என்று கேட்கிறார். நன்றாகக் கேட்கிறார்!

பாவலருக்குப் போலிகளாய் வலம்வரும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள்......என்போர் மீது கோபம், கடுங்கோபம். அஃறிணை உயிர்கள் தவறு செய்யத் தெரியாதனவாய் இருக்கையில், உயர்திணை உயிர்கள் ஊழலில் திளைக்கலாமா? என்பதே பாவலரின் கேள்வி.

பாவலர் வையவன், உலகம், உலகமயம் என வணிகமயமாகி வருவதை, நெருங்கி உணர்கிறார். நெஞ்சம் குலைகிறார்!

கல்வி, வேலைக்கா? வாழ்க்கைக்கா? தனியார் பல்கலைக் கழகங்களா? கடைகளா? வளாகத் தேர்வு என்னும் வசீகரம், ஒரு மாணவனை வாழ்க்கைக்கு ஆளாக்காமல் வாக்களிக்க மட்டுமா ஆளாக்குவது? இலவசங்களின் நோக்கும் போக்கும் வாக்கு வங்கியே ஒழிய...... வளமார் அரசியல் கேடர்களின் கூலிப் படையாயினர் வாக்காளப் பெருமக்கள்.

இந்தக் கொடுமைகளின் புழுக்கத்திலிருந்து வெளிவருவது என்பது, வாரிசுகளுக்காக வாழாமல் மக்களுக்காகவே வாழ்ந்தவர்களைப் பற்றி சற்றுச் சிந்திப்பதாக இருக்கிறது. வையவன், தந்தை பெரியார், பச்சைத் தமிழர் காமராசர், கருப்பினக் காவலர் மண்டேலா, பெரியார்தாசன் (அப்துல்லா) ஆகியோரை நினைவூட்டுகிறார்.

ஏர் என்பது நிலப்பெண்ணுக்குத் தலைவாரிவிடும் ஒற்றைப்பல் சீப்பு. காடுகளின் மொழி அடர்த்தியானது. எல்லாரையும் தவிக்கவிட்டுத் தலைமறிவாயிருக்கிறது தண்ணீர்.......இப்படி எல்லாம் நயமாகச் சொல்லத் தெரிந்தவர்தான் வையவன். ஆனால், அவருக்கு இவற்றுக்கு எல்லாம் நேரம் இல்லை.

வீட்டு விட்டத்தின் மூலைகளில் கூடுகட்டிக் குடியிருந்த சிட்டுக் குருவிகள் நினைவு வட்டத்தில் சிறகடிப்பனவாகி விட்டனவே! மொழிமானம் என்பதெல்லாம் மொழி வெறியாம். மொழி என்பது வெறும் ஊடகமாம்

கற்பும், நட்பும், சான்றாண்மையும் விலைபொருள்கள் ஆயின. நண்பர்களாய்க் கூடித் தொழில் தொடங்கியவர்கள் பகைவர்களாய்ப் பிரிகிறார்கள். கடன் கேட்கும்போது இருந்த முகம், திருப்பிக் கொடுக்கும்போது இல்லை. பரவாயில்லை, பாவலருக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்!

மனிதமயமாக வேண்டிய நட்புறவு வணிக மயமாகிப் போனதால் உலகமயமானது வஞ்சமும் வயிற்றெரிச்சலும். அரசனைக் காப்பாற்றும் இந்த ஆட்டத்தில் மக்களைக் காப்பாற்றுவது குறித்த அக்கறையோ கவலையோ அறவே இல்லை. அவற்றுக்குத் (சதுரங்கக் காய்களுக்கு) தெரிந்ததெல்லாம் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொள்வதுதான்.

இத்தனைக்கும் இடையில் மண்ணில் புரட்சி செய்யும் மாமனிதர்கள் நமக்கு வேண்டும்.

அச்சுறுத்தும் வாழ்க்கையின் இருண்ட பக்கங்கள், வாசிப்பால் எவ்வளவோ வெளிச்சமடைகின்றன. பாவலர் வையவன், தன் எழுத்துகளைப் படிப்பவர்களை ஏமாற்றவில்லை. இந்தத் தொகுதியின் பக்கங்கள் இந்தப் பணியைத்தான் செய்கின்றன.

அவர்களே...! அவர்களே...! என்று ஒரு நீண்ட பா. விழுந்து விழுந்து சிரிக்கலாம்! விலா நோகச் சிரிக்கலாம்! வேதனையுடன் சிரிக்கலாம்!

# திருவாரூர் கே.தங்கராசு அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல்



தந்தை பெரியாரின் நன்மதிப்பைப் பெற்றவரும் பெரியாரின் கொள்கைப் பரப்புரையில் ஈடற்றவராக விளங்கியவருமான திருவாரூர் கே.தங்கராசு அவர்கள் 5-1-2014 இல் மறைவுற்றார்.

அன்னாரின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி, 5-1-2016 செவ்வாய் மாலை 4 மணிக்கு, சென்னை, ராசா அண்ணாமலைபுரம், மூன்றாம் முதன்மைச்சாலை எண்.13இல் (பழைய எண்.7) அவரது இல்லத்தில் நடைபெறும்.

பெரியார் அன்பர்களும், தமிழினப் பெருமக்களும் வருகைதர வேண்டுகிறோம்.

- திருவாரூர் **கே.தங்கராசு** குடும்பத்தினர்

---



# "அமுதசுரபி" ஆசிரியர் சு.விக்கிரமன் அவர்கள் மறைந்தார்!

திருச்சிராப்பள்ளியில் 1928இல் பிறந்தவர் விக்கிரமன் என்கிற சு.வேம்பு அவர்கள். 1949 முதல் "அமுதசுரபி" இதழில் பணியாற்றினார். 52 ஆண்டுகள் அவ்விதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு "இலக்கிய பீடம்" என்னும் திங்கள் இதழை நடத்தினார்.

முற்போக்கான சிந்தனை கொண்ட அவர், தம் மக்கள் அய்வருள் இருவருக்கு சாதி மறுப்புத் திருமணம் செய்து வைத்தார்.

அப்பெருமகனார் 1-12-2015 செவ்வாய் அன்று பிற்பகல் 2.45 மணிக்கு மறைவுற்றார். 2-12-2015 புதனன்று இறுதி நிகழ்ச்சி நடந்தது. அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் துணைவியார் இராசலெட்சுமி மற்றும் மக்கள் அய்வருக்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

- ஆசிரியர் குழு

# பெருமத்தூர் "கவிஞர் சீராளன்" மறைந்தார்



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பெருமத்தூரில் 5.1.1934ல் பிறந்தவர் செல்லமுத்து (எ) சீராளன், பெரம்பலூர் "ஹேன்ஸ்ரோவர்" என்கிற கிருத்துவத் துறவியால் வளர்க்கப்பட்டு அவர்கள் மூலம் நன்கு கல்வி பயின்று இடைநிலை தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கவிஞராக, எழுத்தாளராக, நாடக நடிகராக, கதாசிரியராக, பேச்சாளராக தம்மை உயர்த்திக் கொண்டவர். "கிறித்துவக் கிராமியப் பாடல்கள்", "கவிதை யில் கல்வி", என்ற நூல்களையும் வெளியிட்டவர்.

"டாக்டர் அம்பேத்கர் பெல்லோஷீப் விருது, வேத நாயகம் சாஸ்திரியார் விருது, திருவள்ளுவர் விருது, இசைப் பேராசிரியர், வீ.ப.கா.சுந்தரனார் விருது என பல புருதுகளைப் பெற்றவர். "சிந்தனையாளன்" போன்ற பல இதழ்களில் கவிதை எழுதியவர். பெரியார்-அம்பேத்கர் கொள்கையாளரும், நல்ல சமூகச் சிந்தனையாளருமான கவிஞர் சீராளன் அவர்கள் உடல்நலக்குறைவால் பெரம்பலூரில் தன் மகன் இல்லத்தில் 20.11.2015 அன்று மறைவுற்றார்.

சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பாக அவரது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- செய்தி : திருச்சி **ந.கருணாகரன்**

# சூலூர் பாவேந்தர் பேரவைத் தோழர்கள் நன்கொடை

| | | |
|---|---|---|
| 1. | புலவர் செந்தலை ந.கவுதமன்-உலகநாயகி வாழ்விணையர், சூலூர் | 1,000 |
| 2. | இரா.பன்னீர்செலவம்-தமிழ்ச்செல்வி வாழ்விணயர், சூலூர் | 500 |
| 3. | கோவை கி.சிவசண்முகம் - சரசுவதி வாழ்விணையர் | 1,000 |

# திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், சேலத்தில் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் மக்களைப் பிளவுபடுத்தும் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடு வீச்சுடன் நடத்தப்பட்டு வருகிறது. ஈரோடு, சென்னை மாநகரங்களை அடுத்து 19.12.2015 காரிக்கிழமை சேலம் நேரு கலையரங்கில் முற்பகல் 10 மணியளவில் தபோல்கர்-பன்சாரே-கல்புர்கி நினைவரங்கில் கருத்தரங்கம் தொடங்கிற்று. எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனை நெறியாளராய்க் கொண்ட இந்த அமர்வில் அணுசக்தி எதிர்ப்பு மக்கள் இயக்கத் தோழர் சுப.உதயகுமார், ம.தி.மு.க. தோழர் வந்தியத்தேவன், மா.பெ.பொ.க. தோழர் தமிழேந்தி, திராவிடர் விடுதலைக் கழகப் பரப்புரைச் செயலாளர் தோழர் பால்.பிரபாகரன், தோழர் விடுதலை க.இராசேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்ற னர். கருத்தரங்கின் தொடக்க நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக்குழுவினர் எழுச்சிப்பாடல்கள் இசைத்தனர். பிற்பகல் 'பாஜக ஆட்சியில் பெரிதும் வளர்வது பார்ப்பனியமா? பெருமுதலாளியமா? என்கிற தலைப்பில் நடைபெற்ற பட்டி மன்றத்திற்குப் புலவர் ந.செந்தலைகவுதமன் நடுவர் பொறுப் பேற்றார். முனைவர் பன்னீர்செல்வி, சீனி விடுதலை அரசு உள்ளிட்ட தோழர்கள் இதில் பங்கேற்றனர்.

மாலை 6 மணியளவில் சேலம் போஸ் திடலில் நடைபெற்ற திறந்தவெளி மாநாட்டிற்குத் தோழர் டைகர்பாலன் தலைமை ஏற்றார். தி.வி.க. பொதுச்செயலாளர் தோழர் க.இராசேந்திரன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். நிகழ்வில் தமிழ்நாடு மக்கள் கட்சித் தலைவர் மீ.த.பாண்டியன், ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தோழர் இரா.அதியமான் மனிதநேய மக்கள்கட்சித் தோழர் ஏ.அஸ்லம்பாஷா ச.ம.உ. ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக தி.வி.க.தலைவர் தோழர் கொளத்தூர் தா.செ.மணி நிறைவுரையாற்றினார். திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

முன்னதாகச் சென்னையில் பெய்த பெருமழையையும் பொருட்படுத்தாமல் மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்ட பத்தில் 1-12-2015 அன்று நடைபெற்ற மாநாட்டில் மா.பெ.பொ.க. சார்பில் தோழர் வாலாசா வல்லவன் பங்கேற்றார்.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சனவரி-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **மரு.அ.பொ.ஜோதிநாதன்** | வேலூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **எல். நல்லசாமி** | கன்னஞ்குறிச்சி சேலம் | 500/- |
| **பூங்கோதை ஆனையப்பன்** | கன்னஞ்குறிச்சி சேலம் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கே. கோவிந்தராசு** | கன்னஞ்குறிச்சி சேலம் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி - 2016

| | | | |
|---|---|---|---|
| முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்** | சென்னக்குணம் | .... | 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119